IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA

M z lwf i f 2012



# வளருகின்றோம்

சிறந்ததொரு பாதையில்

# பொருளடக்கம்

ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 6 | தலைவியின் கூற்று 8 | பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 10 |
சபையின் அங்கத்தினர்கள் 14 | சபையின் அங்கத்தினர்களின் விபரத்திரட்டு 15 | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 17 |
ஊழியர் குழாம் 18 | பொதுவான மீளாய்வு 22 |புள்ளி விபர மீளாய்வு 27 | தொழிற்பாட்டு மீளாய்வு 54 |
நிதி நிலமையின் கூற்று 70 | முழுமையான வருமானக் கூற்று 71 | காசுப்பாய்ச்சல் கூற்று 72 |
காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று 73 | கணக்கீட்டுக் கொள்கைகள் 74 |
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 76 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 82 |
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களுக்கான சபையின் பதிலுரைகள் 85 |
பின்னிணைப்பு I 89 | பின்னிணைப்பு II 90 | அருஞ்சொல் விளக்கம் 92 |



# வளருகின்றோம்

## சிறந்ததொரு பாதையில்

கடந்த ஆண்டுகளின்போது, ஆண்டு தோறும் எமது நிருவனம் தென் ஆசியாவின் ஒழுங்கு விதிகளுக்கான ஒரு குறியீடாக இருக்கும் பாரிய உயர்வுகளை நோக்கி எமது பயணம் நகருவதை அவதானிக்க முடிந்தது. இந்த தொடர்ச்சியான முன்னேற்றம் அளித்த உற்சாகத்தின் காரணமாக, காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாப்பதில் எமது வேர்களில் ஆழமான மதிப்பீடுகளை உறுதியாக பதியமிடப்படுவதை உருவாக்க முடிந்தது.
விவேகமான மேற்பார்வையினூடாக, காப்புறுதி சந்தையில், ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, உண்மைத் தன்மை மற்றும் திறமைகளை பேணுவதில் அசைவுறாதவாறு உறுதியாக நிலை நிற்கும் அதே நேரத்தில் ஒழுங்கமைப்பு விதிகள் ஊடாக காப்புறுதி தொழிலின் விருத்திக்கும் நாங்கள் உதவுவோம்.
பொதுமக்களின் நம்பிக்கையை மேப்படுத்தும் சுற்றாடல் ஒன்றை நாங்கள் தொடர்ந்தும் வளர்ப்போம். அத்துடன் தீவெங்கும் காப்புறுதி தொழில் பரவலாக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் வழங்குவோம். அவ்வாறே புவியியல் ரீதியாகவம் நிதியிடலை உள்ளடக்கியதாகவும் முழுமையான ஆதரவையும் வழங்குவோம்.

# தொலை நோக்கு

தென் ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் அடையாளக் குறியீடாக இருப்பது

# பணி

விவேகமான ஒழுங்கமைப்புகள், மேற்பார்வைகள் மற்றும் காப்புறுதி தொழிலின் அபிவிருத்திக்கு உதவுவது என்பவையூடாக காப்புறுதி வைப்பாளர்களை; பாதுகாப்பது



# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- 22 காப்புறுதி கம்பனிகள்
- 54 காப்புறுதி தரகர்கள்
- 36,801 காப்புறுதி முகவர்கள்
- இடர் அடிப்படையிலான மூலதனத்திற்கு வீதி பரிசோதனையை ஆரம்பித்தல்
- காப்புறுயாளர்களினால் கொடுக்கப்படும் பதிவு செய்தல் கட்டணங்களினதும் வருடாந்த கட்டணங்களினதும் அதிகரிப்பு
- கடன் தீர் எல்லை (பொது & நீண்டகாலம்) விதிமுறைகளில் மேலும் திருத்தங்கள்
- காப்புறுதி குறித்த விழிப்புணர்வு 400 கிராம சேவகர் பிரிவுகளை எய்தியது

## காப்புறுதி தொழிலின் செயலாற்றல்

| | 2012 | 2011 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ. பில்லியன்) | 87.15 | 78.49 | 11.0 |
| மொத்த சொத்துகள் (ரூ. பில்லியன்) | 301.92 | 261.41 | 15.5 |
| மொ.உ.உ.யின் சதவீதத்தில் % ஊடுறுவல் | 1.15 | 1.20 | (4.2) |
| காப்புறுதி அடர்த்தி (ரூ) | 4,287.28 | 3,761.11 | 14.0 |

## சபையின் செயலாற்றல்

| | 2012 | 2011 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ. பில்) | 1.62 | 1.28 | 26.6 |
| “செஸ்” வருமானம் (ரூ. மில்) | 236.53 | 216.84 | 9.1 |
| வருடாந்த கட்டணம் (ரூ. மில்லியன்) | 61.04 | 34.58 | 76.5 |



# ரூபா 301.92 பில்லியன்

**காப்புறுதி தொழிலின் மொத்த சொத்துகள்**

# ரூபா 87.15 பில்லியன்

**காப்புறுதி தொழிலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**

# தலைவியின் செய்தி



2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு அங்கமாகிய இலங்கை காப்புறுதி சபையின் (சபை) ஆண்டறிக்கையின் வெளியீட்டுடன் எனது செய்தியையும் அளிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

காப்புறுதி கண்காணிப்பாளர்களின் சர்வதேச சங்கத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு, காப்புறுதி வைப்பாளர்கள், பயன் பெறுநர்கள் கோரிக்கையாளர்கள் ஆகியோரின் ஈடுபாடுகளுக்கு நன்மையளிப்பதற்கும், பாதுகாப்பளிப்பதற்கும், நிதியியல் ஒழுங்கமைப்பை நிலையாக வைத்திருப்பதற்கும் ஏற்றவாறான நேர்மையும், பாதுகாப்பும் மற்றும் உறுதியானதுமான காப்புறுதித்துறை ஒன்றை பேணுவதற்கு வலுவான ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பொன்று அத்தியாவசியமானதாகும்.

அதற்கமைய, போட்டித்தன்மையுடைதாக விருக்கும் அதே நேரம், அனைத்து பங்குடமையாளர்களின் நம்பகத்தன்மையையும் தக்கவைத்தக் கொண்டு, நேர்மையுடனும் திறமையாகவும் காப்புறுதி தொழிலை வெளிப்படுத்துவதை உறுதி செய்வது சபையின் மூலோபாய நோக்கங்களில் ஒன்றாகவுள்ளது.

## செயலாற்றல்கள்

2012 இன் போது சபையுடன் பதிவு செய்து கொண்ட 21 காப்புறுதி கம்பனிகள் இலங்கையில் செயற்பட்டன. இவற்றில் மூன்று கம்பனிகள் மட்டுமே நீண்டகால (ஆயுள்) காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டன. காப்புறுதி வியாபாரத்தில் ஆயுள் காப்புறுதி அல்லாத வியாபாரத்தில், ஆறு கம்பனிகள் மட்டும் ஈடுபட்டன. மிகுதியான பன்னிரெண்டு (12) கம்பனிகளும் ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டன. 2011 இன் காப்புறுதி தொழில் சட்டத்தின் ஒழுங்கமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களின் தேவைப்பாட்டிற்கு அமைவாக, இந்தக் கலவையான காப்புறுதி கம்பனிகள் 2015 இற்குள் வெவ்வேறாக்கப்பட்டு இரண்டு வேறுபட்ட நிறுவனங்களாக வேண்டும் எனும் தேவைப்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

காப்புறுதி வழங்கும் சங்கிலி 54 காப்புறுதி தரகர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குகின்றது. அவ்வாறே ஏறத்தாழ 37,000 முகவர்கள் காப்புறுதி கம்பனிகளை பிரதிநிதித்துவுப்படுத்துகின்றன. 2012இன் போது 11 தரகர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் சில விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

2012 இல் காப்புறுதி ஊடுறுவல் 1.2% ஆக காணப்பட்டதோடு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் காப்புறுதி வர்த்தகத்தின் அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணம் 11.03% வளர்ச்சியை பதிவு செய்தது.

2011 இல் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் வளர்ச்சி ஓரளவு வீழ்ச்சியடைந்ததாயினும் 2012இல் படிப்படியாக அதிகரித்தது. இதற்கு

> 2012 இல் நாங்கள் சந்திக்க வேண்டியிருந்த மிகப் பெரிய சவால், இடர் அடிப்படையிலான மூலதன (RBC) மாதிரியை அமுலாக்கம் செய்வதாக இருந்தது.

சபையினாலும் அவ்வாறே காப்புறுதி தொழிலினாலும் மேற்கொள்ளப்பட்ட விரிவான விழிப்புணர்வை நிகழ்ச்சி திட்டங்களினூடாக காப்புறுதியின் விழிப் புணர்வு மட்டங்கள் உயர்வடைந்தது ஒரு முக்கிய காரணமாகும்.

நிதியியல் துறையின் மொத்த சொத்துக் களின் 3% அளவில் காப்புறுதித்துறை கணக்கிடப்பட்டது. எவ்வாறாயினும் மேலோட்டமாக பார்க்கும் பொழுது காப்புறுதி தொழிலின் வளர்ச்சியின் ஆதிக்கம் மேல்நோக்கிய போக்கினை கொண்டதாக திருப்தியளிப்பதாக இருந்தது.

### சவால்கள்

குறிப்பிட்ட ஒரு சில தீர்மானங்களையும் அவ்வாறே சட்ட தேவைப்பாடுகளை செயற்படுத்துவதிலும் சபைக்கு முன் அனேக சவால்கள் காணப்படுகின்றன. 2011 இன் ஒழுங்கமைப்பு காப்புறுதி தொழில் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களில் 2015ற்குள் கலவையான காப்புறுதி கம்பனிகள் வெவ்வேறாக்கப்பட்டு தனித்தனி நிறுவனங்களாக்கப்படுவதும் அத்துடன் 2016இற்குள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பங்குபரிவர்த்தனையில் காப்புறுதி கம்பனிகள் பட்டியலிடப்படவும் வேண்டி உள்ளன.

பிரித்துவைத்தலும் பட்டியலிடலும் இரு வேறுபட்ட அம்சங்களாயினும் முக்கியமாக கலவை கம்பனிகளுடன் அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவையாக உள்ளன. இந்த நடைமுறைகளை பின்பற்றுவதற்கு கம்பனிகளுக்கு போதுமான அளவில் கால அவகாசம் வழங்கப்பட்டது. உதாரணமாக பிரித்துவைத்தலுக்கு நான்கு வருடங்களும் பட்டியலிடுவதற்கு ஐந்து வருடங்களும் அளிக்கப்பட்டன.

12 கலவை கம்பனிகளில் ஒரு சில கம்பனிகள் இம்மாற்றத்தை சுமூகமாகவும் திறமையாகவும் கையாள்வது சவாலான ஒரு விடயம் என அறிந்து கொண்டன. வரியிடல் சிக்கல்கள், சொத்து மாற்றங்கள், சொத்துகளை பெறுமதியிடல் போன்றவற்றிற்கு அமைவாக பிரித்து வைக்கும் செயன்முறை சிக்கலானதாக காணப்பட்டன. இவ்விடயங்களை தீர்ப் பதற்கு அவசியமான அனைத்து நட வடிக்கைகளையும் சபை எடுத்துள்ள துடன், நிதியும் திட்டமிடலும் அமைச்சிட மிருந்து அங்கீகாரத்திற்காகவும் காத்திருக் கின்றது.

காப்புறுதி வைப்பாளர்கள் மீது நேரடி யான தாக்கத்தை ஏற்படுத்தும் மூலதன கட்டமைப்பு மற்றும் கம்பனியின் ஐந்தொகை என்பவற்றுடன் வெளிப்படைத் தன்மை குறித்து, ஒழுங்கமைப்பாளர் என்ற வகையில் சபை அதிக அக்கறையும் கொண்டுள்ளது. நிறுவன முகவர்களின் நியமனம் தொடர்பான விதிகளை இறுதி முடிவிற்கு கொண்டுவருவதற்கு பங்குடமையாளர்கள் அனைவரிடமிருந்தும் சம்மதத்தை இலகுவாக பெற முடி யாதிருந்தது மற்றுமொரு விடயமாகும். எனவே, நிருவனங்களை முகவர்களாக செயற்பட அனுமதித்ததன் ஊடாக தொழிலில் ஏற்கனவே நிலவியதை சபை முறைப்படுத்தியது. அனேக விவாதங்களின் பின்னர், இவ்விதிகளை பூர்த்தி செய்ய சபையினால் இயலுமாகவிருந்தது. சட்ட வரைஞரின் சம்மதத்துடன் இது மிக விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

2012 இல் நாங்கள் சந்திக்க வேண்டியிருந்த மிகப் பெரிய சவால், இடர் அடிப்படையிலான மூலதன (RBC) மாதிரியை அமுலாக்கம் செய்வதாக இருந்தது. முன்னைய ஆண்டில் திட்ட மிடப்பட்டவாறு வீதி பரிசோதனைகள் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டன. 18 காப்புறுதி கம்பனிகள் இதில் பங்கேற்றன. 2013 இன் நடுப்பகுதியில் இவை பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளதுடன், இதன் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு வரைவு விதிகள் பூர்த்தி செய்யப்படவும் எதிர்பார்க்கப்பட்டது.

### முன்நோக்கிய செயன்முறை

சர்வதேச நற்பிரயோகங்களுடன் மேலும் இசைவாக இருப்பதை அனுமதிப்பதற்காக உள்ளூர் தொழிலை விதிகள் அடிப்படையிலான மேற்பார்வை அமைப்பிலிருந்து இடர் அடிப்படையிலான மேற்பார்வை அமைப் பாக மாற்றுவதற்கு சபை நகர்வுகளை மேற்கொள்ளும். இது தொடர்பாக சபையின் தகைமையை வலுப்படுத்தவதற்காக, உலக வங்கியூடாக FIRST நிகழ்ச்சித் திட்டமொன்றை நிதியிடுவதற்கான ஆரம்பம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் மத்தியில் காப்புறுதி பற்றிய விழிப்புணர்வை விருத்தி செய்யும் நோக்கத்துடன் நாடெங்கும் பரவலாக விழிப்புணர்வை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் செயற்படுத்துவோம். எமது காப்புறுதி வைப்பாளர்களிடமிருந்து எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகளிலிருந்து அவர்கள் மேலும் அதிகமான தகவல்களைப் பெறுகின்றனர் என்பதற்கும், தாம் கொள்வனவு செய்யும் உற்பத்திகளின் முக்கிய நிபந்தனைகள் குறித்து கவனம் செலுத்துகின்றனர் என்பதற்குமான சான்றுகளை பெற முடிகின்றது.

காப்புறுதி ஒழுங்கமைப்பாளரின் பங்களிப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய தேவையையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அச்சு, மின்னியல் ஊடகங்கள், மற்றும் தேசிய கண்காட்சிகள் போன்றவையூடாக பலவகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் மேற்கொண்ட போதும், காப்புறுதி சபை என்ற வகையில் பல தவறான அபிப்பிராயங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. எனவே, அடுத்துவரும் காலங்களில் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர் என்பதற்கு தனித்தன்மையான அடையாள மொன்றை கொடுப்பதற்கு ஏற்ற சரிப் படுத்தும் நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளும்.

காப்புறுதி தொழிலும், நிதியியல் அமைப்புகளின் ஏனைய அங்கங்களைப் போலவே, சமூக பொருளாதார நிர்ப் பந்தங்களுக்கும் உலகமயமான போக்கு களுக்கும் பதிலளிக்கக் கூடியதாக மாற்றமடைய வேண்டியுள்ளது. இவ்வா றான அபிவிருத்திகளை திறமையாக சமாளிப்பதற்கு ஒழுங்கமைப்பு முறைமை களும், பிரயோகங்களும் தொடர்ச்சியாக தரமுயர்த்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சட்டத்தினால் பாது காக்கப்படாத புதிய பகுதிகளை அடையாளம் காணும் செயன்முறையில் நாங்கள் ஈடுபட்டிருப்பதுடன், ஆர்ஐஜ சட்டத்திற்கு மேலும் திருத்தங்களை கொண்டுவருவதற்கும் தயங்கமாட்டோம்.

### முடிவுரை

எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, காப்புறுதி தொழிலில் பாரிய வளர்ச் சிக்கான வாய்ப்புகள் இலங்கையில் காணப்படுகின்றன. சந்தைப்படுத்தல் ஒரே சீராக வளர்ச்சியடைந்ததாயினும், ஊடுறுவல் மட்டம் தொடர்ந்தும் குறைவாகவே இருக்கின்றது. காப்புறுதி தொழில் இந்த வாய்ப்பை கைப்பற்றிக் கொண்டு சந்தைப் படுத்தலை மேலும் வளர்ச்சியடைய செய்ய வேண்டும்.

இறுதியாக, நிதி மற்றும் திட்மிடல் அமைச்சின் செயலாளருக்கும், அவரது இடைவிடாத வழிகாட்டலுக்கும் ஆதர விற்கும் நன்றி கூற விரும்புகின்றேன். அவ்வாறே சபையின் அங்கத்தினர்களுக்கு அவர்களின் பெறுமதிமிக்க பங்களிப்பிற்கு நன்றி கூறுகின்றேன்.

சபைக்கு தமது ஒத்துழைப்பை நல்கிய தொழிலின் பங்குடமையாளர்களுக்கு நன்றி கூற இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இறுதியாக ஆண்டு முழுவதும் அனைத்து நடவடிக்கைகளிலும் தமது கடப்பாட்டையும் வலுவான கூட்டு ஆதரவையும் நல்கியமைக்காக பணிப்பாளர் நாயகம் மற்றும் காப்புறுதி சபையின் பணிப்பாளர்கள் ஆகியோரால் வழி நடத்தப்பட்ட அர்ப்பணிப்புள்ள குழுவிற்கு எனது மனம் நிறைந்த பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



**இந்ராணி சுகததாச**
தலைவி

07 ஆகஸ்ட் 2013

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



ஒட்டு மொத்த தொழிலாற்றலுக்கான தேடலில் நாங்கள் கடந்த ஆண்டுகளின் சாதனைகள் மீது கட்டப்பட்ட மற்றுமொரு உயர்வை நோக்கி மேலே நகர முடிந்தது.

தென் ஆசியாவில், காப்புறுதி ஒழுங்கமைப்பாளர் எனும் அடையாளக் குறியீடாக இருக்க வேண்டும் என்கின்ற எமது பயணத்தில், 2012 இன் போது தற்பரிசோதனை செய்யும் செறிவான செயன்முறை ஒன்றில் சபை ஈடுபட்டது. தற்போதுள்ள கலாச்சாரம், செயன்முறைகள் மற்றும் பணியாற்றும் சுற்றாடலை வடிவமைத்தல் போன்றவற்றை மேலும் முன்னேற்றும் நோக்கத்துடன், அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கிய உள்ளக குறுக்குமுகமாக செயற்படும் கருத்திட்ட குழுக்களின் அங்கத்தினர்கள், தமது பணியின் போது, முக்கிய பெறுமதிகளை தனிப்பட்ட முறையில் கொண்டு வருவதிலும், ஆரம்ப ஸ்தாபக கருப்பொருளிற்கும் அப்பால் செல்லக்கூடிய மேலும் ஆழமானதும் உறுதியானதுமான நோக்கத்தைக் கண்டு பிடித்தனர்.

ஸ்தாபனத்திற்கு புதியதொரு தொலை நோக்கு, பணி என்பவற்றைக் கொண்ட மூலோபாய பிரமிட் ஒன்றை வடிவமைப்பதில் நாங்கள் வெற்றி பெற்றோம். நடுத்தரத்திலிருந்து நீண்டகால நோக்கங்களை அடைவதற்கான முன் னெடுப்புகளை களமிறக்கியது போலவே, உடனடி இலக்குகளை எய்துவதற்கும் சபைக்கு ஆதரவு வழங்குவதில் மூலோபாய பிரமிட் கவனம் செலுத்தியது. அத்துடன் செயற்பாட்டு நோக்கம். மற்றும் எமது புதிய தொலை நோக்கை அடைவதற்காக, தனிப்பட்டவர்களை வரிசைப்படுத்துவது தென்படக் கூடியதாக முழுமையாக நிரல்படுத்துவது முக்கியமான பெறுபேறுகளை தருகின்ற துறைகள் KRAS என்பவற்றுக்கும் உதவும் வகையில் மூலோபாய பிரமிட் அமைக்கப்பட்டது.

வெற்றிகரமாக செயற்படும் நிருவனமொன்றின் அடித்தளமாக மனிதவளம் இருப்பதனால், ஜெயிக்கின்ற கலாச்சாரமொன்றையம் பொதுப் பொறுப்பொன்றையும் சபை மீளவும் உறுதி செய்துள்ளது. அத்துடன் மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில், உள்ளக மற்றும், சர்வதேச பயிற்சிகளினுடாக பணியாட்களின் திறமையை கட்டியெழுப்புவதற்கும் மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெற்றியளிக்கும் கலாச்சாரம் ஒன்றிற்குள் சக்தி மற்றும் திறமை மிக்க தொழிலாற்றலுள்ள பயிற்றப்பட்ட பணியாட்களை கொண்டிருக்கும் எமது முக்கிய நோக்கங்களை அடியொட்டியதாக இது இருக்கும்.

புதிய தகவல் தொழில்நுட்ப கருவி அமைப்புகளை நிறுவியது மற்றும் சபையில் பிரிவுகளின் வேகக் கட்டுப்பாட்டு பகுதிகள் போன்ற திறமையான பணிமுகாமைத்துவத்திற்கான செயன் முறைகளை அறிமுகப்படுத்தியது என்பவை உற்பத்தியை அதிகரிக்க வழியமைத்தது.

## பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

"வெற்றிகரமாக செயற்படும் நிருவனமொன்றின் அடித்தளமாக மனிதவளம் இருப்பதனால், ஜெயிக்கின்ற கலாச்சாரமொன்றையம் பொதுப் பொறுப்பொன்றையும் சபை மீளவும் உறுதி செய்துள்ளது."

சபையின் நிர்வாகத்திற்கென மீள் திருத்தப்பட்ட நடைமுறைகளுக்கான கை யேட்டின் அறிமுகம், காப்புறுதி கம்பனிகளினதும் இடையீட்டாளர்களினதும் அமைவிட மேற்பார்வை கையேடு, மற்றும் முறைப்பாடுகளின் தீர்மானம் குறித்த கையேடு என்பவையாவும் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைகளாகும். இவை 2013 அளவில் பூர்த்தி செய்யப்படும் என்றும், சபையின் சக்தியையும், திறமையையும் விருத்தி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நியாயமானதும், பாதுகாப்பானதும், உறுதி யான நிலைபாடுள்ளதுமான சுற்றாடல்**

பொது மக்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய்வதற்குமான சுற்றாடலை உறுதிப்படுத்துவது சபையின் முன் னுரிமையாகவுள்ளது. சபையையும் காப்புறுதியையும் குறித்த பொது மக்களின் விழிப்புணர்வில் குறைபாடுகள் இருப்பதை கிடைத்துள்ள மீளாய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. 2011 இன் போது கிடைத்திருந்த முறைப்பாடுகளின் வகைகளை சபை பகுப்பாய்வு செய்த துடன் அவற்றை மூன்று முக்கிய பிரிவுகளாக முன்னிலைப்படுத்தியது. பிரேரணை படிவங்களின் முக்கிய விடயங்களை விளக்குவது, பிரேரணை படிவமொன்றை பூர்த்தி செய்யும் போது, பொருண்மை காரணிகள் அனைத்தையும் வெளிப்படுத்துவதை அத்தியாவசியமாக்குவது, மற்றும் காப்புறுதி காப்பீடு ஒன்றை கொள்வனவு செய்யும் போது, அதன் மூலாதாரங்கள் குறித்த விழிப்புணர்வுடன் இருப்பது, முறைப்பாடுகள் யாருக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது குறித்து, பொதுமக்களின் விழிப்புணர்வில் நிலவிய குறைப்பாடும் இவற்றுடன் தொடர்புடையதாக இருந்தது.

அதற்கமைய, கிராமிய சமுதாயத்துடன் தொடர்பாடல்களை மேற்கொண்ட குழுக் களின் ஊடாக, சபையின் பங்களிப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்த பொது மக்களின் விழிப்புணர்வை விருத்தி செய்வது, காப்புறுதி செய்வதன் முக்கியத்துவம், மற்றும் காப்புறுதியின் நன்மைகளை விளக்குவது ஆகிய எய்துகை பிரசாரங்களில் 2012 இன் போது சபை தனது முக்கிய கவனத்தை செலுத்தியது.

காப்புறுதி தொழிலின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நம்பகத் தன்மையை முன்னேற்ற வேண்டியதன் அவசியம் நன்கு உணரப்பட்டதால், மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது கிடைத்த 274 முறைப்பாடுகளை சபை விசாரணை செய்ததுடன் அவற்றில் 262 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன.

காப்புறுதி வைப்பாளர்களினதும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களினதும் நலன்களை பாதுகாக்கவேண்டிய தேவை அதி முக்கியமானதாக இருந்த போதிலும், காப்புறுதி தொழிலின் அபிவிருத்திக்கு உதவ வேண்டிய பொறுப்பும் சபைக்கு இருந்தது. மறுபுறத்தில் இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருந்தது.

காப்புறுதி தொழிலின் வளர்ச்சிக்கு உதவக்கூடியதாக ஒழுங்கமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 2012இன் போது ஏற்படுத்தப்பட்ட அத்தகைய மறுசீர மைக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் சில வற்றின் உதாரணங்களாக, பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றினால் வழங்கப்பட்ட பிணையங்களினால் ஆதரிக்கப்பட்ட சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்டவற்றின் கடன்தீர் எல்லை விதிமுறைகளின் திருத்தங்கள், கடன்தீர் எல்லையை நிர்ணயிக்கும் தேவைக்காக ஒதுக்கக்கூடிய சொத்துகளின் பத்திரங்களுக்கு, கொண்டு செல்லும் முதலீட்டு தரப்படுத்தலை ஏற்படுத்துவது, நிருவன ரீதியான முகவர்களை அங்கீகரிப்பது, மற்றும் கடன் தரப்படுத்தல் முகவர்களின் அங்கீகாரத்தை விரிவுபடுத்துவது என்பவற்றை குறிப்பிடலாம்.

இலங்கையில் நிலையான காப்புறுதி தொழில் ஒன்றிற்கு தேவையான நியாய மானதும், பாதுகாப்பானதும், உறுதி யானதும் திறமையானதுமான சுற்றாடல் ஒன்றை வழங்கும் நோக்கத்துடன், காப்புறுதி தொழில் செயற்படக் கூடிய ஒழுங்கமைப்பு வரைச் சட்டத்தை 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புகள் மேலும் பலப்படுத்தின.

சபையின் முன்னெடுப்புகளுக்கு ஆதர வாக, எதிர்காலத்தில் புத்தாக்க உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும், முக்கியமான பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் உற்பத்தி முறை விரிவாக்கப்படும் என்றும் காப்புறுதி தொழில் வாக்குறுதியளித்துள்ளது. உதாரணமாக ஓய்வூதிய உற்பத்திகள், சுகாதார காப்புறுதி காப்பீடுகள் மற்றும் காப்புறுதி ஆவணங்கள் என்பவை மூன்று மொழிகளிலும் இருக்கும் என்பதுடன், இன்னும் அதிகமான பாவனையாளர் நேயமுடையதாகவும், மிக சிறிய அச்சில் விபரங்கள் எழுதப்படுவது தவிர்க்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

2012 மே மாதத்தில் வரைபு விதியாக வெளியிடப்பட்ட இலங்கையின் இடர் அடிப்படையிலான மூலதனத்திற்கான (RBC) வரைச் சட்டத்தின் அறிமுகப் படுத்தல் கடந்த மூன்று ஆண்டுகளின் போது, விதிமுறைகள் அடிப்படையிலான

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

மேற்பார்வையிலிருந்து இடர் அடிப்படையிலான மேற்பார்வை அமைப்பிற்கு மாறுவதற்கு நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சாத்தியமான விளைவை உணர முடிந்தது. 3வது காலாண்டில் இடர் அடிப்படையிலான மூலதனம் (RBC) இற்கான வீதி பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதி இரண்டு காலாண்டுகளில் இடர் அடிப்படையிலான மூலதனம் தரவுகள் பகுப்பாய்விற்காக சபையினால் கூட்டு சேர்க்கப்பட்டன. இடர் அடிப்படையிலான மூலதனத்தின் முழுமையான அமுலாக்களுக்கு முன்னர், 2013 இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுக்கான தரவுகளுடன், இந்தத் தரவுகளும் கூட்டிணைந்து அதன் இறுதி விதிமுறைகளை நெறிப்படுத்தலுக்கு உதவும்.

### தொழிலின் செயலாற்றல்

உலக நிதி நெருக்கடியின் பின்னர் தொடர்ந்து இடம்பெறும் யுரோ வலைய நெருக்கடி, மற்றும் இலங்கையில் நிலவும் பாதகமான காலநிலை நிலைமைகளின் மத்தியிலும், 11.03% இனால் தொழிலின் ஒட்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் வளர்ச்சியடைந்தது. இதில் பொது காப்புறுதி 14.67% வளர்சியையும் நீண்டகால காப்புறுதி 6.56% வளர்ச்சியையும் பிரதிபலித்ததுடன், ஆண்டின் இதே காலப்பகுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்ததையும் காணமுடிந்தது. (2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6.4% மாக இலங்கையிலிருந்தது. ஆனால் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது, உலகின் முன்னணி காப்புறுதி சந்தையின் சராசரி வளர்ச்சி 1% மாக மட்டுமே காணப்பட்டது.

பயங்கரவாதம் மற்றும் யுத்தம் என்பவை முடிவடைந்த பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் வர்த்தக வாய்ப்புகளுக்கான கதவுகள் மீளவும் திறக்கப்பட்ட பின்னர் மேல் மாகாணத்திலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் காப்புறுதியின் அவதானம் பரவலாக்கப்பட்டது. ஏறத்தாள 40% மான பதிவு செய்யப்பட்ட காப்புறுதி முகவர்கள் மேல்மாகாணத்தில் காணப்பட்டதுடன் மேல்மாகாணத்திற்கு வெளியில் எந்தவொரு மாகாணங்களிலும் காப்புறுதி முகவர்கள் அவ்வளவாக பிரதி நிதித்துவப்படுத்தப்படவில்லை. மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில் காப்புறுதி முகவர்களாக பதிவு செய்யப்பட்டிருந்த 54 கம்பனிகளில் 38 கம்பனிகள் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் பதிவு செய்யப்பட்டிருந்தன. 16 கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. 2013 இலிருந்து பன்காசுரன்ஸ் (Banacassurance) முறைமையான மற்றும் நிறுவன ரீதியான முகவர்கள் ஆகியோர் சமூகத்தின் பெரியதொரு பிரிவினரைக் கவரக்கூடியதாகவும், ஊடுறுவலை அதிகரிக்கக் கூடியதாகவும் அவர்கள் தமது வலையமைப்பை விரிவாக்கி காப்புறுதி தொழிலை மேலும் விஸ்தரித்துக் கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும். தற்போது நாடு முழுவதும் காணப்படும் காப்புறுதி இடையீட்டாளர்களின் குறைவு, காப்புறுதி குறித்த விழிப்புணர்வையும், ஊடுறுவலையும் பாதிக்கின்றதுடன், புவியியல் ரீதியான விரிவாக்கத்தின் வளர்ச்சிக்கு சக்தியூட்டும் விடயத்தில் காப்புறுதி தொழிலுக்கு ஒரு சவாலை ஏற்படுத்துவதாகவுமுள்ளது.

2012 இன்போது 14% மாக காப்புறுதி அடர்த்தி அதிகரித்ததாயினும், ஐஅடா 314 உடன் ஒப்பிடும் போது ஆசிய நாடுகளுக்கான சராசரியான 33 மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது. காப்புறுதி ஊடுறுவலும் தொடர்ந்து குறைவாகவே காணப் பட்டதுடன், காப்புறுதி துறை மேலும் வளர்ச்சியடைவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இருந்தது. 5.8% மாக ஆசியாவின் சராசரி ஊடுறுவல் மட்டம் இருக்கும் நிலையில் இப்பிராந்தியத்தின் மிகவும் குறைவானதாக 1.2% மாக ஒட்டுமொத்த காப்புறுதி ஊடுறுவல் நிலவுகின்றது. இது விரிவாக்கத்திற்கான வாய்ப்பு மிக அதிகமாக இருப்பதை சுட்டிக் காட்டுகின்றது.

மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின்போது 15.49% இனால் காப்புறுதி துறையின் மொத்த சொத்து வளர்ச்சியடைந்ததுடன், 2008 இன் பெறுமதியுடன் ஒப்பிடும் போது கிட்டத்தட்ட இரு மடங்காக இருந்ததும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். கடந்த 5 ஆண்டுகளாக காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகளின் சராசரி வளர்ச்சி 17% மாகவிருந்தது. ஆண்டு தோறும் இத்தகைய வளர்ச்சி தென்பட்ட போதிலும், இலங்கையின் பாரிய நிதி நிறுவனங்களின் மொத்த சொத்துகளின் விநியோகத்துடன் ஒப்பிடும் போது, காப்புறுதி துறை 3.3% மான மொத்த சொத்துகளை மட்டுமே பதிவு செய்கின்றது. இது மீண்டும் முழுமையான சாத்தியம் அடைவதற்கு இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டும் என்பதையும், இலங்கையில் காப்புறுதி தொழிலின் வளர்ச்சிக்கு மேலும் அதிக இடம் உண்டு என்பதையும், சுட்டிக் காட்டுகின்றது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்த வாய்ப்புகளை அறிந்திருந்ததினால் 2012 இன் போது காப்புறுதி கம்பனிகளின் பங்கு மூலதனங்களின் முதலீட்டு நடவடிக்கைகள் அதிகரித்ததுடன், நாடெங்கிலும் காப்புறுதி கம்பனிகளின் கிளை வலையமைப்பில் விரிவாக்கமும் ஏற்பட்டது.

### எதிர்பார்ப்புகள்

பேரண்ட பொருளாதார குறிகாட்டிகள் தொடர்ந்தும் அவ்வாறே இருப்பதும், தற்போதுள்ள சந்தை போக்குகளின் அடிப்படையிலிருந்தும் காப்புறுதி தொழிலின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

2013 இல், இடர் அடிப்படையிலான மூலதனத்திற்கான வீதி பரிசோதனைகளை முடிவிற்கு கொண்டு வர நாங்கள் திட்டமிட்டிருக்கின்றதுடன் இறுதி வரைபு விதிகளை மெருகூட்டுவதன் மூலம் விதிகளின் இறுதி வரைபை வரைவதற்கு மேலும் நடவடிக்கைகளை எடுத்தோம். காப்புறுதி புள்ளி விபரங்களின் கையேடு ஒன்றின் வெளியீடு, சபையின் பணியாட்களுக்கும், காப்புறுதி தொழிலின் பங்கேற்பாளர்களுக்கும் இடர் அடிப்படையிலான மூலதனம் குறித்த மேலதிகமான பயிற்சிகள், மற்றும் காப்புறுதி தொழிலின் முறைபாடுகளை பெற்றுக் கொள்வதற்கும் காப்புறுதி தொழில் ஆவணங்களை இலத்திரனியல் அமைப்பினூடாக அளிப்பதற்கும் காப்புறுதி வைப்பாளர்களுக்கு நேர் வரிசை (on line) வசதிகள் கிடைப்பதற்கு உதவியாக புதிய தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்ட, புதியதொரு புத்தாக்க மளிக்கப்பட்ட இணையத்தள மொன்றை ஏற்படுத்துவது என்பவை 2013 இற்கென திட்டமிடப்பட்டுள்ள ஏனைய முக்கிய முன்னெடுப்புகளாகும். இவ்வாறான அபிவிருத்திகளின் விளைவாக, பாவனையாளர்களும், கம்பனிகளும், குறைவான காகித பாவனையுடன் தகவல் மற்றும் வெளிப்படுத்தல்களை வழங்குவதற்கு உதவியாக இருக்கும்.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2013 இல் மற்றுமொரு முக்கிய கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது இலங்கையின் காப்புறுதி தொழிலின் ஸ்திரத் தன்மையை கண்காணிப்பதற்கு, திறமையான மேற்பார்வை வரைச்சட்டமொன்றை தயாரித்து, தற்போதுள்ள அமைப்பு முறைகளுக்குள் அவற்றை உறுதியாக நிறுவி, சபையை மேலும் விருத்தி செய்யும் உயர்மட்டத்திலான விவேகமான மேற்பார்வையூடாக சபையை முன்னோக்கி நகர்த்தி செல்வதாகும். இடர் அடிப்படையிலான மேற்பார்வை கட்டமைப்பை செயற்படுத்துவதன் ஊடாக சபையின் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்துவதும், சபையின் மேற்பார்வை தகைமையை மேலும் விருத்தி செய்வதும் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

உள்நாட்டில் உருவாக்கப்படும் கணிப்பீட்டு நிபுணத்துவத்தின் குறைபாடு காப்புறுதிதுறை முகங்கொடுக்க வேண்டிய பாரிய சவால்களில் ஒன்றாகவுள்ளது. பிராந்தியமெங்கும் அனேக கூட்டங்களில் கலந்துரையாடப்படும் உலகளாவிய விடயமாகவும், அடுத்து வரும் ஆண்டுகளில் முக்கியமாக 2016 இல் இடர் அடிப்படையிலான மூலதனத்தின் அறிமுகம் முன்னெடுக்கப்படவுள்ள நேரத்தில், கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ள ஒரு விடயமாகவும் உள்ளது.

காப்புறுதி தள்ளிவிடப்படும் உற்பத்தி ஒன்றாகவே பெரும்பாலும் காணப்படுகின்றது. உதாரணமாக, இது விற்கப்படுகின்றது, வாங்கப்படுவதில்லை. இலங்கையில் நிலவும் இலவச சுகாதார பராமரிப்பு மற்றும் கல்வி முறைமைகள், பெற்றார் பிள்ளைகளுக்கிடையில் பரஸ்பரம் நிலவும் பராமரிக்கும் கடமை எனும் ஆக்கிரமிக்கும் பாரம்பரியம் பெற்றார் இறக்கும் வரை அவர்களைப் பராமரிக்க வேண்டிய தேவை நீடிப்பு ஆகியவை காப்புறுதிக்கு குறைவான முன்னுரிமையை அளித்துள்ளன. எவ்வாறாயினும், காப்புறுதி உற்பத்திகளூடாக சுகாதார காப்பீட்டின் தேவை அதிகரிக்கப்பட்டுள்ளதையும் இளைப்பாற்று மற்றும் ஓய்வூதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு மேலும் அனேக அவசியமான தேவைப்பாடுகள் ஏற்பட்டுள்ளதையும் தற்போதைய போக்குகள் காண்பிக்கின்றன. இலங்கையில் நிதியியல் உள்ளடக்கங்களுக்கு ஆதரவாக, பல்வேறு வருமான மட்டங்களில் விரிவானதும், வகைப்படுத்தப்பட்டதுமான உற்பத்தி துறையொன்றை ஏற்படுத்துவதும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

இடர் முகாமைத்துவ கருவியாக மட்டுமே காப்புறுதியை பொதுமக்கள் தெரிந்திருப்பது இந்த தொழிலுக்குள்ள மற்றொரு சவாலாகும். பாவனையாளர்களின் தேவைகளை சந்திக்கும், விரிவானதொரு உற்பத்தி துறையுடன் இணைந்து, காப்புறுதிதுறையின் நம்பகத் தன்மையை அதிகரிப்பதும் காப்புறுதியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை விருத்தி செய்வதும், காப்புறுதியை நிதியியல் கருவியாக பொது மக்களின் ஆர்வங்களுக்குள் கடிவாளமிட முடியுமாக விருப்பதும் காப்புறுதி தொழிலுக்கு அவசியமாகும்.

**முடிவுரை**

நிலையான வளர்சியை அளிப்பதற்கு பொது மக்களின் விழிப்புணர்வும், புரிந்து கொள்வதும் மட்டும் போதுமாயிராது. காப்புறுதி குறித்த பொது மக்களின் நம்பிக்கையுடன் இணைந்ததாக கொடுக்கக் கூடிய தவணைக் கட்டணங்களைக் கொண்ட சுற்றாடல் ஒன்றில் அதிகரித்து வரும் விற்பனை செய்யக்கூடிய வருமானம், பெறக்கூடிய அதிகரிப்பையும், ஊடுறுவலின் அதிகரிப்பையும் ஏற்படுத்தும். காப்புறுதியாளர்களின் இலாப அதிகரிப்பிற்கு வழிவகுக்கும் காப்புறுதி துறையின் வளர்ச்சி இதில் பங்கேற்கும் காப்புறுதி வைப்பாளர்களின் கொடுத்துத் தீர்த்தலிலும் அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டும். அனுபவ ரீதியாக நோக்கும்போது இத்தகைய அதிகரிப்பு விற்பனை செய்யக்கூடிய வருமானத்தை தொழிலுக்குள் திரும்ப முதலீடு செய்யும்.

துரிதமாக வளர்சியடையும் கைத்தொழில் ஒன்று குறைந்த மட்டத்திலான ஊடுறுவலை கொண்டிருப்பதும், வளர்ச்சியடையும் பொருளாதாரமொன்றில் குறைந்தளவான அடர்த்தி காணப்படுவதும் நிதியியல் உள்ளடக்கத்திற்கு ஆதரவளிக்கக்கூடிய புவியியல் மற்றும் சமூக அமைப்பிற்குள் பரவலான பங்கீடு ஒன்றின், துரிதமான வளர்ச்சிக்கு பாரிய வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. நிலையான உறுதியான எதிர்காலம் ஒன்றிற்கான சுற்றாடல் ஒன்றை வடிவமைப்பதற்கு இவ்வாறான வாய்ப்புகளை கைப்பற்றிக் கொள்வது காப்புறுதி தொழிலிடமே தங்கியுள்ளது.

ஆண்டு முழுவதும், தமது வழி காட்டலையும், இடையறாத ஆதரவையும் வழங்கிய தலைவிக்கும், சபையின் அங்கத்தினர்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன். சபையின் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு தலைவி தனது ஆலோசனைகளை வழங்கியுள்ளார். கூட்டாகவும் தனிப்பட்ட ரீதியிலும் அவரது ஆழமானதும் புத்தூக்கமானதுமான தலைமைத்துவத்திற்கும் நன்றி யுடையவர்களாக இருக்கின்றோம். இலங்கையின் காப்புறுதி தொழிலின் நிலையான வளர்ச்சிக்கு உந்து சக்தியாக தொழில் அடிப்படை ஒன்றை உருவாக்குவதற்கு சபைக்கு ஒத்துழைப்பை வழங்கிய ஐஏஎஸ்எல் (IASL) எஸ்எல்ஐபிஏ (SLIBA) மற்றும் எஸ்எல்ஐஐ (SLII) என்பவற்றின் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். 2012 இன் போது இவ்வாறான தைரியமிக்க அடியெடுப்புகளை எடுப்பதற்கு சபையிடம் காணப்பட்ட கடப்பாடும் பொறுப்புணர்வுமே காரணமாயமைந்தது. எனது பணிப்பாளர்களின் குழுவிற்கும், பணியாட்தொகுதியனருக்கும், அவர்களின் உயர் மட்டத்திலான தொழிலாற்றலுக்கும் மிக சிறப்பான திறமையை நோக்கிய இடைவிடாத தேடலுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்



**சந்திரி குணவர்தன**
பணிப்பாளர் நாயகம்

07 ஆகஸ்ட் 2013

# சபையின் அங்கத்தினர்கள்






1. திருமதி. இந்ராணி சுகததாச
*தலைவி*

2. திரு. ஜீ குணவர்தன
*அங்கத்தினர்*

3. திரு. பி. டி. டப்ளியு ஆனந்த சில்வா
*அங்கத்தினர்*

4. திரு. எஸ். ஆர். ஆட்டிகல
*அங்கத்தினர்*

5. திரு. காமினி கோஹன்ன
*அங்கத்தினர்*

6. திரு. மொகமட் நவாஸ் ரஜாப்டீன்
*அங்கத்தினர்*

# சபையின் அங்கத்தினர்களின் விபரத்திரட்டு

**திருமதி. இந்ராணி சுகததாச,** 2010 மே மாதத்திலிருந்து, இலங்கை காப்புறுதி சபையின் தலைவியாக இருக்கின்றார். கொழும்பு மியுசியஸ் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், கொழும்பு பல்கலைக் கழகத்தில் சமூக விஞ்ஞான பட்டம் பெற்ற பட்டதாரி என்பதுடன், அவுஸ்திரேலியாவின் மெல்பன், மொனாச் (Monash) பல்கலைக் கழகத்திலிருந்து பட்டப்பின்படிப்பு (MPA / MBA) பட்டமும் பெற்றுள்ளார். இவர் 1990 இல், ஐக்கிய அமெரிக்க நாடுகளின், கௌரவமிக்க விருதான ஹோர்பட் எச் ஹம்ப்ரே பெ(f)லோசிப் (Hubert H Humphrey Fellowship (Fulbright) விருதை பெற்றுள்ளதுடன், ஒரு வருட கால அங்கத்துவத்தின் போது நியுயோர்க் சிட்டி பல்கலைக் கழகத்தின் ஹண்டர் கல்லூரி (Hunter College City University of New York) இல் சேர்ந்திருந்தார்.

கணனி விஞ்ஞானம், ஆளணி முகாமைத்துவம் மற்றும் பொது சேவை முகாமைத்துவம் ஆகியவற்றில் தொழில் சார்ந்த பயிற்சியையும் இவர் பெற்றுள்ளார்.

திருமதி சுகததாச, 1977 இல் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்ததுடன், திட்ட அமுலாக்கல் அமைச்சில் உதவி செயலாளராக தனது தொழில்சார் பணியை ஆரம்பித்து நிர்வாகத் துறையில் மிக உயர்ந்த பதவிகளை எய்தினார்.

பொதுத் துறையின் முக்கிய நீரோட்டத்தில் இவர் பணியாற்றிய போது, திருமதி சுகதாச தேசிய இளைஞர் சேவைகள் கவுன்சிலின் பணிப்பாளர், இலங்கை மகளிர் பணியகத்தின் பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் தேசிய நிறுவனத்தின் தலைவி மற்றும் சிறுவர் அபிவிருத்தியும் மகளிர் வேலை வாய்ப்பும் அமைச்சின் நிரந்தர செயலாளர் ஆகிய சிரேஷ்ட பதவிகளை வகித்தார்.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமாக பொதுத் துறையில் சேவையாற்றியதன் பின்னர் 2010 இல் பெருந்தோட்ட கைத்தொழிலில் அமைச்சில் நிரந்தர செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதன் பின்னர், இலங்கை காப்புறுதி சபையினதும், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் (SEC) தலைவியாக நியமிக்கப்பட்டார். 2011 டிசம்பர் வரையிலும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தில் சேவையாற்றினார். உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும், பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்றுள்ள திருமதி சுகததாச, மேலும் பல வெளிநாடுகளுக்கு செல்லும் பிரதிநிதிகள் குழுவிலும், சர்வதேச மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

**திரு. ஜீ குணவர்தன,** 2010 மே மாதத்தில் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை தைவான் நட்புறவு சங்கம் என்பவற்றின் முன்னால் தலைவரும், அமரிக்கன் சேம்பர் ஒப் கொமர்ஸ் (American Chamber of Commerce) இன் முன்னால் பணிப்பாளருமாவர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையகத்தின் சபை அங்கத்தினராகவும் இருந்துள்ளார்.

தற்போது இவர் அனேக ஸ்தாபனங்களிலும் தனியார் கம்பனிகளிலும் தலைவராக பணியாற்றுகின்றார். 1999/2000இன் ஆண்டிற்கான தொழில் முயற்சியாளர் விருதினையும், பல ஆண்டுகளாக, மிகை அளவிலான வகைப்படுத்தலின் கீழ், ஏற்றுமதியாளர்களுக்கான தங்க விருதினையும் பெற்றுள்ளார்.

2006 இல் பொஸ்டன் அக்கடமி அவார்ட்ஸ் நிகழ்வில் (Boston Academy Awards Function) "உலகின் மிகச் சிறந்த ஆளுனர்" எனும் விருதினைப் பெற்றார்.

திரு. குணவர்த்தன, தேர்ஸ்டன் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர், "றோயல் சிலோன் எயார் போ(F)ர்ஸ்" இல் இணைந்து விமான பொறியியல் தொழில் நுட்பவியலாரக கல்வி பயின்றார். அதன் பின்னர் 12 ஆண்டுகள் பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றினார். இவர் ஹேன்ட்ஸ் இன்டர்நெசனல் பிரைவட் லிமிடட் (Hands International Private Limited) இன் ஸ்தாபக தலைவராகவும் இருந்தார். உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமாக உலகத்தின் முன்னணி கைத்தொழில் கையுறையாளருமாக இருக்கின்றார்.

**திரு. பீ. டி. டப்ளியு ஆனந்த சில்வா** 28 ஆண்டுகள் மத்திய வங்கியில் கடமையாற்றியுள்ளார். மத்திய வங்கியில் அவரின் 28 ஆண்டுகால பதவியின் போது, அபிவிருத்தி நிதி திணைக்களம், பொருளாதார ஆய்வு திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வையாளர் திணைக்களம் என்பவற்றில் பணி புரிந்துள்ளார். நாணயக் கொள்கை, வங்கி மேற்பார்வை, நிலையான நிதியியல் அமைப்பு, நாணயமாற்று வீதக்கொள்கை, வெளிநாட்டு வர்த்தகம், மற்றும் சென்மதி நிலுவை ஆகிய துறைகளிலும் திரு. சில்வா விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து பி.எஸ்சி முதல்வகுப்பு பட்டம், ஐக்கிய அமெரிக்காவின் ஐயோவா பல்கலைக்கழகத்திலிருந்து எம்.ஏ.பட்டம், ஐக்கிய அமெரிக்காவின் இலினோய்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து எம்.எஸ்சி பட்டம் ஆகியவற்றை பெற்றுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வருகைதரும் விரிவுரையாளராகவும், மத்திய வங்கியினால் நடாத்தப்படும் அனேக உயர்மட்ட கற்கை நெறிகளுக்கான ஆய்வாளராகவும் இருக்கின்றார்.

இலங்கை கடன் தகவல் பணியகத்தின் தலைவர், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் தலைவர், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் பணிப்பாளர், இலங்கை காப்புறுதி சபையின் பணிப்பாளர், "அபி வெனுவென் அபி" நிதியத்தின் பணிப்பாளர், ஆகிய பதவிகளில் திரு. சில்வா தற்போது சேவையாற்றுகின்றார்.

**திரு. எஸ். ஆர். ஆட்டிகல,** இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளராவார். இவர் தேசிய சேமிப்பு வங்கியில் பணிப்பாளராகவும் பதில் தலைவராகவும் சேவையாற்றியுள்ளதுடன் ஷெல் கேஸ் லங்கா லிமிடட் இன் பணிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். 2011 இன் இறுதிவரையிலும் நிதியும் திட்டமிடலும் அமைச்சின் அரசிறை கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், பொது தொழில்

# சபையின் அங்கத்தினர்களின் விபரத்திரட்டு

முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றியுள்ளார்.

தற்போது அவர் திறைசேரியின் பிரதி செயலாளராக இருக்கின்றார். இலங்கை வங்கி, இலங்கை துறைமுக அதிகார சபை, என்பவற்றின் பணிப்பாளர் சபைகளிலும் சேவையாற்றுகின்றார். பேராதனை பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின், சபையில் ஒரு அங்கத்தினராகவும், உச்ச நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபையின் ஒரு அங்கத்தினராகவும் இருக்கின்றார்.

திரு. ஆட்டிகல, கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து கணிதத்துறை யில் பி.எஸ்சி. விஞ்ஞானப் பட்டமும், ஐக்கிய இராச்சியத்தின் வார்விக் பல்கலைக் கழகத்திலிருந்து பொருளியல் துறையில் எம்.ஏ. பட்டமும் பெற்றிருக்கின்றார்.

**திரு. காமினி கோஹன்ன,** 2010 ஜூலையில் சபைக்கு நியமிக்கப்பட்டார். கல்கிஸ்ஸ சென்ட் தோமஸ் கல்லூ ரியில், கல்வி பயின்ற திரு. கோஹன்ன, பெருந் தோட்டத் துறையில் தேயிலை, இறப்பர், தென்னை, மற்றும் எண்ணெய் தாவரங்கள் ஆகியவற்றின் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் 30 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவத்தைப் பெற்றுள் ளார். இவர் மத்திய மலையக பெருந்தோட்டத்தின் முன்னால் பிரதி நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். தற்போது "புலஸ்தி எக்ஸ்போர்ட்டஸ் (பிரைவட்) லிமிடட்இன் முகாமைத்துவப் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

**திரு. மொகமட் நவாஸ் ரஜாப்டீன்,** 2010 ஜூலையில் சபைக்கு நியமிக்கப்பட்டார். திரு. ரஜாப்டீன் சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் நல்உறவுகளில் திறமை யுடையவராக இருக்கின்றார்.

ஹொட்டல் டெவலர்ப்பர்ஸ் (பிரைவட்) லிமிடட் இன் தலைவர், இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் (Federation of Chamber of Commerce and Industry of Sri Lanka) சார்க் சேம்பர் ஒப் கொமர்ஸ் இன் உப தலைவர், இலங்கையின் நிர்மாணக் கைத்தொழில் மன்றத்தின் தலைவர், ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி "ஸ்தாபனத்தின் தேசிய பணிப்பாளர் மற்றம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் உலக சபையின் தலைவர் போன்ற அனேக கௌரவமிக்க பதவிகளை முன்னர் வகித்துள்ளார்.

திரு. ரஜாப்டீன் தற்போது ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும் 1984 இலிருந்து ரஜாப்டீன் கம்பனிகள் குழுமத்தின் தலைவராகவும் நிர்வாகப் பணிப்பாளராகவும் செயற் படுகின்றார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு






1. **திரு. சந்திரி குணவர்தன**
   *(பணிப்பாளர் நாயகம்)*

2. **திருமதி தமயந்தி பர்னாந்து**
   *(பணிப்பாளர் சட்டம்*

3. **திருமதி. சாயா வித்தானவாசம்**
   *(பணிப்பாளர் நிதியும் நிர்வாகமும்)*

4. **திரு. நிஹால் ராமநாயக்க**
   *(பணிப்பாளர் மேற்பார்வை)*

5. **திரு. ராஜன் நிருபசிங்கம்**
   *(உதவி பணிப்பாளர் சட்டம்)*

6. **திருமதி. சமரி எக்கநாயக்க**
   *(உதவி பணிப்பாளர் மேற்பார்வை)*

7. **திருமதி. தாமரி சேனாநாயக்க**
   *(பணிப்பாளர் புலனாய்வு)*

# ஊழியர் குழாம்






**முன் வரிசை**

1 திருமதி. தனுஜா அந்தனி
2 திருமதி. சியாமளி அத்தநாயக்க
3 திருமதி. லக்மலி அல்கம
4 திருமதி. சந்திமா கம்புறுகமுவ
5 திருமதி. கோகிலா சிறிவர்தன
6 திருமதி. மெரினா டயஸ்
7 செல்வி. பிரியங்கி டி சில்வா
8 திருமதி. வீனா டினேகா

**பின் வரிசை**

9 திரு. கப்பில திலகரட்ன
10 திரு. எத்திராஜ் சிறிகாந்தன்
11 திருமதி. சத்துரி பண்டார
12 திரு. பிம்சாரா விஜேசிங்க
13 திருமதி. உபேந்ர செனிவிரட்ன
14 திரு. எச். பி. அசங்க
15 திரு. ஹர்சன வன்னியாராச்சி

# ஊழியர் குழாம்






**முன் வரிசை**

1 திரு. சனத் உதயங்க
2 திருமதி டெசிகா ரத்னாயக்க
3 திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
4 செல்வி. துசாரி விஜேகுணவர்தன
5 திருமதி. ருவினி லியனகே
6 திருமதி டி.டப்.எஸ்.எஸ் சுபுலி
7 திருமதி. லசந்தி தொட்டஹேவ

**பின் வரிசை**

8 திரு. டி. எஸ். கே. சேனாதீர
9 திருமதி. கௌசாலி தயாரத்ன
10 திரு. சரித்த விக்ரமசிங்க
11 திருமதி. சரிகா வத்துஹேவ
12 திரு. லக்ஸ்மன் விஜேசிங்க
13 திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க
14 திருமதி. சுஜீவா ரணசிங்க
15 திரு. லக்மல் களுபோவில
16 திரு. எம். சமிந்த லால் குமார

# மீளாய்வுகள்


**பொதுவான மீளாய்வு** ........ **22**

**புள்ளிவிபர மீளாய்வு** ........ **27**

**செயற்பாட்டு மீளாய்வு**

- மேற்பார்வை மீளாய்வு ........ 54
- ஒழுங்கமைப்பு மீளாய்வு ........ 57
- புலனாய்வு மீளாய்வு ........ 61
- சந்தை அபிவிருத்தியும் வெளியக உறவுகளும் ........ 63
- நிர்வாக மீளாய்வு ........ 65
- நிதிசார் மீளாய்வு........ 66

# பொதுவான மீளாய்வு

### சட்டத்தின் நிர்வாகம்

### சட்டவாக்கம்

இலங்கையின் காப்புறுதி துறையை ஒழுங்கமைப்பது, மேற்பார்வை செய்வது மற்றும் அபிவிருத்தி செய்வது எனும் 2000 இன் 43 ஆம் இல. காப்புறுதி கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கமைப்பு ("சட்டம்") சட்டத்தைப் பிரகடனப்படுத்தி 2001, மார்ச் 2000இன் 43ஆம் இல. காப்புறுதி கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கமைப்பு (சட்டம்) 01 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு சபை ஸ்தாபிக்கப்பட்டது. காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் நோக்கத் துடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில் சார்ந்ததாகவும், விவேகமாகவும் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வது சபையின் நோக்கமாகவும் பொறுப்பாகவும் உள்ளது.

காப்புறுதியாளர்களுக்கும் காப்புறுதி இடையீட்டாளர்களுக்கும் (காப்புறுதி தரகர்களும் காப்புறுதி முகவர்களும்) ஒழுங்கமைப்புடனும் மேற்பார்வையுடனும் தொடர்புடைய சட்ட பூர்வமான வரம்புகளை சட்டம் வழங்குகின்றது.

சட்டம் பிரகடனப்படுத்தப்பட முன்னர், 1962 இன் 25 ஆம் இலக்க காப்புறுதி கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் உரிமை யாக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்பட்ட காப்புறுதி கட்டுப்பாட்டாளரினால், காப்புறுதி தொழில் ஒழுங்கமைக்கப்பட்டது. சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இச்சட்டம் நீக்கப்பட்டது.

காப்புறுதி தொழிலை வலுப்படுத்துவதற்கு காலத்திற்கு காலம் சட்டத்திற்கு அனேக திருத்தங்கள் உட்சேர்க்கப்பட்டதுடன் சட்டத்தின் கீழ் துணை சட்டவாக்கங்களும் இயற்றப்பட்டன. இந்த அறிக்கையின் ஒழுங்குபடுத்தல் மீளாய்வில், ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சட்ட சீர் திருத்தங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

### சந்தை கட்டமைப்பு

### காப்புறுதியாளர்கள்

சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதியாளராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும். ஆண்டின் இறுதி அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதியாளர்களாக 22 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. எவ்வாறாயினும் 21 கம்பனிகளே செயற்பட்டுக் கொண்டிருக் கின்றன. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட பதிவு நீக்கம் 2009 இலிருந்து தொடர்ந்து நீடிக்கின்றது. வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வர்த்தக கம்பனிகளின் வகைகளை வரைபடம் 01 காண்பிக்கின்றது.

22 கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தையும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதியாளர்காக பதிவு செய்யப்பட்ட 12 கம்பனிகளும் நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 3 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 7 கம்பனிகளும் உள்ளடங்கும்.

**வரைபடம் 01**
**காப்புறுதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி வர்த்தகத்தின் வகைப்படுத்தல்கள்**




### காப்புறுதி தரகர்கள்

2000 இன் 7ம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதி தரகர் எனப்படுவதுடன், காப்புறுதி தரகர் வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. காப்புறுதியாளர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது அவர்கள் சார்பாக காப்புறுதியாளர் அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரகர்கள் செயற்படுகின்றனர். ஆண்டிறுதியின் போது 54 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 38 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வர்த்தகம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 16 கம்பனிகள் பொது காப்புறுதி தரகு வர்த்தகத்தில் மட்டும் பதிவு செய்தன. வரைபடம் 02 காப்புறுதி தரகர்கள் மேற்கொள்ளும் காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகைப்படுத்தல்களை காண்பிக்கின்றது.

**வரைபடம் 02**
**காப்புறுதி தரகர்களினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகைப்படுத்தல்கள்**



# பொதுவான மீளாய்வு

### காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதியாளர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள் அத்தகைய காப்புறுதியாளர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தை பதிவு செய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

2011இன் 3 ஆம் இல. காப்புறுதி தொழில் ஒழுங்கமைப்பின் (திருத்தச்) சட்டம் (திருத்தச் சட்டம்) தனி நபர்கள் தவிர்ந்த ஏனையவர்களையும் காப்புறுதி முகவர்களாக தொழிற்பட அனுமதிக்கின்றது.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களுடாக காப்புறுதியாளர்களும், காப்புறுதி தரகர்களும், காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

காப்புறுதியாளர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களுக்கு சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 12,604 ஆகவிருந்தது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதியாளர்களை பிரதிநிதித்துவப் படுத்திய காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 36,801 ஆக இருந்தது. அட்டவணை 03 காப்புறுதியாளர்களுடன் பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி முகவர்களை காண்பிக்கின்றது.

### கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

காப்புறுதியாளர்களில் 07 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவையாவன சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ, ஏஐஏ(AIA) இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி, யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சீ, ஏசியன் அலையன்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, மற்றும் ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப் படாததுமான காப்புறுதி யாளர்களின் சதவீதத்தை அட்டவணை 04 காண்பிக்கின்றது.

**வரைபடம் 03**
**காப்புறுதியாளர்களுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி முகவர்கள்**




**வரைபடம் 04**
**பட்டியலிடப்பட்ட/பட்டியலிடப்படாத காப்புறுதியாளர்களின் நிலைமை**




திருத்தச் சட்டத்தின் செயற்பாட்டு திகதியிலிருந்து ஐந்து வருட காலப் பகுதிக்குள் 1987 இன் 36 ஆம் இல இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனை ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதியாளர் பட்டிய லிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. எனவே கலவையான காப்புறுதி கம்பனிகள், திருத்தச் சட்டத்திடம் இருந்து பட்டியல் ஒன்றை அதன் செயற்பாட்டு திகதியிலிருந்து 4 ஆண்டு காலத்திற்குள், பெற்றுக் கொள்வதற்கு முன்னர் அதன் வியாபாரம் இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கப்பட வேண்டும்.

வேறுபடுத்தலை சுமூகமாக செயன்முறைப் படுத்துவதற்காக இலங்கை காப்புறுதி சங்கத்துடன் சபை மிகவும் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதியாளராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இல இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜூன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதியாளராக பதிவு செய்யப்பட்ட பங்கு மூலதனத்தை செலுத்தியுள்ள கம்பனி ஒன்றிற்கு 2015 பெப்ரவரி 15 அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனாக அதிகரிக்கப்பட வேண்டிய தேவை சபைக்கு உள்ளது.

# பொதுவான மீளாய்வு

காப்புறுதி தரகர்களைப் பொறுத்த வரையிலும், 2014 டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி தரகராவதற்கு ரூபா 2 மில்லியன் ஐந்நூறாயிரத்திற்கு குறையாத தொகையை பங்கு மூலதனத்தில் செலுத்தப்பட்ட தொகையாக கம்பனி ஒன்று வழங்க வேண்டும் என்பது சபையின் தேவைப்பாடாகும்.

காப்புறுதியாளர்களுக்கு இடர் அடிப் படையிலான மூலதன விதிகளை அறிமுகப்படுத்தும் செயன்முறையிலும் சபை ஈடுபடுகின்றது.

2002 ஏப்பிரல் மாதத்தில் பரிவர்த்தனை கட்டுப்பாட்டாளரினால் வெளியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக காப்புறுதி கம்பனிகளின் வெளிநாட்டு உடமையாக்கப்பட்ட பங்கேற்றலுக்கு 100% அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### காப்புறுதியாளர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை (Cess)

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதியும் திட்டமிடலும் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 2002 ஜுலை 09இல் 1244/5 ஆம் இல. வர்த்தமாணி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 02% பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 04% மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதியாளர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2012 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 237 மில்லியனாகவும் இருந்தது. பட்டியல் 02 செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவை காண்பிக்கின்றது.

### காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதியாளர்களிடமிருந்து

**வரைபடம் 1**

**செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்**




சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது. காப்புறுதி வைப்பாளர்களினதும், உத்தேச காப்புறுதி வைப்பாளர்களுக்கு நன்மை அளிக்குமாயிருப்பின் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படலாம்.

(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய் வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களை தீர்த்தல்.

(ஆ) சபையின் அதிகாரங்கள், நடவடிக் கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற் படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தை தீர்த்தல்.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படும். 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 1,622 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட 26.81% அதிகரிப்பாகும். (ரூபா 1279 மில்லியன்)

### காப்புறுதி தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீஅபாய காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 2002 ஜனவரி 1, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

### வெளிநாட்டு காப்புறுதி - பயணம், சுகாதாரம் மற்றும் பொறுப்பேற்றல் காப்புறுதி

சட்டத்தின் 101 ஆம் பிரிவிற்கு அமைவாக, வெளிநாட்டில் உரிமம் அல்லது பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர் ஒருவர் அத்தகைய காப்புறுதியாளர் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்டவராக இருப்பினும் - நேரடியாக அல்லது மறைமுகமாக சுகாதாரம் மற்றும் பயணக் காப்புறுதியை இலங்கையில் வைத்திருப்பதற்கான அங்கீகாரத்தை எந்தவொரு நபருக்கும் சபை வழங்கியுள்ளது. மேலும், வெளிநாட்டில் உரிமம் அல்லது பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளரிடமிருந்து அவர்களது கடமைகளை நிறைவேற்றும் போது உருவாகக் கூடிய பொறுப்புகள் தொடர்பாக அவர்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பொறுப் பேற்றல் குறித்த காப்புறுதி காப்பை

# பொதுவான மீளாய்வு

பதிவு செய்துள்ள காப்புறுதியாளர்கள் பெற்றுக் கொள்வதற்கான அங்கீகாரம் அத்தகைய காப்புறுதியாளர்கள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்படாதவராக இருப்பினும் அவர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது கோரிக்கைக்கான வதிவிட தரப்பினர் ஒருவருக்கு செலுத்தப்படவுள்ள அத் தகைய காப்புகள் தொடர்பில் ஏதாவது நடவடிக்கைகள் வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்குள் கொண்டு வரப்படும்.

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, சட்டத்தின் ஏற்பாடுகள், 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சட்டம், 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபையாக ஸ்தாபிக்கப்பட்டது. இவற்றிற்கு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 இன் 28 ஆம் இல. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தி (NITF சட்டம்) னால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு திருத்தச் சட்டத்தினால் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தே.கா.ந.நி. சட்டத்திற்கு அமைவாக நிதியும் திட்டமிடலும் அமைச்சினால் பேணப்பட்டு வந்த வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் நிதியை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உட்சேர்த்துக் கொண்டது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தே.கா.ந.நி.இன் சார்பான காப்புறுதி காப்புகளை விற்கும் காப்புறுதியாளர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, பொது காப்புறுதி வியாபாரம் தொடர்பாக பதிவு செய்துள்ள காப்புறுதியாளர்கள் அனைவரும் மீள் காப்புறுதி செய்ய வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் மீள் காப்புறுதி செய்ய விரும்பும் பொறுப்பின் மீது 50% இற்கு மேற்படாத சதவீதம் ஒன்றை மீள் வாக்குறுதி செய்யும் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலேயுள்ள ஏற்பாட்டிற்கு அமைவாக 2013 ஜனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு, நிதியும் திட்மிடலும் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஏற்ப, மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் சாதுரியமான மீள் காப்புறுதி ஒழுங்குகள் என்பனவற்றிற்கு காப்புறுதியாளர்கள் அனைவரும் 30% யை அளிக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளர். இதற்கு முன்னர் இது 20% மாக இருந்தது.

### ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. மோட்டார் காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களின் 1% யைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலை சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கிடையிலான கவுன்சில் (IRIC)

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கு இடையிலான கவுன்சில் தாபிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுனரினால் தலைமை தாங்கப்படும் இந்த உயர்மட்ட குழு, நிதிச் சந்தைகளின் முறைமையான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை வழிகாட்டல்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்வதிலும், நிதியியல் அமைப்புகள் அனைத்தினதும் நலன்களை கருத்திற் கொண்டு, நிதியியல் ஒழுங்கமைப்பு முகவராண்மைகள் யாவும் ஒருங்கிணைந்து, தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் ஈடுபடும். ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கிடையிலான கவுன்சிலில் சபையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்கள் அனைவரும் சபையில் அங்கத்தினராவதற்கு தகுதி பெறுவார்கள். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தினர்கள் தவிர்ந்த ஏனைய காப்புறுதியாளர்கள் அனைவரும் இலங்கை காப்புறுதி சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆவர்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்

### இலங்கை காப்புறுதி சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் :-

1. காப்புறுதியாளர்களின் உறுப்பினர்கள் மற்றும் காப்புறுதி செய்யும் பொது மக்களின் பொதுவான ஈடுபாடுகளையும் நலன்களையும் பாதிக்கும் விடயங்கள் குறித்து ஆலோசனைகளையும், ஒத்து ழைப்பையும் பெற்றுக் கொள் வதற்காக காப்புறுதியாளர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டுதல்.

2. காப்புறுதி வியாபாரத்தில் சீரான, சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் விழுமிய தராதரங்களை பேணி ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி செய்யும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விருத்தி செய்வது.

# பொதுவான மீளாய்வு

3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் மதிப்பு தொடர்பான விழிப்புணர்வை கட்டியெழுப்புவது

4. சட்டம்/ஒழுங்கமைப்பு தேவைப் பாடுகள் என்பவற்றை கண் காணிப்பது மற்றும் தொழிலின் ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சி யையும் உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரிகளுடன் பிரதிநிதித்துவங்களை செய்வது.

5. ஏனைய நாடுகளின் காப்புறுதி பிரயோகங்களையும் உத்திகளையும் மீளாய்வு செய்வதும் மற்றும் பரீட்சிப்பதும் அவற்றில் இலங்கையின் சந்தைக்கு பொருத்தமான சிறந்த பிரயோகங்களை கடைப்பிடிப்பதும்.

6. கல்வி மற்றும் பயிற்சியினூடாக காப்புறுதி துறையில் தொழிலில் திறமையை ஊக்குவித்து, உத்வேகமான முறையில் உதவியளித்து மேம்படுத்துவதும், இந்நோக்கத்திற்காக வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், மன்றங்கள், உசாவுகைகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதும்.

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

இலங்கை காப்புறுதியாளர் தரகர் சங்கமானது சபையினால் அங்கீகரிக்கப் பட்ட ஒரேயொரு காப்புறுதி தரகர் சங்கமாகும். சட்டத்தின் 79 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி தரகர் பதிவு செய்தலை நாடும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும், சபையினால் காப்புறுதி தரகர் பதிவு செய்யப்படும் முன்னர், இச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அங்கத்தவர்கள், இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

### இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் பிரதான நோக்கங்கள் :-

பொது மக்கள் மத்தியில் காப்புறுதி தரகர்களின் பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது,

அங்கத்தினர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி திறமைகளையும், தொழிலாற்றல்களையும் உயர் மட்டத்தில் கட்டியெழுப்புவது.

அங்கத்தினர்கள் காப்புறுதி பாடநெறி களை பின்பற்றவும், தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவும் அங்கத்தினர்களை ஊக்குவிப்பதற்கும் உதவுவது.

ஒழுங்கமைப்பாளர்கள், காப்புறுதியாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் நல்லுறவையும், பரஸ்பர நன்மைபயக்கும் உறவுகளையும் பேணுவது.

### இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி கம்பனி மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளிலிருந்து கிடைக்கிறது.

### இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள் :-

காப்புறுதி துறையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழில் புரிகின்ற நபர்களிடையே அவர்கள் காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் சொந்த நலனுக்காக மட்டுமின்றி அத்தகைய வியாபாரத்தை மிகுந்த பயனுறுதியுடன் நடத்திச் செல்லவும் தொழில் திறமையை ஏற்படுத்தி அதை பேணும் நோக்கிலும் செயற்திறன் முன்னேற்றம் பொதுவான அபிவிருத்தி என்பவற்றை ஊக்கப்படுத்துவதற்காக மத்திய அமைப்பொன்றை ஏற்படுத்தி பேணுவது.

காப்புறுதி பற்றிய அறிவை விருத்தி செய்வதற்காக டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகமைகளுக்கு இட்டுச்செல்கின்ற பாட நெறிகளை நடத்துவது அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் நிறுவனத்தினூடாக காப்புறுதியின் எந்த வொரு கிளை தொடர்பான எந்தவொரு விடயத்தைப் பற்றிய தொழில்சார் கற்கையை ஊக்குவித்து அதற்கு உதவுவதற்காக பரீட்சைகளை நடத்தவது.

தொழில்சார் விவகாரங்கள், நலன்கள். கடமைகள், ஆய்வு கட்டுரைகளை வாசித்தல் மற்றும் விரிவுரைகள் வழங்குதல் போன்ற கலந்துரையாடலுக்கான மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல், அங்கத்தவர்களின் பட்டியல்கள், இடாப்பு கள் மற்றும் பதிவுகளை தொகுப்பது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் தொடர்பான தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதற்கும் அவர்களது நலன் மற்றும் நலநோம்புகை என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவர்களது மேம் பாட்டை வலுப்படுத்தவும், பொதுவாக காப்புறுதி மற்றும் இ.கா நிறுவனத்தின் அங்கத்தவர்களது நிலைமையை மேம் படுத்துவதற்கு இட்டுச் செல்லக் கூடியதான ஊக்குவிப்புகளை மேற் கொள்வது.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்ட னிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப் பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம்

காப்புறுதி மேற்பார்வையார்களின் சர்வ தேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வை யாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலான்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின் பற்றப்படுகின்றன.

# புள்ளி விபர மீளாய்வு

## காப்புறுதி தொழில் குறித்த ஒரு கண்ணோட்டம்

### காப்புறுதி தொழிலின் ஒட்டுமொத்த செயலாற்றுகை

நீண்டகால மற்றும் பொது காப்புறுதி வியாபாரத் துறைகள் இரண்டிலும் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணத்தின் வளர்ச்சியை பதிவு செய்ததன் மூலம் இலங்கையின் காப்புறுதி தொழில் 2012 ஆம் ஆண்டிலும் மற்றுமொரு வாய்ப்பான ஆண்டாக இருந்ததை காண முடிந்தது. அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு, 2012 ஆம் ஆண்டிற்கான காப்புறுதி தொழிலின் மொத்த கலவையான மொ.எ.கா.க ரூபா 87,152 மில்லியனாக (2011 ரூ. 78,491 மில்) இருந்தது. இது அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 11.03% வளர்ச்சி வீதமாகும். 2011 உடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி, குறைந்த வேகத்தை கொண்டிருந்ததாயினும், பேரண்டப் பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றமானது 2012 இன் போதான காப்புறுதி கட்டண வருமானத்தின் அதிகரிப்பிற்கு துணையாக இருந்தது.

அகற்றப்படக்கூடிய வருமானத்தின் அதி கரிப்பும், காப்புறுதி உற்பத்திகள் குறித்து பொது மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்வின் அதிகரிப்பும், நீண்டகால மற்றும் பொதுவான காப்புறுதி உற்பத்திகள் இரண்டினதும் கிராக்கியை முன்னோக்கித் தள்ளின. நாட்டின் விவசாய உற்பத்திக்கு வரட்சி மற்றும் வெள்ளம் போன்ற பாதிப்பான காலநிலைகள் இடையூறாக இருந்த அதே நேரம், 2012 ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரத்தில் சவால் மிக்க ஒரு ஆண்டாகவே தொடர்ந்துமிருந்தது. முக்கியமாக யுரோ வலய நெருக்கடிகளையும், ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை-களையும் குறிப்பிடலாம். இவ்வளவு காரணிகளுக்கு மத்தியிலும் இலங்கையின் காப்புறுதித் தொழில் 2012 இன் போது தொடர்ந்தும் வளர்ச்சி கண்டது.

2012 இல் நீண்டகால காப்புறுதி கட்டண தொழிலிலிருந்து பெறப்பட்ட மொ.எ.கா.க. தொகை ரூபா 37,469 மில்லியனாகவும் (2011 ரூபா 35,162 மில்) 2011யை விட 6.56% வளர்ச்சி வீதமாகவும் பதிவு செய்யப்பட்டது. 2012 இல் பொது காப்புறுதி கட்டண தொழிலிருந்து பெறப்பட்ட மொ.எ.கா.க. தொகை ரூபா 49,683 மில்லியனாகவும் (2011 ரூபா 43,329 மில்) 2011 உடன் ஒப்பிடும்போது 14.67% குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்தது. மொத்த மொ.எ.கா.க. இன் நீண்டகால காப்புறுதி தொழில் 2012 இல் 42.99% மாக கணக்கிடப்பட்டது. (2011 இல் 44.8%) அதே நேரம், மொத்த மொ.எ.கா.க. இன் பொது காப்புறுதி தொழில் 2012. இல் 57.01% மாக கணக்கிடப்பட்டது. (2011 இல் 55.20%) காப்புறுதி கம்பனிகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு, 2012 இன் பொது காப்புறுதி வியாபாரம் தொடர்பாக SRCC & TC கட்டணங்களின் தொகை ரூபா 2,250 மில்லியனாக இருந்தது. (2011 ரூ. 1950 மில்) எனவே, மொ.எ.கா.க. உள்ளடங்களான SRCC & TC) தொகை ரூபா 51,983 மில்லியனாகியது. (2011 ரூபா 45,279 மில்).

2011 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,761.11 இலிருந்து, 2012 இல் ரூபா 4,287.28 ஆக சனத்தொகையின் தலா ஆள் ஒருவருக்கான கட்டண வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் காப்புறுதி செறிவு அதிகரித்துள்ளது. 13.99% வளர்ச்சியை அடைந்தது இதற்கான பிரதான காரணமாயமைந்தது. அத்துடன் 2012 இல் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கட்டண வருமானத்தின் அதிகரிப்பும், ஆண்டின் நடுவில் சனத்தொகையில் ஏற்பட்ட வரையறைக்குட்பட்ட வீழ்ச்சியு மாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீத மொன்றாக உள்ள மொத்த காப்புறுதி கட்டணத்தின் ஊடுருவல் 2012 இல் 1.15% மாகவும் அதே நேரம் 2011 இற்கான ஊடுருவல் மட்டங்கள் 1.20% மாக பதிவு செய்யப்பட்டிருந்தும் 2012 இன் வீழ்ச்சியை சுட்டிக்காட்டின. நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி வியாபாரத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான ஊடுருவல் மட்டங்களின் தொகை முறையே 0.49% (2011 0.54%) மாகவும் 0.66% (2011 0.66%) மாகவும் காணப்பட்டன. இது 2011 உடன் ஒப்பிடும் போது நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுருவல் மட்டம் குறைவாகவே பிரதிபலிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2011 இல் பதிவு செய்யப்பட்ட அதே ஊடுருவல் மட்டத்தையே பொது காப்புறுதி வியாபாரம் தொடர்ந்தும் பேணியது.

2012 இன் போது, காணப்பட்ட குறைந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்த மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணத்திற்கு எதிரான உயர் வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலவிய வளர்ச்சி வீதம், ஊடுருவல் மட்டத்தின் வீழ்ச்சிக்கு பிரதான பங்களிப்பாளராக இருந்தது

**அட்டவணை 1**

***காப்புறுதி தவணைக் கட்டண வருமானமும் - ஊடுருவலும்***

| | 2008 | 2009 | 2010 | 2011(அ) | 2012(ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 23,613 | 24,005 | 31,152 | 35,162 | 37,469 |
| பொது காப்புறுதி (ரூ. மில்) | 34,558 | 33,548 | 35,101 | 43,329 | 49,683 |
| மொத்த தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) | 58,171 | 57,553 | 66,253 | 78,491 | 87,152 |
| மொத்த தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் (%) | 12.10 | (1.06) | 15.12 | 18.47 | 11.03 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ. மில்)* | 4,411 | 4,835 | 5,604 | 6,544 | 7,582 |
| மொ.உ.உ. வளர்ச்சி வீதம் (%)* | 6.0 | 3.5 | 8.0 | 8.2 | 6.4 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்த தொழில் தவணைக் கட்டணம்) | 1.32 | 1.19 | 1.18 | 1.20 | 1.15 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம் | 0.54 | 0.50 | 0.56 | 0.54 | 0.49 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம் | 0.78 | 0.69 | 0.63 | 0.66 | 0.66 |
| காப்புறுதி செறிவு (மொத்த தொழில் தவணைக் கட்டண வருமானம் / சனத்தொகை) ரூ. | 2,877.33 | 2,814.33 | 3,207.91 | 3,761.11 | 4,287.28 |
| ஆண்டின் மத்தியில் சனத்தொகை ('000*) | 20,217 | 20,450 | 20,653 | 20,869 | 20,328 |

** மூலகம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2012*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2012 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*
2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*
3) *2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுகளிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளி விபர மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள்

முன்னைய ஆண்டுகளைப் போலவே 2012 இன் போதும், காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்ததுடன் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 301,917 மில்லியன் (2011 ரூ. 261,412 மில்) என பதிவும் செய்யப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 15.49% அதிகரிப்பாக இருந்தது. அட்டவணை 2 இல் காண்பிக்கப்பட்டவாறு கடந்த ஐந்து ஆண்டுகளில், காப்புறுதி கம்பனிகளுக்கு சொந்தமான மொத்த சொத்துகள், இரு மடங்கு அளவில் அதிகரித்தது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

அட்டவணை 2 இல் காட்டப்பட்டவாறு 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகள் ரூபா 182,826 மில்லியனாக (2011 ரூ. 165,519 மில்) 10.46% வளர்ச்சியை பதிவு செய்தது. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குடமையாளர்களின் சொத்துகள் ரூபா 124,209 மில்லியனாக இருந்ததுடன் (2011: ரூ. 100,192 மில்) 2011 உடன் ஒப்பிடும் போது 2012 இல் 23.97% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தையும் காண்பித்தது.

### அட்டவணை 2

### காப்புறுதி கம்பனிகளின் சொத்துகள்

| | 2008 | 2009 | 2010 | 2011(அ) | 2012(ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 97,730 | 118,305 | 139,647 | 165,519 | 182,826 |
| பொது காப்புறுதியும் பங்குரிமையாளர்களும் (ரூ. மில்) | 58,263 | 62,740 | 82,450 | 100,192 | 124,209 |
| **மொத்தம்** | **155,993** | **181,045** | ***219,102** | ***261,412** | ***301,917** |

** அட்டவணை 3 இற்கு அமைவாக, கலவை காப்புறுதி கம்பனிகளின் கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத்தல்கள் (நீண்டகாலம் மற்றும் பொது) என்பவை நீக்கப்பட்டுள்ளன.*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2012 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*
2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*
3) *2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுகளிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

### சொத்துகளின் விநியோகம்

நீண்டகால காப்புறுதி மற்றும் பொது பொதுக்காப்புறுதி/பங்குடமை பிரிவுகளின் கீழ் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி கம்பனிகள் மத்தியில் நிலவிய சொத்துகளின் விநியோகம் அட்டவணை 3 இல் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. பிரிவுகளுக்கிடையிலான சொத்து மீதியான ரூபா 5,118 மில்லியன் நீக்கப்பட்ட பின்னர் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள் ரூபா 301,917 மில்லியனாகும் (2011: 261,412) ரூபா 120,143 மில்லியன் (2011 ரூ. 102,149 மில்) பெறுமதியான சொத்துகளை பதிவு செய்து, காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகளின் 39.79% யை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் உரிமையாக்கிக் கொண்டது. அத்துடன் 2011 ஐ போலவே காப்புறுதி கம்பனிகளின் மத்தியில் மிகப் பெரியளவிலான சொத்துகளின் உரிமையாளராகவும் இருந்தது. சிலிங்கோ மற்றும் ஏஜஏ இரண்டும், 2வது 3வது பெரியளவு சொத்து உரிமையாளர்களாக முறையே ரூபா 66,933 மில்லியன் (22.18%) கவும் ரூபா 40,947 மில்லியனாகவும் (13.56%) காணப்பட்டது. காப்புறுதி தொழிலின் சொத்து உரிமையில் 4வது மற்றும் 5 வது இடங்களைப் பெற்று மொத்த சொத்துகளின் 8.50% ஐயுஏஎல் உம் 5.25% ஐ ஜனசக்தியும் முறையே பெற்றன.

காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள் 89.28% (2011: 89.88%) முதல் ஐந்து கம்பனிகளின் மத்தியில் பகிரப்பட்ட அதே நேரம் மிகுதி 10.72% சொத்துகளும் ஏனைய பதினைந்து கம்பனிகளினதும் உரிமையாக இருந்தன.

# புள்ளி விபர மீளாய்வு

## அட்டவணை 3

### காப்புறுதியாளர் - ரீதியாக மொத்த சொத்துகளின் பகுப்பாய்வு

| காப்புறுதி | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011(அ) | | | | | 2012(ஆ) | | | | |
| | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி பங்குரிமையாளர்/ (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத் தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி/ பங்குரிமையாளர் (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத் தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % |
| ஏஜஏ | 30,037,867 | 7,073,863 | - | 37,111,730 | 14.20 | 33,250,987 | 7,695,830 | 189 | 40,946,628 | 13.56 |
| ஏஜஜி | - | 888,565 | - | 888,565 | 0.34 | - | 877,850 | - | 877,850 | 0.29 |
| அலையன்ஸ் பொது | - | 1,799,715 | - | 1,799,715 | 0.69 | - | 2,042,415 | - | 2,042,415 | 0.68 |
| அலையன்ஸ் ஆயுள் | 486,094 | - | - | 486,094 | 0.19 | 621,508 | - | - | 621,508 | 0.21 |
| அமானா டக்காபுல் | 555,382 | 1,431,698 | 55,823 | 1,931,257 | 0.74 | 778,592 | 1,421,675 | 62,580 | 2,137,687 | 0.71 |
| ஆர்ப்பிக்கோ | 515,131 | - | - | 515,131 | 0.20 | 561,970 | - | - | 561,970 | 0.19 |
| ஏசியன் அலையன்ஸ் | 2,353,009 | 2,365,947 | - | 4,718,956 | 1.81 | 3,396,594 | 2,309,537 | - | 5,706,131 | 1.89 |
| சிலிங்கோ | 44,670,240 | 19,519,196 | 3,255,409 | 60,934,027 | 23.31 | 47,987,326 | 23,133,596 | 4,167,527 | 66,953,395 | 22.18 |
| கொண்டினன்டல் | - | 1,230,942 | - | 1,230,942 | 0.47 | - | 1,316,043 | - | 1,316,043 | 0.44 |
| கோபரேடிங் | 585,041 | 1,398,203 | 11,862 | 1,971,382 | 0.75 | 714,785 | 1,703,521 | 30,655 | 2,387,651 | 0.79 |
| எச்என்பிஏ | 3,201,601 | 2,843,252 | - | 6,044,853 | 2.31 | 3,875,310 | 3,143,968 | - | 7,019,278 | 2.32 |
| ஜனசக்தி | 5,147,108 | 7,825,564 | - | 12,972,672 | 4.96 | 6,263,405 | 9,580,533 | - | 15,843,938 | 5.25 |
| எல்ஜசி | 1,179,054 | - | - | 1,179,054 | 0.45 | 1,441,424 | - | - | 1,441,424 | 0.47 |
| லோலெக் | 64,320 | 598,610 | 13,305 | 649,625 | 0.25 | 125,900 | 1,753,956 | 3,814 | 1,876,042 | 0.62 |
| எம்பிஎஸ்எல் | 131,684 | 872,558 | - | 1,004,242 | 0.38 | 191,718 | 1,116,643 | - | 1,308,361 | 0.43 |
| ஓரியன்ட் | - | 776,924 | - | 776,924 | 0.30 | - | 928,425 | - | 928,425 | 0.31 |
| பீபள்ஸ் | - | 2,422,827 | - | 2,422,827 | 0.93 | - | 3,163,419 | - | 3,163,419 | 1.05 |
| சனச | 232,413 | 566,133 | - | 798,546 | 0.31 | 361,629 | 612,633 | - | 974,262 | 0.32 |
| எஸ்எல்ஐசி | 61,069,553 | 41,608,056 | 498,630 | 102,178,979 | 39.08 | 65,205,480 | 54,937,824 | - | 120,143,304 | 39.79 |
| யுஏஎல் | 15,290,943 | 6,970,169 | 464,977 | 21,796,135 | 8.33 | 18,048,978 | 8,471,496 | 853,645 | 25,666,829 | 8.50 |
| **மொத்தம்** | **165,519,440** | **100,192,223** | **4,300,007** | **261,411,656** | **100** | **182,825,606** | **124,209,364** | **5,118,410** | **301,916,560** | **100** |

** மூலகம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2012*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2012 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்மபிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை.*
2) *ஒவ்வொரு வகைப்படுத்தலிலிருந்தும் கிடைக்க வேண்டியவற்றின் தொகைகள் உள்வகைப்படுத்தலின் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கலவை காப்புறுதி கம்பனி வகைப்படுத்தலின் நீண்டகால மற்றும் பொது காப்புறுதி வகைப்படுத்தல்.*
3) *அலையன்ஸ் ஆயுள், ஆர்பிக்கோ மற்றும் எல்ஜசி பங்குரிமையாளர்களுக்கு சொந்தமான சொத்துகள், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன.*
4) *ஜனசக்தி மற்றும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் சொத்துகள் ஒன்றாக அறிக்கையிடப்பட்டுள்ளன.*

## வரைபடம் 1

### கம்பனிரீதியாக சொத்துகளின் அவதானிப்பின் பகுப்பாய்வு 2012 டிசம்பர் 31



# புள்ளி விபர மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளின் பங்குதாரர் நிதிகள்

அட்டவணை 4 இல் காட்டப்பட்டவாறு காப்புறுதி கம்பனிகளின் மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 18,832 மில்லியனாக அதிகரித்தது. இது 2011 டிசம்பர் 31 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 51,973 மில்லியனை விட அதிகமாகவும், குறிப்பிடத்தக்க 32.44% வளர்ச்சியுமாகும்.

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள், பங்கு மூலதன தொகையாக ரூபா 20,231 மில்லியனையும், ஒதுக்குகளாக ரூபா 48,602 மில்லியனையும் கொண்டிருந்தது. 2011 இல் 47.59% யைவிட குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக 53.47% யை 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான மொத்த பங்குதாரர் நிதியத்தின் அரைப்பங்கிற்கும் அதிகமான தொகையை இ.கா.கூ. பதிவு செய்தது. சிலிங்கோவும், யு.ஏ.எல் உம் மொத்த பங்குதாரர் நிதியின் முறையே 14.53% ஐயும் 45.91 வீதத்தையும் பெற்று இரண்டாவது மூன்றாவது இடத்தைப் பெற்று மொத்த பங்குதாரர் நிதியத்தின் மிகப் பெரிய பங்காளர்களாக இருந்தன. ஏ.ஐ.ஏ. மற்றும் ஜனசக்தி என்பவை மொத்த பங்குரிமையாளர் நிதியின் 5.84% யையும் 4.91% பெற்றன. இந்த ஐந்து கம்பனிகளும் கூட்டாக, காப்புறுதி கம்பனிகள் அனைத்திற்கும் சொந்தமான மொத்த பங்குரிமை நிதிகளின் 84.66% ஐ (2011: 82.28%) தம்மிடம் வைத்திருந்தன.

### அட்டவணை 4
### காப்புறுதி கம்பனிகளின் பங்குரிமையாளர்கள் நிதிகள்

| காப்புறுதியாளர் | 2011(அ) | | 2012(ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குரிமை யாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % | பங்கு மூலதனம் (ரூ.'000) | மொத்த ஒதுக்கங்கள் (ரூ. '000) | மொத்த பங்குரிமை யாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % |
| ஏசியன் அலையன்ஸ் | 3,547,019 | 6.82 | 300,000 | 3,717,462 | 4,017,462 | 5.84 |
| ஏஐஜி | 233,964 | 0.45 | 536,265 | (306,926) | 229,339 | 0.33 |
| அலையன்ஸ் பொது | 680,780 | 1.31 | 250,000 | 545,430 | 795,430 | 1.16 |
| அலையன்ஸ் ஆயுள் | 222,543 | 0.43 | 492,499 | (337,624) | 154,874 | 0.23 |
| அமானா டக்காபுல் | 775,144 | 1.49 | 1,250,001 | (429,266) | 820,735 | 1.19 |
| ஆர்ப்பிக்கோ | 511,703 | 0.98 | 503,000 | (34,004) | 468,996 | 0.68 |
| ஏசியன் அலையன்ஸ் | 1,245,631 | 2.40 | 1,062,500 | 362,451 | 1,424,951 | 2.07 |
| சிலிங்கோ | 8,524,906 | 16.40 | 1,424,822 | 8,579,237 | 10,004,059 | 14.53 |
| கொண்டினென்டல் | 454,866 | 0.88 | 500,000 | 6,953 | 506,953 | 0.74 |
| கோபரேடிவ் | 722,319 | 1.39 | 561,527 | 274,622 | 836,149 | 1.21 |
| எச்என்பிஏ | 1,615,932 | 3.11 | 1,171,875 | 696,406 | 1,868,281 | 2.71 |
| ஜனசக்தி | 2,975,041 | 5.72 | 1,496,000 | 1,880,380 | 3,376,380 | 4.91 |
| எல்ஐசி | 408,343 | 0.79 | 500,000 | 38,001 | 538,001 | 0.78 |
| லோலெக் | 237,695 | 0.46 | 600,000 | (21,853) | 578,147 | 0.84 |
| எம்பிஎஸ்எல் | 395,350 | 0.76 | 779,487 | (375,211) | 404,276 | 0.59 |
| ஓரியன்ட் | 733,739 | 1.41 | 750,000 | (76,439) | 673,561 | 0.98 |
| பீபள்ஸ் | 594,534 | 1.14 | 600,000 | 263,002 | 863,002 | 1.25 |
| சனச | 369,956 | 0.71 | 332,686 | 69,489 | 402,175 | 0.58 |
| எஸ்எல்ஐசி | 24,734,068 | 47.59 | 6,000,000 | 30,805,018 | 36,805,018 | 53.47 |
| யுஏஎல் | 2,989,668 | 5.75 | 1,119,873 | 2,944,804 | 4,064,677 | 5.91 |
| **மொத்தம்** | **51,973,202** | **100** | **20,230,534** | **48,601,931** | **68,832,465** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

*2) 2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிட்ட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுகளிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளி விபர மீளாய்வு

### பாரிய நிதி துறைகளின் மொத்த சொத்துகளின் விநியோகம்

அட்டவணை 5 இல் காட்டப்பட்டவாறு 17.18% இனால் 2011 டிசம்பர் 31 அன்று பதிவு செய்யப்பட்ட ரூபா 7,708.3 பில்லியனிலிருந்து 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 9,032.9 பில்லியனாக பொருளாதாரத்தின் முக்கிய நிதி துறைகளான மொத்த சொத்துகள் அதிகரித்தன. வங்கித் துறை மொத்த சொத்துகளின் 70.6% மாகவும் ரூபா 6381.4 பில்லியனுக்கான சொத்துகளாகவும் கணக்கிடப்பட்டது. சேமிப்பு நிறுவனங் களும் ஏனைய ஒப்பந்தம் செய்த வைப்புகள் எடுக்கும் நிறுவனங்களும் முறையே மொத்த சொத்துகளின் 16% யையும் 6.9% யையும் பெற்றன. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 301.9 மில்லியன் பெறுமதியான சொத்துகளுக்கு காப்புறுதி துறை உரிமையுடையதாக இருந்ததுடன், இது மொத்த சொத்து களின் 3.3% மாகவும் இருந்தது. அத்துடன் 2011 இல் பதிவு செய்யப்பட்ட மொத்த சொத்துகளான 3.4% உடன் ஒப்பிட மிக சிறிதளவான சரிவாகவும் அவதானிக்கப்பட்டது. 2008 இலிருந்து 2012 வரையிலும் ஆண்டுதோறும் வங்கித் துறைக்கு சொந்தமான சொத்து பங்கு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. 2010 இலிருந்து 2012 வரை ஏயை வைப்பு எடுக்கும் நிதி நிறுவனங்களின் சொத்துகள் தொடர்ந்து அதிகரித்தன. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு பெரிய நிதி துறைகளின் சொத்துகளின் பகிர்வு வரைபடம் 2 இல் காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை 5
**பாரிய நிதி துறைகளின் மொத்த சொத்துகளின் பங்கீடு**

| நிதியியல் துறைகள் | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | | 2009 | | 2010 | | 2011 | | 2012 | |
| | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன | % |
| வங்கித்துறை | 3,294.6 | 68.1 | 3,832.0 | 68.2 | 4,527.3 | 68.9 | 5,375.6 | 69.7 | 6,381.4 | 70.6 |
| ஏனைய வைப்புகள் எடுக்கும் நிதி நிறுவனங்கள் | 285.9 | 5.9 | 315.1 | 5.6 | 295.0 | 4.5 | 427.1 | 5.5 | 621.2 | 6.9 |
| ஏனைய விசேட நிதி நிறுவனங்கள் | 239.7 | 5.0 | 265.3 | 4.7 | 354.3 | 5.4 | 338.8 | 4.4 | 282.8 | 3.1 |
| ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்கள் | 863.8 | 17.8 | 1,022.6 | 18.3 | 1,178.7 | 17.9 | 1,305.4 | 16.9 | 1,445.6 | 16.0 |
| காப்புறுதி கம்பனிகள் | 156.0 | 3.2 | 181.0 | 3.2 | 219.10 | 3.3 | 261.4(a) | 3.4 | 301.9(b) | 3.3 |
| **மொத்தம்** | **4,840.0** | **100** | **5,616.0** | **100** | **6,574.4** | **100** | **7,708.3** | **100** | **9,032.9** | **100** |

*மூலகம்:*

*இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2012 (சபைக்கு கிடைத்த தரவுகளின் அடிப்படையில் காப்புறுதி கம்மபனிகள் மற்றும் ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்கள் மீள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

### வரைபடம் 2
**பாரிய நிதி துறைகளின் சொத்துகளின் பங்கீடு - 31 டிசம்பர் 2012**



# புள்ளி விபர மீளாய்வு

### 2012 டிசம்மபர் 31 அன்றுள்ளவாறு கிளை வலையமைப்பும், பணியாளர்களும் முகவர்களும்

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தீவில் செயற்பட்ட காப்பறுதி கம்பனிகளின் கிளை வலையமைப்பு, பணியாளர்கள் மற்றும் முகவர்களின் பட்டியல் அட்டவணை 6இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் தீவெங்கிலுமான கிளை வலையமைப்பு 1,184 கிளைகளாக இருந்தன. மிக அதிகமான 390 கிளைகள் மேல் மாகாணத்திலும், தெற்கு வட மேற்கு மாகாணங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரிய வலையமைப்பு மாக முறையே 143 மற்றும் 116 கிளைகளுமிருந்தன. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு செயற்பாட்டில் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையாக 71 கிளைகளை கிழக்கு மாகாணம் கொண்டிருந்தது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் 12.471 பணியாளர்களை காப்புறுதி கம்பனி பணிக்கமர்த்தியுள்ளது காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் மொத்தப் பணியாளர்களில் 61.77% பணியாளர்கள் மேல் மாகாணத்தில் காணப்பட்டனர். 7,704 பணியாளர்கள் மேல் மாகாணத்தில் பணியாற்றினர். தெற்கு மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே 948 மற்றும் 800 பணியாளர்களை பணிக்கமர்த்தி இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகக் கூடிய இடங்களைப் பெற்றிருந்தது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான 343 பணியாளர்களை கிழக்கு மாகாணம் கொண்டிருந்ததுடன் இது காப்புறுதி கம்பனிகளின் மொத்த பணியாளர்களின் 2.75% யை பிரதிநிதித்துவப் படுத்தவும் செய்தது. காப்புறுதி கம்பனிகளின் மொத்த முகவர்களின் 39% யை பிரதி நிதித்துவப்படுத்துவதாக மேல் மாகாணம் காணப்பட்டது.

காப்புறுதி கம்பனிகளில் இணைக்கப் பட்டிருந்த முகவர்களின் மொத்த எண்ணிக்கை 36,801 ஆகவும் இவர்களில் 14,351 முகவர்கள் மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவதாகவுமிருந்தனர். கிழக்கு மாகாணம் 1,916 முகவர்களுடன், மிக குறைந்தளவான முகவர்களைக் கொண்டிருந்தது. தீவெங்கிலும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, மேல் மாகாணத்தில் அவதானிக்கப்பட்ட கிளைகள், பணியாளர்கள் மற்றும் முகவர்கள் மட்டம் மிக உயர்வாக இருந்ததை அட்டவணை 6 காண்பிக்கின்றது. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தீ வெங்கிலும் உள்ள 9 மாகாணங்களில் ஒவ்வொன்றினதும் கிளை வலையமைப்பு, பணியாட்களின் எண்ணிக்கை மற்றும் முகவர்களின் எண்ணிக்கை என்பவற்றை வரைபடம் 3 காண்பிக்கின்றது.

### அட்டவணை 6

***212 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு செயற்பட்ட கிளைகள் பணியாட்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை***

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | பணியாட்களின் எண்ணிக்கை | முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 112 | 800 | 3,338 |
| கிழக்கு மாகாணம் | 71 | 343 | 1,916 |
| வட மத்திய மாகாணம் | 95 | 540 | 2,363 |
| வட மேற்கு மாகாணம் | 116 | 780 | 3,592 |
| வடக்கு மாகாணம் | 83 | 364 | 2,704 |
| சம்பரகமுவ மாகாணம் | 95 | 500 | 2,257 |
| தென் மாகாணம் | 143 | 948 | 4,080 |
| ஊவா மாகாணம் | 79 | 492 | 2,200 |
| மேல் மாகாணம் | 390 | 7,704 | 14,351 |
| **மொத்தம்** | **1,184** | **12,471** | **36,801** |

### வரைபடம் 3

***2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கிளை வலையமைப்பு, பணியாளர்கள் மற்றும் முகவர்கள்***




□ கிளைகளின் எண்ணிக்கை ♦ முகவர்களின் எண்ணிக்கை
● பணியாட்களின் எண்ணிக்கை

# புள்ளி விபர மீளாய்வு

### நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

#### மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணை கட்டணம்

அட்டவணை 7 இல் காட்டப்பட்டவாறு 2012 இல் 6.56% இனால் (2011: 12.87%) அதிகரித்து, ரூபா 37,469 மில் (2011: ரூபா 35.162 மில்) பெறுமதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணத்தை நீண்டகால காப்புறுதி வியாபாரம் உற்பத்தி செய்தது.

நீண்டகால காப்புறுதி சந்தையில் சிலிங்கோ தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை பேணியது. 2012 இல் ரூபா 10,829 மில்லியனை (2011 ரூபா 9,8116 மில்) மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணமாக உற்பத்தி செய்ததுடன் மொ.எ.கா.க இன் மொத்தமாக 28.90% ஐயும் பதிவு செய்தது. 2012 இல் சந்தையில் இரண்டாவது, மூன்றாவது இடங்களை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமும் ஏ.ஐ.ஏவும் பெற்றிருந்தன. மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணமாக ரூ. 7,369 மில் ஐயும் (2011: ரூ. 6,734 மில்) மற்றும் ரூபா 6,496 மில். (2011: ரூ. 7,846 மில்) ஐயும் சந்தைப் பங்குகளாக முறையே 19,67% ஐயும் 17.34% ஐயும் கொண்டிருந்தன. 2011 இல் நீண்டகால காப்புறுதி சந்தையில் மூன்றாவது இடத்திலிருந்த இ.கா.கூ. 2012 இல் இரண்டாவது இடத்திற்கு நகர்ந்தது. அவ்வாறே 2011 இல் இரண்டாவது இடத்திலிருந்த ஏ.ஐ.ஏ மூன்றாவது இடத்திற்கு கீழ் நோக்கி இறங்கியது. யூ.எ.எல் உம் ஆசியன் அலையன்ஸ் உம் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணத்தின் ரூபா 5,106 மில்லியனையும் (2011: ரூ. 4,472 மில். ஐயும், மற்றும் ரூபா 2034 மில்லியன் (2011: ரூ. 1579 மில்) ஐயும் பெற்று முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது மொ.எ.கா.க. யின் நீண்டகால காப்புறுதி துறையின் உற்பத்தியாளர்களாக இருந்தன. இவை முறையே 13.63%ஐயும் 5.43% யையும் சந்தைப் பங்குகளாக கொண்டிருந்தன. 2011 இல் மொஎகாக இன் ஐந்தாவது பெரிய இடத்திலிருந்த ஜனசக்தி காப்புறுதி 2012 இல் ஆறாவது இடத்திற்கு வீழ்ந்ததாயினும் அதன் சந்தை பங்கு 5.40% மாக அதிகரித்தது. 2012 இல் மொத்த நீண்டகால காப்புறுதியின் மொஎகாக இன் 84.97 மாக முதல் ஐந்து மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கூட்டுத் தொகை காணப்பட்டது. நீண்டகால காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய மொஎகாக இன் கம்பனி ரீதியான சந்தைப் பங்கு வரைபடம் 4 இல் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

**அட்டவணை 7**

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களின் சந்தைப் பங்கு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2008 | | 2009 | | 2010 | | 2011(அ) | | 2012(ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ | 4,342,218 | 18.39 | 4,632,490 | 19.30 | 7,783,925 | 24.99 | 7,846,447 | 22.32 | 6,495,863 | 17.34 |
| அலையன்ஸ் ஆயுள் | 4,013 | 0.02 | 101,816 | 0.42 | 204,814 | 0.66 | 351,299 | 1.00 | 532,142 | 1.42 |
| அமானா டக்காபுல் | 188,676 | 0.80 | 207,097 | 0.86 | 240,156 | 0.77 | 303,786 | 0.86 | 359,919 | 0.96 |
| ஆர்ப்பிக்கோ | | - | | - | | - | - | - | 100,280 | 0.27 |
| ஏசியன் அலையன்ஸ | 970,077 | 4.11 | 1,009,031 | 4.20 | 1,242,608 | 3.99 | 1,579,191 | 4.49 | 2,034,084 | 5.43 |
| சிலிங்கோ | 8,257,279 | 34.97 | 7,522,328 | 31.34 | 8,786,120 | 28.21 | 9,815,943 | 27.91 | 10,829,470 | 28.90 |
| கோப்பரடிவ் | 131,004 | 0.55 | 149,401 | 0.62 | 233,540 | 0.75 | 269,579 | 0.77 | 312,056 | 0.83 |
| எச்என்பிஏ | 914,170 | 3.87 | 984,866 | 4.10 | 1,084,480 | 3.48 | 1,290,367 | 3.67 | 1,500,028 | 4.00 |
| ஜனசக்தி | 1,426,160 | 6.05 | 1,431,628 | 5.96 | 1,685,409 | 5.42 | 1,871,986 | 5.32 | 2,025,075 | 5.40 |
| எல்ஐசி | 255,099 | 1.08 | 251,150 | 1.05 | 252,656 | 0.81 | 295,859 | 0.84 | 301,721 | 0.81 |
| லொலெக் | - | - | - | - | - | - | 51,427 | 0.15 | 106,238 | 0.28 |
| எம்பிஎஸ்எல் | 52,637 | 0.22 | 55,606 | 0.24 | 89,984 | 0.28 | 143,156 | 0.41 | 192,780 | 0.52 |
| சன்சா | 69,617 | 0.29 | 61,563 | 0.26 | 73,030 | 0.23 | 128,113 | 0.36 | 203,616 | 0.54 |
| எஸ்எல்ஐசி | 4,497,919 | 19.05 | 4,819,860 | 20.08 | 6,009,859 | 19.29 | 6,743,073 | 19.18 | 7,369,027 | 19.67 |
| யுஏஎல் | 2,503,887 | 10.60 | 2,778,184 | 11.57 | 3,465,505 | 11.12 | 4,471,627 | 12.72 | 5,106,323 | 13.63 |
| மொத்தம் | **23,612,756** | **100** | **24,005,020** | **100** | **31,152,086** | **100** | **35,161,853** | **100** | **37,468,622** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **14.04** | | **1.66** | | **29.77** | | **12.87** | | **6.56** | |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளி விபர மீளாய்வு

**வரைபடம் 4**

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களின் சந்தை பங்கு - நீண்டகால காப்புறுதி வியாபாரம் - 2012**




### நீண்டகால காப்புறுதி வியாபாரம் - முதல் ஐந்து மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டண உற்பத்தியாளர்கள்

நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக, கடந்த ஐந்து ஆண்டுகளாக (2008 - 2012) மொஎகாக இன் 2012 இன் முதல் ஐந்து உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்கை வரைபடம் 5 காண்பிக்கின்றது.

2008 இலிருந்து 2011 வரை சிலிங்கோவின் சந்தைப் பங்கில் தொடர்ச்சியான ஒரு வீழ்ச்சியை அவதானிக்க முடியுமாக இருந்ததாயினும், கம்பனி 2011 யை விட 2012 இல் மிக சிறியளவில் தனது சந்தைப் பங்கை அதிகரிக்க முடிந்ததுடன் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் தொடர்ந்தும், தன்னை சந்தையில் முன்னணியாளராக நிலை நிறுத்திக் கொண்டது. 2012 இல், 28.90% (2011: 27.92%) மாக தனது சந்தைப் பங்கை பதிவு செய்தது.

மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணத்தின்படி, சந்தையில் இரண்டாவது இடத்தை அடையக் கூடியதாக, 2012 இல் அதன் சந்தைப் பங்கை இகாகூ முன்னேற்றியது. குறிப்பிடும்படியான அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி இன்றி கடந்த ஐந்து ஆண்டுகளின் போது 19% - 20% இற்கும் இடையிலான சந்தைப் பங்கை இகாகூ பேணி வந்தது.

2012 இல் சந்தைப் பங்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக 2010 இலும் 2011 இலும் நீண்டகால காப்புறுதி சந்தையில் பேணி வந்த இரண்டாவது இடத்தை ஏஐஏ இழந்தது. கம்பனியின் சந்தைப்பங்கு 2011 இன் 22.32% இலிருந்து 2012 இல் 17.34% வீதமாக வீழ்ச்சியடைந்தது. மேலும், 2008 இலிருந்து பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த சந்தைப் பங்கை 2012 இன் 17.34% பதிவு செய்தது. 2008 இலிருந்து 2012 வரை சந்தையில் தொடர்ந்து நான்காவது இடத்தை யுஏஎல் பேணி வந்ததுடன், அதன் சந்தைப் பங்கு 2010 இலிருந்து 2012 வரை கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. 2012 இல் 13.63% (2011: 12.72%) யை சந்தைப் பங்காக யுஏஎல் பெற்றது.

2012 இன் நீண்டகால காப்புறுதி துறையின் மொஎகாக இல் அவதானிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாக, 2008 இலிருந்து 2011 வரை ஜனசக்தியிடமிருந்த ஐந்தாவது சந்தை இடத்தை ஆசியன் அலையன்ஸ் தனது சந்தைப் பங்கின் அதிகரிப்பின் ஊடாக பெற்றதாகும்.

# புள்ளி விபர மீளாய்வு

**வரைபடம் 5**

***2012 இன் முதல் ஐந்து மொ.எ.கா.க (GWP) உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்கு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்***




| | சிலிங்கோ | எஸ்எல் ஐசி | ஏஐஏ | யுஎஎல் | ஏசியன் அலை-யன்ஸ் |
|---|---|---|---|---|---|
| 2008 | 34.97 | 19.05 | 18.39 | 10.60 | 4.11 |
| 2009 | 31.34 | 20.08 | 19.30 | 11.57 | 4.20 |
| 2010 | 28.21 | 19.29 | 24.99 | 11.12 | 3.99 |
| 2011(அ) | 27.91 | 19.18 | 22.32 | 12.72 | 4.49 |
| 2012(ஆ) | 28.90 | 19 .67 | 17.34 | 13.63 | 5.43 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

**நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதி கொள்கைகள்**

வரைபடம் 6 இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2012 ஆம் ஆண்டின்போது, காப்புறுதி கம்பனிகள் 514,472 புதிய ஆயுட் காப்புறுதி காப்பீடுகளை வழங்கியுள்ளன. (2011: 526,023) 2011 இன் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 2,355,449 காப்புறுதி காப்பீடுகளுக்கு எதிராக 2012 இன் இறுதியில் 2,461,573 பயன்பாட்டு ஆயுள் காப்புறுதி காப்பீடுகள் காணப்பட்டன. மொத்த சனத்தொகையின் சதவீதமாக பெறப்பட்ட ஆயுள் காப்புறுதி, 2011 இல் பதிவு செய்யப்பட்ட 11.3% உடன் ஒப்பிடும் போது 2012 இல் 12.1% மாக இருந்தது. இது 0.8% அதிகரிப்பாகும். 2012 இல் ஊழியர் படையின் 29.1% யை ஆயுள் காப்புறுதி காப்பீடு பிரதிபலித்தது. (2011: 27.5%)

**வரைபடம் 6**

***வழங்கப்பட்ட ஆயுள் காப்புறுதி காப்பீடுகளின் எண்ணிக்கையும், செயற்பட்டுக் கொண்டிருக்கும் காப்புறுதிகளும்***




| | 2008 | 2009 | 2010 | 2011(அ) | 2012 (ஆ) |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதிகளின் எண்ணிக்கை | 567,621 | 468,317 | 516,139 | 526,023 | 514,472 |
| செயற்பட்டுக் கொண்டி ருக்கும் காப்புறுதிகளின் எண்ணிக்கை | 2,082,358 | 2,068,548 | 2,214,976 | 2,355,449 | 2,461,573 |
| மொத்த சனத் தொகை யின் %இல் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புதிய ஆயுள் காப்புறுதியின் எண்ணிக்கை | 10.3 | 10.1 | 10.7 | 11.3 | 12.1 |
| ஊழியர் படையின் % இல் செயற்படும் ஆயுள் காப்புறுதியின் எண்ணிக்கை | 25.8 | 25.6 | 27.3 | 27.5 | 29.1 |

*மூலகம்:: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2012 (மொத்த சனத்தொகையும், ஊழியர் படையும் இலக்கங்களில்)*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளி விபர மீளாய்வு

### நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகள்

அட்டவணை 8 மற்றும் வரைபடம் 7 இல் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளிடையில் நிலவும் சொத்து வகைப்படுத்தல்கள்.

ரூபா 182,826 மில்லியன் (2011: ரூ. 165,519) பெறுமதியான மொத்த சொத்துகளில், அரசாங்க பிணையங்களில் முதலிடப்பட்டவை ரூபா 97,876 மில்லியன் (2011: ரூபா 84,744) இது நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த சொத்துகளின் 53.54% (2011: 51.20%) மாக கணக்கிடப்பட்டது. ஆண்டு முழுவதும், சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க பிணையங்களின் முதலீடு களுடன் ஒவ்வொரு காப்புறுதி கம்பனி களினதும் நீண்டகால காப்புறுதி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மிகக் குறைந்த நியம முதலீடான 30% இற்கு இணங்கி செயற்படுவதை சபை உறுதிப்படுத்திக் கொண்டது. மேலும் இல. 1 இற்கு அமைவாக, நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் எஞ்சியுள்ள சொத்துகள் முதலிடப்பட்ட வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், மீளாய்வின் கீழ் வரும் ஆண்டில் சொல்லப்பட்டதுடன் இணங்கி செயற்படுவதை சபை உறுதி செய்தது. வைப்புகளின் மீதான முதலீடுகள் ரூபா 31,805 மில் (2011: ரூ. 25,841 மில்) ஆக கணக்கிடப்பட்டதுடன் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் இரண்டாவது மிகப் பெரிய முதலீட்டு பத்திரமாகவும் மொத்த சொத்துகளின் 17.40% (2011: 15.61%) ஐ பதிவு செய்தது. உரிமை மூலதன முதலீடுகள் ரூபா 19,142 மில். (2011: ரூ. 23,113) ஆகவும் மொத்தச் சொத்துகளின் 10,47% மாகவும் (2011: 13.96%) கணக்கிடப்பட்டது.

அரசாங்க பிணையங்கள், காப்புறுதிகள், வைப்புகள் மற்றும் உரிமை பங்கு மூலதனங்கள் அனைத்தும் ஒன்றுபடுத்தப்பட்டு நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துகளின் 81.41% (2011: 80.77%) மாக கணக் கிடப்பட்டது. மிகுதி 18.59% (2011: 19.23%) சொத்துகள் நிறுவன கடன்கள், காணி மற்றும் கட்டிடங்கள், யுனிட் டிரஸ்ட், தங்கம் என்பவற்றில் பிடித்து வைக்கப்பட்டன.

**அட்டவணை 8**

***நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் அவதானிப்பு***

| | 2011(அ) | | 2012(ஆ) | |
|---|---|---|---|---|
| **சொத்துகளின் வகை** | **ரூ. '000** | **%** | **ரூ. '000** | **%** |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 84,743,648 | 51.20 | 97,876,440 | 53.54 |
| உரிமைப் பங்குகள் | 23,113,400 | 13.96 | 19,141,823 | 10.47 |
| நிறுவன கடன்கள் | 10,687,124 | 6.46 | 12,967,889 | 7.09 |
| காணியும் கட்டிடமும் | 5,880,476 | 3.55 | 5,912,017 | 3.23 |
| வைப்புகள் | 25,841,259 | 15.61 | 31,805,243 | 17.40 |
| யுனிட் டிரஸ்ட்ஸ் | 1,292,291 | 0.78 | 1,019,741 | 0.56 |
| தங்கத்தில் முதலீடுகள் | 110,916 | 0.07 | 31,832 | 0.02 |
| காப்புறுதி கடன்கள் | 4,247,196 | 2.57 | 4,833,303 | 2.64 |
| ஏனைய சொத்துகள் | 7,954,503 | 4.80 | 7,721,484 | 4.22 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 1,648,626 | 1.00 | 1,515,834 | 0.83 |
| **மொத்தம்** | **165,519,439** | **100** | **182,825,606** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

**வரைபடம் 7**

***நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் அவதானிப்பு - 31 டிசம்பர் 2012***



# புள்ளி விபர மீளாய்வு

### நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் முதலீட்டு வருமானம்

அட்டவணை 9 இல் காண்பிக்கப்பட்டவாறு, நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் முதலீடுகளிலிருந்து உருவான மொத்த முதலீட்டு வருவாய் 2012 இல் ரூபா 17,013 மில் (2011: 16,814 மில்) ஆகும் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சராசரி முதலீடு 2012 இல் ரூபா 165,748 மில் (2011 ரூ. 141, 220 மில்) ஆக இருந்தது.

2012 இல், முதலீடுகளின் பெரும் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய, அரசாங்கத்தின் கடன் பிணையங்களிலான முதலீடு ரூபா 91,310 மில். (2011: ரூ. 77,391 மில்.) ஆக இருந்ததுடன், முதலீட்டு பெறுகையாக 11.92% யை (2011: 13.57%) உற்பத்தி செய்தது. இது 2011 உடன் ஒப்பிடும் போது முதலீட்டு பெறுகையின் வீழ்ச்சியை புலப்படுத்தியது. பங்கு மூலதனங்களிலிருந்து உருவான முதலீட்டு வருமானம் ரூபா 330.64 மில் (2011 ரூ. 2578 மில்) ஆகவும், 2012 இல் முதலீட்டு இழப்புகளாக ரூபா 576.20 மில்லி (2011: ரூ. 1,743 மில் மூலதன வருவாய்) யனும், பங்கிலாப வருமானமாக ரூபா 907 மில்லிய (011 ரூபா 834 மில்) னும், நிறுவன கடன்களின் முதலீட்டு வருமானம் ரூபா 1,634 மில்லியனாக (2011: ரூ. 132 மில்) வும் காணப்பட்டது. 13.82% மாக இருந்த முதலீட்டு வருவாய் 2011 இல் பதிவு செய்யப்பட்ட 13.69% உடன் ஒப்பிடுபோது மிக சிறியதொரு அதிகரிப்பாக இருந்து. சந்தைப் பெறுமதியின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால், 2012 இல் தங்கத்தில் செய்யப்பட்ட முதலீடு, ஏனைய அனைத்து முதலீடுகளையும் விட மிக உயர்வான வருவாயைப் பெற்றுத் தந்தது. 2012 இல் இது 37.14% மாகவும் (2011: 12.41%) மாகவும் இருந்தது. 2011 உடன் ஒப்பிடும்போது 2012 இல் காணி மற்றும் கட்டிடங்களில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு பெறுகைகள் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியடைந்தன. 5.76% இலிருந்து 0.92% வீழ்ச்சியை இது காண்பிக்கின்றது. வைப்பிலிருந்து உருவான முதலீட்டு வருமானம் ரூபா 3,908 மில் (2011: ரூ. 2,143) ஆகும். இதில் வங்கி வைப்புகளிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூபா 3784 மில். (2011: ரூ. 2110 மில்), நிதி கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 124 மில். (2011: 7. 33 மில்) என்பவையும் உள்ளடங்கும். 2011 இல் ஈட்டப்பட்ட 9.53% உடன் ஒப்பிடும் போது 2012 இல் காப்புறுதி கம்பனிகளில் 13.56% முதலீட்டு பெறுகையை வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம் சராசரியாக உருவாக்கியது. இது 2012 இன்போது நிலவிய வட்டி வீத அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது. யுனிட் டிரஸ்டுகளும், காப்பீட்டு கடன்களும் ஒப்பீட்டளவில் குறைவான முதலீட்டு வருவாய்களை 2012 இல் உற்பத்தி செய்தன. இது முறையே முதலீட்டு பெறுகை விகிதங்களில் 0.85% (2011: 0.10% மாகவும் 1.83% (2011: 1.80%) மாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 9**

***முதலீட்டு வருமானத்தின் வகைப்படுத்தல்களும் சராசரி முதலீடுகளும் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்***

| வகைப்படுத்தல் | 2011(அ) | | | 2012(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000 | முதலீட்டு பெறுகை (%) |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 10,498,652 | 77,390,998 | 13.57 | 10,882,660 | 91,310,044 | 11.92 |
| - திறைசேரி உண்டியல்கள் | 9,915,052 | | | 9,148,241 | | |
| - திறைசேரி முறிகள் | 216,852 | | | 171,757 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 366,748 | | | 1,562,662 | | |
| பங்குரிமை | 2,577,888 | 22,442,235 | 11.49 | 330,634 | 21,127,612 | 1.56 |
| - மூலதன இலாபம்/நட்டம் | 1,743,484 | | | (576,202) | | |
| - பங்கிலாபம் | 834,404 | | | 906,836 | | |
| நிறுவன கடன்கள் | 1,320,450 | 9,646,911 | 13.69 | 1,634,076 | 11,827,507 | 13.82 |
| - தொகுதி கடன்கள் | 1,289,580 | | | 1,495,343 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 18,365 | | | 132,990 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | - | | | 1,836 | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | 12,505 | | | 3,907 | | |
| காணிகளும் கட்டிடங்களும் | 183,310 | 3,181,262 | 5.76 | 54,127 | 5,896,246 | 0.92 |
| வைப்புகள் | 2,142,848 | 22,496,627 | 9.53 | 3,907,852 | 28,823,251 | 13.56 |
| - வங்கி | 2,110,036 | | | 3,784,069 | | |
| - நிதி கம்பனிகள் | 32,812 | | | 123,783 | | |
| யுனிட் ட்ரஸ்ட் | (1,326) | 1,269,393 | (0.10) | 9,844 | 1,156,016 | 0.85 |
| தங்கம் | 6,880 | 55,458 | 12.41 | 26,509 | 71,374 | 37.14 |
| காப்புறுதி கடன்கள் | 75,942 | 4,219,003 | 1.80 | 83,169 | 4,540,250 | 1.83 |
| ஏனையவை | 8,883 | 517,753 | 1.72 | 84,137 | 995,439 | 8.45 |
| மொத்தம் | **16,813,527** | **141,219,640** | **11.91** | **17,013,008** | **165,747,739** | **10.26** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளில் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1. *அலையன்ஸ் ஆயுள், ஆர்ப்பிகோ, எல்ஜசி என்பனவற்றின் பங்குரிமையாளர்களுக்கு சொந்தமான முதலீட்டு வருமானமும், சராசரி முதலீடுகளும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்படவில்லை.*

# புள்ளி விபர மீளாய்வு

### நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதி காப்பீட்டு பின்னடைவுகள்

| மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டண மொத்தத் தரகர்களின் பங்களிப்பு சதவீதத்தில் (%) | 15.11 | 14.23 | 14.27 | 14.34 | 14.55 | 15.43 | 15.44 | 14.43 | 13.36 | 14.60 |

# புள்ளி விபர மீளாய்வு

**காப்புறுதி கம்பனிகளின் முதலெழுத்துப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| ஏஐஏ | : | ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி (முன்னர் அவீவா என்டிபி இன்யூரன்ஸ் பிஎல்சி) |
| ஏஐஜி | : | ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் (முன்னர் CHARTIS இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி) |
| அலையன்ஸ் பொது | : | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அலையன்ஸ் ஆயுள் | : | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அமானா டக்காபுல் | : | அமானா டக்காபுல் பிஎல்சி |
| ஆர்பிக்கோ | : | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| ஏசியன் அலையன்ஸ் | : | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சிலிங்கோ டக்காபுல் | : | சிலிங்கோ டக்காபுல் லிமிடட் |
| சிலிங்கோ | : | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| கொண்டினன்டல் | : | கொண்டிநென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி |
| கோர்பரேடிவ் | : | கோர்பரேடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| எச்என்பிஏ | : | எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| ஜனசக்தி | : | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| எல்ஐசி | : | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் |
| லோலெக் | : | லோலக் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| எம்பிஎஸ்எல் | : | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| என்ஐசிஎல் | : | நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட் |
| என்ஐடிஎப் | : | நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் பண்ட் |
| ஓரியன்ட் | : | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| பீபல்ஸ் | : | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சன்சா | : | சீமாசகித்த சனச ரக்ஷன சமாகம |
| எஸ்எல்ஐசி | : | சிறீ லங்கா இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட் |
| யுஏஎல் | : | யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சி |

# தொழிற்பாட்டு மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகள்

#### 1) சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற வருவாய்களின் மீளாய்வு

**அ) வருடாந்த நியதிச்சட்ட வருமானங்கள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளும் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளரின் அறிக்கைகளும்**

காப்புறுதித் தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் தமது வருடாந்த நியதிச்சட்ட வருமானங்கள் மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுகள் ஆகியவற்றை குறித்த நிதியாண்டின் நிறைவையடுத்து வருகின்ற ஆறு மாதங்களினுள் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதியாளர்கள் காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச்சட்டப்படியான வருமானங்களுடனான நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பான சாராம்சம் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சபையானது வருமானங்கள் உரிய வேளையில் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதோடு, அவை காப்புறுதி தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் சட்ட ஏற்பாடுகளுக்கும் ஏனைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் இசைவாகவும் துல்லியமாகவும் இருக்கின்றனவா என்பதையும் பரீட்சிக்கின்றது. கணிப்பீட்டு வருவாய்களை மதிப்பீடு செய்வதற்கு சபை, கணிப்பீட்டு நிபுணத்துவமொன்றின் சேவையை பெற்றுக் கொண்டதுடன், கணிப்பீட்டு வருவாய்கள் தொடர்பான அவதானிப்புகள் தேவைப்பட்ட போது, கம்பனிகளிடமிருந்து மேலதிகமான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொண்டது.

நியதிச்சட்ட ஒழுங்கமைப்பு விதிகளிலிருந்து விலகி சென்றபோது சபை அவற்றை அவதானித்ததுடன் சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு அவை தொடர்பில் குறிப்பிட்ட காலக்கெடுவினுள் அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் பணித்தது. இவை தவிர, வருமானங்கள் தொடர்பான இம் மீளாய்வின் போது காப்புறுதியாளர்களின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் சபை இணைந்து, சம்பந்தப்பட்ட கம்பனிகளின் அமைவிடத்திலான பரிசோதனைகளை மேற்கொண்டது.

**ஆ) காலாண்டு ரீதியான வருமானங்கள்**

சகல காப்புறுதியாளர்களும் தமது நிதி நிலைமைகளையும் இணங்குவிப்பு தேவைப்பாடுகளையும் கண்காணிப்பதற்காக தத்தமது காலாண்டு வருமானத்தை ஒவ்வொரு காலாண்டினதும் இறுதி நாற்பத்தைந்து தினங்களுக்குள் சபைக்கு சமர்ப்பிக்குமாறு காப்புறுதி தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக வேண்டப்படுகின்றனர். சபையானது 2012 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கும் சகல காப்புறுதியாளர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு வருமானங்களை, அவர்களின் காலாண்டுச் செயலாற்றுகை மற்றும் நிதிசார் நிலைமை ஆகியனவற்றை மதிப்பிடும் நோக்கில் மீளாய்வு செய்தது.

ஒவ்வொரு காப்புறுதியாளர்களினதும் தவணைக்கட்டண வருமானம், உத்தரவாத இலாபம் அத்துடன் நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டுக்குமான நிகர இலாபம் போன்றவற்றின் அடிப்படையில் அவர்களின் காலாண்டு ரீதியான செயலாற்றுகைகள் தொடர்பில், காப்புறுதித் துறை முழுதுமளாவிய செயலாற்றுகையினை அறிந்து கொள்ளுமுகமாக விரிவான தொரு பகுப்பாய்வு மேற் கொள்ளப் பட்டது. இவ் ஆண்டின் முழுக் காலாண்டுகளிலும் ஒவ்வொரு காப்புறுதியாளர்களினதும் செயலாற்றுகையினைத் தீர்மானிக்கும் வகையில் அவர்களின் செயலாற்றுகை விகிதங்கள் கணிப்பிடப்பட்டதோடு, அவற்றின் இலாபத்தன்மை, செலவினம் மற்றும் கோரிக்கைகள் போன்றனவும் பகுப்பாய்வு செய்யப் பட்டன. இவை முன்னைய காலாண்டு செயலாற்றுகை விகிதங்களுடன் ஒப்பீட்டாய்வும் செய்யப்பட்டன.

ஒவ்வொரு காப்புறுதியாளர்களதும் காலாண்டு முடிவின் போதான நிதிசார் நிலைப்பாடானது; அவர்களின் சொத்து, பொறுப்பு போன்றவற்றின் நிலைப்பாடுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் திரவத் தன்மைக்கும் மூலதன போதுமை விகிதங்களைக் கணிப்பிடுவதன் மூலமும் அவதானிக்கப்பட்டது. காலாண்டு வருமானங்களை மீளாய்வு செய்கின்ற போது அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மைகள், முரண்பாடுகள்/தவறுகள் ஆகியன சம்பந்தப்பட்ட கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு, குறிப்பிட்ட காலத்தினுள் அவற்றை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

**இ) மாதாந்த வருமானங்கள்**

சபையானது மூன்று காப்புறுதியாளர்களின் மாதாந்த வருமானங்கள் தொடர்பில், அவர்களின் நிதிசார் நிலைப்பாடுகளையும் மற்றும் அவர்களின் வியாபார செயற்பாடுகளையும் கூர்ந்தாயும் நோக்கில் நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் மீளாய்வு செய்தது. அத்தகைய கம்பனிகள் ஒவ்வொரு மாத முடிவை அடுத்து வருகின்ற பதினைந்து நாட்களினுள் அவர்களின் மாதாந்த வருமானங்களை சபை விடுத்த பணிப்புரைகளின் பிரகாரம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டன. மீளாய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மைகள் முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு, குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டன.

**ஈ) இடர்மதிப்பீட்டு சுருக்கம் (இமசு)**

நிறுவன கட்டமைப்பும் உரிமையாக்கப்பட்டதும், வியாபார விபரத் திரட்டு, சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு, சந்தைப்படுத்தலும் பங்கிடுதலும், கோரிக்கைகளை நிருவகித்தல், இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் போன்ற காப்புறுதியாளர்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை சபையுடன் வருடாந்தம் பதிவு செய்து வைத்துள்ள காப்புறுதியாளர்களின் இடர் மதிப்பீட்டு சுருக்கத்தை சபை மீளாய்வு செய்தது.

#### 2. ஏனைய நிதியில் பகுப்பாய்வுகள்

இலங்கை காப்புறுதி சபையினால் கையாளப்படும் புலனாய்வுகள் மற்றும் முறைபாடுகளின் ஒரு பகுதியாக, கிடைத்துள்ள தகவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள், இலங்கை காப்புறுதி சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாக அத்தகைய விசாரணைகளை மேலும் பகுப்பாய்வு செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்ட நிதியியல் தகவல்கள் சேகரிக்கப்படுவதற்காக மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

#### 3. கடன்தீர் எல்லை விதிமுறைகளுடான இணங்குவிப்பை கண்காணித்தல்

கடன்தீர் எல்லை (பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரங்கள்) திருத்த விதிமுறைகள்-2011 ஆனது, 2011 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதோடு, இதன் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் இரு வகுப்பு காப்புறுதி வியாபாரங்கள் தொடர்பிலும் குறைந்தபட்சம் தேவையான கடன்தீர் எல்லைகளை எப்போதும் பேணுமாறும் வேண்டப்படுகின்றனர்.

2012 ஆம் ஆண்டிலும் காப்புறுதியாளர்களதும் நீண்டகால மற்றும் பொது ஆகிய இரண்டு காப்புறுதி வியாபாரங்களுக்கான கடன்தீர் எல்லைகளை சபையானது ஆழமாகக் கண்காணித்தது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

அனைத்து காப்புறுதியாளர்களும் தத்தமது கடன்தீர் எல்லை கணிப்பீடுகளை, தமது மாதாந்த/ காலாண்டு ரீதியான வருமானங்கள் மற்றும் வருடாந்த நியதிச்சட்ட ரீதியான வருமானங்கள் ஆகியவற்றுடன் சமர்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இது சம்பந்தப்பட்ட கடன்தீர் எல்லை விதிமுறைகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்டுள்ளமையை சபை உறுதி செய்தது. கடன்தீர் எல்லை தொடர்பான தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாத காப்புறுதியாளர்கள் அல்லது தெளிவற்ற கடன்தீர் கணிப்பீடுகளை சமர்ப்பித்த காப்புறுதியாளர்கள் தமது குறைபாடுகளை குறிப்பிட்ட காலத்தினுள் நிவர்த்தி செய்வதற்கு வேண்டப்பட்டனர்.

### 4. காப்புறுதி தொழில் கண்காணிப்பிற்கான இடர் உணர்வு குறைந்த மூலதன மாதிரி

சபை, அதன் மேற்பார்வை நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்கத்துடனும், இடர் அடிப்படையிலான வரைச்சட்டம் ஒன்றை வழங்குவதன் ஊடாக சந்தைப்பங்காளர்கள் அவர்களின் வியாபார இடர்களை திறமையாக முகாமைத்துவம் செய்ய உதவும் நோக்கத்துடனும் குறைந்த இடர் உணர்வு மூலதன கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் காப்புறுதித் துறையில் இடர் உணர்வு குறைந்த மூலதனப் பரிபாலன முறையொன்றை உலக வங்கி மற்றும் முதல் முன்னெடுப்பு ஆகியவற்றின் உதவியுடன் சபை மேற்கொண்டது. இடர் உணர்வு குறைந்த மூலதனப் பரிபாலன முன்மொழிவு தொடர்பில் உலக வங்கி மற்றும் முதல் முன்னெடுப்பு என்பவற்றினால் டெலாயிட் டூஷ் டோஹ்மட்சா இந்தியா (பிரை) லிமிடட் நியமிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் முதற்கட்டமாக, சம்பந்தப்பட்ட விடயங்களை இனங்காண்பதற்கும் மற்றும் இலங்கையின் காப்புறுதிச் சந்தை தொடர்பில் புரிந்துணர்வொன்றை வழங்குவதற்குமான சந்தை மதிப்பீட்டு அறிக்கையானது 2010 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. இவ் அறிக்கையானது காப்புறுதித் துறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும் வாய்ப்புள்ள மேலதிக அடிப்படைக் காரணிகள் மற்றும் வளர்ச்சிப் பிரமாணங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டுகின்றது.

இக்கருத்திட்டதின் இரண்டாவது கட்டமானது 2011 பெப்ரவரியில் காப்புறுதித் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதான பண்புசார் அறிக்கையாகும். இது இடர் அடிப்படையிலான மூலதன வேலைச்சட்டகக் கட்டமைப்பு மற்றும் அதன் பிரிவான கோட்பாடுகள் ஆகியன தொடர்பான முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் காப்புறுதித் துறை தொடர்பான தனித்துவக் கட்டமைப்பிற்குப் பொருத்தமான இடர் காரணிகளை இனங்கண்டு அவற்றை வரையறை செய்வதே இவ் அறிக்கையின் நோக்கமாகவிருந்தது.

இக்கருத்திட்டத்தின் 3ம் கட்டமான அளவுசார் அறிக்கையானது 2011 ஒக்டோபரில் காப்புறுதித் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு, இதில் விபரிக்கப்பட்டுள்ள பல்வேறுவகை இடர்களுக்கான மூலதன சாட்டுதல் களை இனங்கண்டு அவற்றை பொருத்தமாக அளவிடுகின்றது. மேலும் இவ் அறிக்கையானது காப்புறுதியாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விலை மதிப்பீட்டு முறையிலுள்ள மாற்றங்களையும் சுட்டிக்காட்டியது. காப்புறுதி தொழிலுக்கான அளவுசார் அறிக்கையை அறிமுகப்படுத்துவதற்கு சபை ஒழுங்கு செய்ததுடன், அளவுசார், தரம் சார் அறிக்கைகள் தொடர்பான தொழில் பங்கேற்பாளர்கள் அவர்களின் கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப் பட்டது.

2012 இன் போது கருத்திட்டத்தின் ஆலோசகர்களினால் இலங்கை காப்புறுதி சபையின் பணியாட் களுக்கு பயிற்சி நிகழ்ச்சி திட்டமொன்று நடத்தப்பட்டதுடன் காப்புறுதி தொழிலுக்கு அளிக்கப் பட்ட அபிப்பிராயங்களை கருத்திற் கொண்டதன் பின்னர் வரைவு விதிமுறை ஒன்றும் ஆலோசகர்களினால் தயாரிக்கப்பட்டது. 2012 இன் 3 ஆவது காலாண்டிலிருந்து திட்டமிட்டவாறு தன்னார்வ அடிப்படையில் வீதிப் பரிசோதனைகளும் ஆரம்பிக்கப் பட்டதுடன் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி தொழிலில் ஈடுபடுபவர்களினால் பூர்த்தி செய்யப்படு வதற்காக காப்புறுதி கம்பனிகள் இடையில் சுற்றுக்கும் விடப்பட்டது. 2012.09.30 இல் முடிவடைந்த காலாண்டில், 18 காப்புறுதி கம்பனிகள் வீதிப் பரிசோதனையில் பங்கேற்றன. காப்புறுதி கம்பனிகளின் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதுடன், இடர் அடிப்படையிலான மூலதனத்தின் அமுலாக்கங்கள் தொடர்கின்றன.

### 5. முதலீட்டுக் குறிப்பீடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல்

#### அ) அரசாங்க பிணையங்களிலுள்ள முதலீடுகள்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங் குறுத்துகைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் தொழில்நுட்ப ஒதுக்கம் தொடர்பில் (பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கானது) 20 சதவீதத்திற்கு குறையாத அசையாத சொத்துக்களையும், நீண்டகால காப்புறுதி நிதியம் தொடர்பில் (நீண்டகால காப்புறுதி வியாபாரத் திற்கானது) 30 சதவீதத்திற்கும் குறையாத சொத்துக்களையும் அரச பிணையங்களில் பேணிவர வேண்டும். சகல காப்புறுதியாளர்களும் மேற்படி காப்புறுதித் தொழிற்துறை சட்ட ஏற்பாடுகளுக்கு இசை வாக சொத்துக்களைக் கொண்டுள்ள னரா என்பதை 2012 சகல காலாண்டுகள் தொடர்பிலும் சபை கண்காணித்ததோடு, மாதாந்த கண்காணிப்பின் கீழான காப்புறுதியாளர்கள் தொடர்பில் அவை முன்வைக்கின்ற பெறுகைகள் மீளாய்வு செய்வதன் மூலம் மாதாந்த முடிவிலும் கண்காணித்தது. மேலும், பெறுகைகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாங்க பிணையங்களிலுள்ள உரிய முதலீடு களையும் மற்றும் அத்தகைய முதலீடுகளின் தலைப்பு மற்றும் உரித்துடைமை ஆகியவற்றையும் உறுதிப்படுத்தும் நோக்கில், சபையானது ஒவ்வொரு காப்புறுதியாளர் தொடர்பிலும் அறிக்கையிடுகின்ற ஒவ்வொரு காலப் பகுதியின் முடிவிலுள்ளவாறாக இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்படுகின்ற வைப்புக் கூற்றினை மீளாய்வு செய்தது. அரசாங்க பிணையங்களிலுள்ள முதலீடுகள் தொடர்பில் மேற்படி இணக்கப்பாட்டினைக் கொண்டராத நிறுவனங்களுக்கு அது சம்பந்தமான உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

#### ஆ) தீர்மானங்களின் பிரகாரத்திலான ஏனைய முதலீடுகள்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங் குறுத்துகைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள 2011 மார்ச் 01 ஆம் திகதிய தீர்மானம் 1 இல் (2011 ஒக்டோபர் 20 இல் திருத்தப்பட்டது) குறிப்பிடப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்களில் தொழில்நுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்டகால காப்புறுதி நிதியம் போன்றன தொடர்பில் சம அளவு சொத்துக்களை முதலீடு செய்யுமாறு சகல காப்புறுதியாளர்களும் வேண்டப் படுகின்றனர். காப்புறுதிக் கம்பனிகள் மேற்படி தீர்மானம் 1 இற்கு அமைய இணங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்களின் முதலீடுகளை சபை கண்காணித்ததோடு, அவ் வாறு இணக்கமுறாத பட்சத்தில், அதற்கான சரிப்படுத்தல்களை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கியது.

#### அமைவிடத்திலான கண்காணிப்புகள்

2012 ஆம் ஆண்டுக்காலத்தில், ஐந்து அமைவிடத்திலான கண் காணிப்புக்களை காப்புறுதிக் கம்பனி களின் அமைவிடங்களுக்குச் சென்று மேற்கொண்டதோடு நிறுவனத்தின்

# தொழிற்பாட்டு மீளாய்வு

செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பில் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான அவர்களின் இணக்கப்பாடுகளை மதிப்பிடும் வகையில் மீளாய்வையும் மேற்கொண்டது. மேலும், கம்பனியின் தொடர்புடைய சிரேஷ்ட அதிகாரிகள், கணக்காய்வாளர் குழு/சபை அங்கத்தினர்கள் இவர்களுடன் கணிப்பீட்டாளர்கள் மற்றும் உள்ளக வெளியக கணக்காய்வாளர்கள் ஆகியோருடன் நடைமுறைகள், கம்பனியின் நடவடிக்கைகள் குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேர்காணல்கள் நடத்தப்பட்டன. அமைவிடத்திலான பரீட்சித்தல் அறிக்கைகள் ஊடாக சீராக்கங்கள் தேவைப்பட்ட இடங்களுக்கான பரிந்துரைகளை சபை செய்தது.

### 7. தகவல்களை இலங்கை மத்திய வங்கியிடம் சமர்பித்தல்

காப்புறுதியாளர்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் காப்புறுதித் துறையின் செயலாற்றுகையை அறிந்து கொள்ளுமுகமாக, 2012 இன் ஒவ்வொரு காலாண்டுக்குமான காப்புறுதியாளர்களின் தவணை கட்டண வருமானம், இலாபத் தன்மை, திரவத் தன்மை, மூலதனம் மற்றும் அவர்களின் ஸ்திரத் தன்மை போன்றவற்றை சபை விரிவாக பகுப்பாய்வு செய்தது. மேலும் முழுதுமளாவிய காப்புறுதிக் கைத்தொழில் துறையின் செயலாற்றுகையினை உறுதி செய்யும் நோக்கில் செயலாற்றுகை விகிதங்கள் கணிப்பிடப்பட்டன. காப்புறுதிக் கைத்தொழிலின் நிதிசார் செயலாற்றுகை மற்றும் நிதிசார் நிலைப்பாடு என்பவை தொடர்பான தகவல்கள் ஒவ்வொரு காலாண்டிற்குமாக இலங்கை மத்திய வங்கியின் நிதித்துறை முறைமை உறுதித்தன்மை பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 8. மீள் காப்புறுதி ஏற்பாடுகள் தொடர்பான மீளாய்வு

சகல காப்புறுதியாளர்களும் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங் குறுத்துகைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டுதோறும் தமது மீள்காப்புறுதி உடன்படிக்கைகள். ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். காப்புறுதியாளர்கள் போதுமான மீள்காப்புறுதி உள்ளடக்கதைப் பெற்று அவர்களின் காப்புறுதி இடர்களை மட்டுப்படுத்துகின்றனரா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அத்தகைய ஆவணங்களை சபை கவனமாக ஆராய்ந்தது. காப்புறுதி நிறுவனங்கள் ஏனைய பல்வேறு மீள்காப்புறுதியாளர்களுடனான மீள் காப்புறுதி ஏற்பாட்டொழுங்குகளில் ஈடுபடும் போது, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் பிரிவு 31 (1) இன் கீழ் சபையினால் வழங்கப்பட்ட நெறிமுறைகளுடன் இசைந்து செயற்படுவதற்கு வேண்டப்படுகின்றனர். காப்புறுதியாளர்களுடன் இணைந்து தேவைப்படும் அலகு களுக்கேற்ப செயற்படாத மீள்காப்புறுதியாளர் களைப் பொறுத்தவரை, காப்புறுதியாளர்கள் தமது மீள்காப்புறுதி ஒழுங்குகளுக்கு ஏற்ப சரிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர்.

### 9. சுற்றுநிருபம் 18 இன் பிரகாரம் வருடாந்தம் இரு இணக்கப்பாட்டுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல்

சகல காப்புறுதியாளர்களும் சுற்று நிருபம் 18 இன் பிரகாரம் தமது ஒவ்வொரு அரையாண்டுக்குமான இணக்கப்பாட்டுச் சான்றிதழை; வருடாந்தம் பெப்ருவரி 15 ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆகிய தினங்களில் அல்லது அதற்கு முன்னர் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். சகல காப்புறுதியாளர்களும் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான இணக்கம், சபையின் நெறிமுறைகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட மீள் காப்புறுதியாளர் களுடனான உடன் பாட்டு மற்றும் விருப்பத் தேர்வுடைய மீள்காப்புறுதி ஏற்பாடுகளைக் கொண்டுள்ளமை, கடன்தீர் திறன் எல்லை விதிகளுடனான இணக்கம், குறைந்தபட்ச முதலீட்டுத் தேவையை நிறைவேற்றுகின்றமை மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைக்கான கட்டுப்பண உத்தரவாதத்துடனான இணக்கம் போன்றவற்றை உறுதிப்படுத்தும்.

### 10. காப்புறுதி கம்பனிகளுக்கான, காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிரயோகங் களின் மீள் திருத்தக்கூற்று (SORP)

பரிந்துரைக்கப்பட்ட பிரயோகங்களின் கூற்றை இலங்கை காப்புறுதிச் சபை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்து காப்புறுதி கம்பனிகளின் நிதிக் கூற்றுகளின் பொது நோக்கத்தை வெளிப்படுத்தும் அடிப்படையை இது 2012 இன் இலங்கை நிதியியல் அறிக்கை தரப்படுத்தல் முறையிலமைந்த நிதியியல் அறிக்கையிடலின் மாற்றத்தின் காரணமாக, காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான கணக்கீட்டு தரப்படுத்தலுக்கு எஸ்ஓஆர்பியின் மீள் திருத்தம் அவசியமானது. மேலும் எஸ்ஓஆர்பியின் இந்த மீள்திருத்தம் சீரானதொரு நிதிக் கூற்றை அறிக்கையிடும் முறைமையை உறுதிப்படுத்துவதுடன், எஸ்.எல். எப்.ஆர்.எஸ். உடன் ஒத்துப்போகக் கூடிய ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை நோக்கங்களுக்கான மேலதிக தகவல்களை பெறவும் உதவும். காப்புறுதி தொழிலின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை காப்புறுதி சபை என்பனவற்றின் பங்கேற்றலுடன் எஸ்ஓஆர்பியின் மீள்திருத்த வரைபு பூர்த்தி செய்யப்பட்டது. மீள் திருத்தப்பட்ட காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிரயோகங்களின் மீள்திருத்தக்கூற்று காப்புறுதி தொழிலுக்கு வழங்கப்படும்.

## காப்புறுதி தரகர்கள்

### 1. காலாண்டு வருமானங்கள் இடைக்கால நிதியியல் கூற்றுகள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுகள் என்பனவற்றின் மீளாய்வு

2010 பெப்ரவரி 25 இன் 1642/16 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலுக்கு (1வது அட்டவணை) அமைவாக, காப்புறுதி தரகர்கள் அனைவரும், தமது காலாண்டு வருவாய்களையும் அவர்களின் காலாண்டு கூற்றுக்களை ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் 45 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டிய தேவையுள்ளது. காப்புறுதி தரகர்களினால் சமர்ப்பிக்கப்படும் இத்தகைய அறிக்கைகள் அமைவிடத்திற்கு அப்பாலான மேற்பார்வை நடவடிக்கையாக அவற்றின் இணங்குவிப்பிற்காக மீளாய்வு செய்யப்படும் பூரணப்படுத்தாத பிரிவுகள், தவறுகளுள்ள கணனியாக்கங்கள், வித்தியாமான மாதிரிகள், மற்றும் முரண்பாடான அறிக்கையிடல்கள் போன்ற மீளாய்வின் போது அடையாளம் காணப்பட்ட தவறுகளும், முரண்பாடுகளும் சரிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய காப்புறுதி தரகர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்படும்

நிதி ஆண்டின் இறுதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், அவர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுகள் சமர்பிக்க வேண்டும் என காப்புறுதி தரகர்கள் கோரப்படுகின்றனர். ஆண்டின் போது காப்புறுதி தரகர்களின் நிதி நிலைமையையும் செயற்பாட்டையும் உறுதி செய்வதற்காக சமர்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளை சபை மீளாய்வு செய்யும்.

### 2. காப்புறுதி கடன் தவணைச் சேகரிப்புகளை கண்காணித்தல்

காப்புறுதி தொழிற்சட்ட ஒழுங்கு விதிகளின் 89 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதியாளர்களின் சார்பாக, காப்புறுதி தரகர்களினால் சேகரிக்கப்படும் காப்புறுதி தவணைக் கட்டணங்கள், சேகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் தொடர்புடைய காப்புறுதியாளர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். சபைக்கு அனுப்பப்படும் காலாண்டு வருவாய்கள் மற்றும்

# தொழிற்பாட்டு மீளாய்வு

அமைவிடத்தில் நடாத்தப்படும் விசாரணைகள் என்பவை ஊடாக இந்த ஒழுங்கு விதிகளுடன் காப்புறுதி தரகர்களின் இணங்குவிப்பை சபை மிகவும் நெருக்கமாக கண்காணிக்கும். சொல்லப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்கி செயற்படாத காப்புறுதி தரகர்கள் தொடர்பாக, அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 3. அமைவிடத்திலான விசாரணைகள்

2012 ஆம் ஆண்டின் போது, சபையின் விதிகள் மற்றும் ஒழுங்கமைப்புகளுக்கு ஏற்றவாறு காப்புறுதி தரகுத் தொழிலை, காப்புறுதி தரகர்கள் நடத்தி செல்வதை மதிப்பீடு செய்வதற்காக காப்புறுதி தரகர்களுக்கு ஏழு அமைவிடத்தில் நடைபெறும் விசாரணைகளை சபை மேற்கொண்டது. மேலும், உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் விசாரணைகளின்போது செயற் பாடுகள் நடத்தப்பட்ட முறைகளையும், சபை மதிப்பீடு செய்ததுடன், மேலும் சீர்படுத்தல்களை மேற்கொள் வதற்கான பரிந்துரை களையும் செய்தது. விசாரணைகளின்போது இணங்கி செயற்படாமை அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், குறிப்பிட்டகால அவகாசத்திற்குள் அவற்றை சரிப் படுத்துவதற்கான அறிவுறுத்தல் களும் வழங்கப்பட்டன.

### 4. உரிமங்களை புதுப்பித்தல்

2013 ஆம் ஆண்டின் செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்கென வருடாந்த உரிமங்களை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டபோது காப்புறுதி தரகர்களின் நிதிநிலமை பெறுமதியிடப்பட்டு மதிப்பீடு செய்யப் பட்டது. உரிமம் புதுப்பிக்கப்படுவதற்கு முன்னர் தேவைப்பாடுகள் நிறை வேற்றப்பட்டுள்ளதை கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்று களும் தரகர்களின் காலாண்டு வருமானங்களும் மதிப்பீடு செய்யப் பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

### 5. புதிய உரிமங்களை வழங்குவது

புதிதாக காப்புறுதி தரகர்களாக பதிவு செய்து கொள்ள விரும்புபவர்களின் நிதி நிலமைகளை மதிப்பீடு செய்வதற்காக அவர்களின் தொழில் திட்டங்கள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள், நிகர மூலதன நிலமை போன்றவற்றை சபை மீள் பார்வையிட்டது. தேவைப்பாடுகளை நிறைவேற்ற முடியாத விண்ணப்ப தாரிகள் அவற்றை பூர்த்தி செய்யுமாறு அல்லது மேலும் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு மேலதிக தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக, சபையின் தேவைப் பாடுகளை பூர்த்தி செய்த ஐந்து காப்புறுதி தரகர்களுக்கு பதிவு செய்தல்கள் வழங்கப்பட்டன.

## ஒழுங்கமைப்பு மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளை பதிவு செய்தல்

ஆண்டின்போது சபை, தரகர்களா வதற்கான பதிவு செய்தல்களை நாடும் விண்ணப்பங்கள் எவற்றையும் பெறவில்லை என்பதுடன் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் 22 ஆகவே இருந்தது.

பின்னிணைப்பு I: சபையுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பெயர்களை வழங்கு வதுடன் காப்புறுதி தொழிலை நடத்து வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள வகுப்பு/வகுப்புகளையும் தருகின்றது.

### புதிய காப்புறுதி தரகு கம்பனிகளை பதிவு செய்தலும் காப்புறுதி தரகு கம்பனிகளின் பதிவு செய்தல்களை புதுப்பித்தலும்

ஆண்டின் போது சபைக்கு, காப்புறுதி தரகுக் கம்பனிகளாக செயற்படுவதற்கு, 11 கம்பனிகளுக்கு பதிவுகள் வழங்கப்பட்டன. இதில் 4 கம்பனிகளுக்கு நீண்டகால மற்றும் பொது காப்புறுதி தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான பதிவுகள் கிடைத்தன. ஒரு கம்பனிக்கு நீண்ட கால காப்புறுதி தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும், ஏனைய ஆறு கம்பனிகளுக்கும் பொது காப்புறுதி தரகர் வியாபாரத்தை நடத்துவதற்கும் பதிவுகள் கிடைத்தன.

2013 ஆம் ஆண்டிற்கான பதிவுகளை புதுப்பிப்பதற்காக, 44 காப்புறுதி தரகுக் கம்பனிகளிடமிருந்து ஆண்டின் போது சபைக்கு விண்ணப்பங்கள் கிடைத்தன. சட்டத்தின் கீழ் அவசியமாக இருந்த தேவைப்பாடுகளை அவை பூர்த்தி செய்திருந்தமையினால் 2013 ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பதிவுகள் அனைத்தும் 44 கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டன.

சட்டத்தின் 84 (1) (சி) (ii) பிரிவிற்கு அமைவாக 2012 செப்டம்பர் மாதத்தில் காப்புறுதி தரகு கம்பனி ஒன்றின் 2012 ஆம் ஆண்டிற்கான பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சபையினால் நிராகரிக் கப்பட்டது. சொல்லப்பட்ட தரகு கம்பனியின் தலைமைக் கம்பனியின் பிரதி தலைவர், மற்றுமொரு காப்புறுதி கம்பனியின் பணிப்பாளராகவும் சேவையாற்றியமையால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பணிப்பாளர்கள் அல்லது தரகின் பிரதான அதிகாரி அல்லது துணை நிறுவனத்தின் பிரதான அதிகாரி அல்லது துணை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, உப நிறுவனம் அல்லது அத்தகைய தரகுகளின் தலைமைக் கம்பனியின் காப்புறுதியாளர்களின் பணிப்பாளர்களாக, பங்குரிமையாளர்களாக அல்லது காப்புறுதியாளரின் பணியாளராகும் போது, சட்டத்தின் 84 (1) (சி) (ii) பிரிவிற்கு அமைவாக பதிவு ஒன்றை இடைநிறுத்த அல்லது நிராகரிப்பதற்கு, அல்லது தரகர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை புதுப்பிப்பதற்கு சபையினால் மறுக்க முடியும்.

பின்னிணைப்பு II: காப்புறுதிச் சபையில் தம்மை பதிவு செய்துள்ள காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பெயர்கள் அனைத்தையும், மற்றும் அவற்றின் காப்புறுதி தரகு வியாபாரத்தை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள தரகுக் கம்பனிகளின் வகுப்பு/வகுப்புகள் என்பன வற்றையும் தருகின்றது.

## அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதி கம்பனிகள்

#### இடைநிறுத்தங்கள்

ஆண்டின் போது சபையினால் இடை நிறுத்தங்கள் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், 2009 ஆம் ஆண்டில் சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்தம் தொடர்கின்றது. 191/09 எஸ்.சி. (எப்ஆர்) அடிப்படை உரிமைகள் சட்டம் இல. எஸ்.சி. மீது வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற கட்டளையை அடுத்து, சிலிங்கோ டக்காபுல் லிமிடட்டுடன் சபை, புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றில் (Mou) ஈடுபட்டது. இவ் ஒப்பந்தத்திற்கமைய, கம்பனியின் உண்மையான காப்புறுதி கோரிக்கைகளை தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் சிலிங்கோ டக்காபுல் லிமிடட்இற்கு சொந்தமான சொத்துகளை அகற்றும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.

#### பணிப்புரைகள்

சட்டத்தின் 18 (7) ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு சபையினால் பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது. கம்பனி பதிவு செய்யப்பட்ட நேரத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனையின்படி, மிகக் குறைந்த தேறிய மூலதன தேவைப்பாடாக மேலதிக மூலதனமான ரூபா 500 மில்லியனை 2013 பெப்ரவரி இறுதிக்குள், உட்சேர்க்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை இப்பணிப்புரை கொண்டிருந்தது.

18 (1) மற்றும் 18 (2) பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, சட்டத்தின் 18 (7) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, காப்புறுதி யாளருக்கு 18 (1) ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள உரிமம் தொடர்பான நடவடிக்கையின் தன்மை அல்லது சட்டத்தை செயற்படுத்தாமை போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளினால் சபை அதனை இரத்து செய்ய அல்லது இடைநிறுத்த முடியும். அவ்வாறு காப்புறுதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாக உரிமம் ஒன்றை சபையினால் இரத்து செய்ய அல்லது இடைநிறுத்த முடியுமாகவிருக்கும் போது, சயினால் தீர்மானிக்கப்படும் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு காப்புறுதியாளருக்கு சபை நேரடியான பணிப்புரைகளை விடுக்கலாம்.

# தொழிற்பாட்டு மீளாய்வு

(அ) அத்தகைய செயற்பாடுகள் அல்லது செயற்படுத்தாமைகள் தொடர்ந்து நடைபெறுவதை தடைசெய்வது

(ஆ) அத்தகைய செயற்பாடுகள் அல்லது செயற்படுத்தாமைகளினால் உருவாகும் விளைவுகளை நிறுத்துவதும் சரிப்படுத்துவதும்

சட்டத்தின் 57வது பிரிவின் கீழ் சபையினால் மற்றுமொரு காப்புறுதியாளருக்கு, 2007 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியின் அலுவல்கள் மற்றும் நிதியியல் நிலைமைகளை விபரமாக ஆராய்ந்ததின் பின்னர் சொல்லப்பட்ட கம்பனியின் நிதியியல் ஸ்திரத்தன்மையும் உறுதிப்பாடும் பேணப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பணிப்புரை யொன்று வழங்கப்பட்டது.

பொது மக்கள் அல்லது தேசிய நலன்கள் அல்லது காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகள் அல்லது காப்புறுதியாளர்களின் ஈடுபாடுகளுக்கு தீங்கிழைக்கக் கூடியதாக இருக்கும் எந்தவொரு காப்புறுதியாளர்களின் அலுவல்களும் நடத்தப்படும் போது, காப்புறுதியாளர்களுக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கு சட்டத்தின் 57 வது பிரிவு சபைக்கு அதிகாரத்தை அளித்துள்ளது.

காப்புறுதி கம்பனிகளுக்கு ஏலவே வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட காப்புறுதியாளர்கள் சொல்லப்பட்டவற்றை கடைப்பிடிக்கின்றனரா என்பதை தீர்மானிப்பதிலும் சபை உன்னிப்பாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணிப்புகளை மேற்கொள்ளும்.

### எச்சரிக்கைகள்

சட்டத்தின் 26 ஆம் 29 ஆம் பிரிவுகளுடன் இணங்கி செயற்பட கம்பனி தவறியதன் காரணமாக காப்புறுதியாளர் ஒருவருக்கு சபை எச்சரிக்கை கடிதமொன்றை வழங்கியது.

சபையினால் அதன் சார்பாக செய்யப்பட்ட விதிகளின் கீழ், சபையின் கீழ் தீர்மானிக்கப்படும் கடன்தீர் எல்லையின் தொகையை, காப்புறுதி தொழிலின் ஒவ்வொரு வகுப்பு தொடர்பாகவும் ஒவ்வொரு காப்புறுதியாளரும் பேண வேண்டும் என்பது சட்டத்தின் 26 ஆம் பிரிவின் தேவைப்பாடாகும்.

சட்டத்தின் 29ஆம் பிரிவிற்கு அமைவாக, எந்தவொரு காப்புறுதியாளரும் அத்தகைய காப்புறுதிக்கு பணிப்பாளர் பதவியை வகிப்பதற்கு அல்லது அத்தகைய பதவியை அத்தகைய ஆள் ஒருவர் எந்தவொரு கம்பனியிலும் வகிப்பதற்கு எந்தவொரு ஆளுக்கும் அனுமதி வழங்கவியலாது. அந்த காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட ஆயுட் காப்புறுதி ஒன்று, ஈடாக வைக்கப்பட்டுள்ள கடன் தவிர்ந்த வேறு எந்தவொரு கடனுக்கும், சபையினால் முன் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அன்றி அக்கடனை மீள செலுத்துவதற்கென தரப்பட்டுள்ள பிணையம் போதுமானது என சபை திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே அத்தகைய அனுமதியை சபை வழங்கும்.

மேலும், சட்டத்தின் 34 வது பிரிவை மீறியதற்காக, சபையினால் 03 காப்புறுதி கம்பனிகளுக்கு எச்சரிக்கைகள் வழங்கப்பட்டது. காப்புறுதி தரகராக பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் ஒரு கம்பனியிடமிருந்து காப்புறுதி வியாபாரத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சட்டத்தின் 34 வது பிரிவிற்கு அமைவாக, எந்தவொரு காப்புறுதியாளரும், பின்வருபவர்களை தவிர்த்து எவரிடமிருந்தும், எந்தவொரு காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக் கொள்ளல் ஆகாது.

அ) காப்புறுதி விடயம் தொடர்பான காப்புறுதியிடலில் ஈடுபாடுடைய எந்தவொரு நபரிடமிருந்தும்

ஆ) மீள் காப்புறுதி தொடர்பாக வேறொரு நபரிடமிருந்து

இ) ஒரு காப்புறுதி முகவர் அல்லது.

ஈ) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு காப்புறுதி தரகர்

## காப்புறுதி தரகு, கம்பனிகள்

### எச்சரிக்கைகள்

சட்டத்தின் 84 (1) (டி) பிரிவிற்கு அமைவாக சபை, 02 காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கு சட்டத்தின் 86 ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக, எச்சரிக்கை கடிதங்களை அனுப்பியது.

சட்டத்தின் 86 (1) ஆம் பிரிவுடன் சேர்ந்து, 2010 பெப்ரவரி 25 இன் 1642/16 ஆம் இல. வர்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள 7வது விதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதானவாறு, ஒவ்வொரு காப்புறுதி தரகரும் தனது காலாண்டு வருவாய்களை, ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் தரகுக் கம்பனியின் தலைமை அதிகாரி அல்லது பணிப்பாளரினால் சான்றுதிப்படுத்தி சபைக்கு அனுப்ப வேண்டிய தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சட்டத்தின் 84 (1) (டி) பிரிவிற்கு அமைவாக காப்புறுதி தரகர் ஒருவருக்கு சபை முதலாவதும் இறுதியுமான எச்சரிக்கை ஒன்றை வழங்கியுள்ளது. சட்டத்தின் 79 ஆம் பிரிவை மீறி சபையிடமிருந்து பதிவு செய்தலை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் காப்புறுதி தரகு கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டதற்காகவும், பதிவு செய்தலின் போது சபைக்கு தவறானதும், பிழையாக வழி நடத்தக் கூடியதும், உண்மையற்றதுமான தகவல்களை அளித்தமைக்காகவும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சபையினால் வழங்கப்பட்ட தரகர் எனும் பதிவுச் சான்றிதழும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி தரகு சங்கமொன்றின் அங்கத்தினராகவும் இருக்கும் ஒருவராக இருந்தாலன்றி காப்புறுதி தரகராக செயற்பட அல்லது இருப்பதற்கு சட்டத்தின் 79 ஆம் பிரிவு தடை செய்கின்றது.

மேலும் சட்டத்தின் 86 (2) பிரிவை மீறியதற்காக, சட்டத்தின் 84 (1) (ஈ) பிரிவிற்கு அமைவாக 02 காப்புறுதி தரகு கம்பனிகளுக்கு, சபை எச்சரிக்கைகளை வழங்கியுள்ளது.

சட்டத்தின் 86 (2) ஆம் பிரிவிற்கு அமைவாக ஒவ்வொரு காப்புறுதி தரகரும், கணக்கீட்டுக் காலத்தின் முடிவிற்கு ஆறுமாதங்களுக்குள் சபைக்கு. கணக்காய்வு செய்யப்பட்ட நிதியில் கூற்றுகளை சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுகளில் ஐந்தொகை, இலாப நட்ட கணக்கு, மற்றும் அத்தகைய கணக்குகளுக்கான குறிப்புகள் என்பவை உள்ளடங்கும்.

காப்புறுதி தரகுக் கம்பனியொன்று காப்புறுதி தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 89 ஆம் பிரிவின் பிரகாரம் இசைவுறத் தவறியமையினால் மேற்படி சட்டத்தின் 84 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அக்கம்பனிக்கு இறுதி எச்சரிக்கை கடிதமொன்றை வழங்கியுள்ளது.

காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 89 ஆம் பிரிவானது, காப்புறுதிக் கம்பனிகள் சார்பில் தாம் சேகரித்த காப்புறுதித் தவணைக் கட்டணங்களை இரண்டு வாரங்களினுள் அனுப்புமாறு காப்புறுதித் தரகுக் கம்பனிகளைப் பணிக்கின்றது.

காப்புறுதி தரகுக் கம்பனியொன்றிற்கு குறைந்தது 3 வெவ்வேறு தடவைகளில் சபையால் எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருப்பின், அக் கம்பனிக்கான பதிவு புதுப்பித்தலை இடைநிறுத்துவதற்கு, இரத்து செய்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான அதிகாரத்தை காப்புறுதி தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 84 (1) (ஈ) ஆம் பிரிவானது சபைக்கு வழங்குகின்றது.

### பணிப்புரைகள்

சட்டத்தின் 96 ஏ பிரிவிற்கு அமைவாக சபை, 07 காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் அவை தமது பெயர்களின் ஒரு பகுதியாக காப்புறுதி தரகர்கள் எனும் சொற்றொடரை உட்சேர்க்க வேண்டியுள்ளதுடன், இணங்குவிப்பாக செயற்படுவதற்கு நியாயமான கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

காப்புறுதி வைப்பாளர்களினதும், உத்தேச காப்புறுதி வைப்பாளர்களினதும் விருப்பங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் நிலமைக்கு ஏற்றவாறு காப்புறுதியாளர்கள், தரகர்கள், மற்றும் நட்ட சீராக்கல்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சட்டத்தின் 96 (ஏ) பிரிவிற்கு அமைவாக சபை பணிப்புரைகளை வழங்கியுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள அத்தகைய பணிப்புரைகள் எவற்றுடனும் இணங்கி செயற்படுவது அத்தகைய ஒவ்வொரு காப்புறுதியாளர், தரகர் அல்லது

# தொழிற்பாட்டு மீளாய்வு

நட்ட சீராக்கங்களில் ஈடுபட்டவர்களின் கடமையாகும்.

### ஒழுங்கமைப்பு/ஆலோசனை வழங்கும் அளவுகள்

1. உயர் ஆபத்து மிக்க குறிப்பிட்ட பிரதேசங்களில் பயணிக்கின்ற வர்த்தக கப்பல்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்களை அடையாளம் கண்டு அவற்றை ஈடுசெய்வதற்கான காப்புறுதி தீர்வுகளை வழங்குகின்ற ஐ.நாவின் நிறுவனமாகிய இன்டர்நெஷனல் மெரிடைம் நிறுவனமானது வெளிநாட்டு காப்புறுதியாளர்களிடமிருந்து கடத்தல் மற்றும் கப்பம் கோரல் தொடர்பான காப்புறுதி உள்ளடக்கம் ஒன்றைப் பெறுவதற்கு அத்தகைய காப்புறுதியை உள்நாட்டு கம்பனிகள் எவையும் வழங்காத காரணத்தால் அதற்கான அனுமதியை சபையிடம் கோரியது. சபையானது இவ்விடயம் சம்பந்தமாக விசாரித்து அதற்கான அனுமதியை வெளிநாட்டு காப்புறுதி தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 101(1) ஆம் பிரிவிற்கு அமைய இரண்டு வருடங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்தது.

   சட்டத்தின் 101 (1) ஆம் பிரிவிற்கு அமைவாக இலங்கையில் உள்ள எவரும், சபையின் எழுத்து மூல முன் அனுமதியின்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத ஒரு காப்புறுதியாளருடன் மீள் காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடையவை தவிர்ந்த வேறெந்த, காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளல் ஆகாது.

   சட்டத்தின் 101 (2) ஆம் பிரிவு கூறுகின்றவாறு, சபை அனுமதிகளை வழங்கும் போது காப்புறுதி தொழில் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையையும் தேசிய நலனையும் கருத்தில் கொள்ளும்.

2. காப்புறுதியாளர் ஒன்றிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த பணிப்புரையை சட்டத்தின் 57 (2) ஆம் பிரிவிற்கு அமைவாக இரத்து செய்து சொல்லப்பட்ட காப்புறுதியாளரின் அறிக்கையிடும் அமைப்பு முறையை ஒரு மாதத்திலிருந்து காலாண்டாக மாற்றுவதற்கான அனுமதியை சபை வழங்கியது.

   அறிக்கையிடும் காலத்தின் போது தேவைப்பட்ட கடன்தீர் எல்லையின் மட்டங்களை கம்பனி பேணியதன் காரணமாக இவ்வாறு செய்யப்பட்டது.

   சட்டத்தின் 57 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு பணிப்புரைகளையும் மாற்றுவதற்கு அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரத்தை சட்டத்தின் 57 (2) ஆம் பிரிவு சபைக்கு வழங்குகின்றது. அவ்வாறு செய்யும் போது, சபைக்கு அளிக்கப்பட்ட எந்தவொரு கூற்றுகளுக்கும் ஏற்றவாறான நிபந்தனைகளை சபை விதிக்கும்.

3. வெளிநாட்டு காப்புறுதி கம்பனி ஒன்று 2012/2013 ஆம் ஆண்டிற்கு தமது செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கான தொழில்சார் உத்தரவாத காப்பீடு ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தனது இலங்கையிலுள்ள தொழிழ்சார் கணக்கீட்டு நிறுவனத்தின் ஊடாக (இலங்கை கிளை) சபையிடமிருந்து அதிகாரத்தைக் கோரியது. இந்தக் கோரிக்கை உலக நிறுவனத்தின் இலங்கை கிளை தமது க்ளோபல் காப்புறுதி ஒழுங்குகளுடன் இணைந்து பங்கேற்க வேண்டும் எனும் கோரிக்கையின் தொடர்ச்சியாகும். எவ்வாறாயினும். இக்கோரிக்கை சபையினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சபையுடன் பதிவு செய்துள்ள ஒரு காப்புறுதியாளரிடமிருந்து, இலங்கை கிளையின் செயற்பாட்டிற்கான தொழிச்சார் உத்தரவாதக் காப்பீட்டை கிளை பெற வேண்டும் என்பது சபையின் தேவைப்பாடாக இருந்தது.

4. காப்புறுதி தரகராக பதிவை புதுப்பித்துக் கொள்ளும் விண்ணப்பம், இன்னும் அதிகமான பாவனையாளர் திருப்தியுடையதாகவும், திருத்தச் சட்டத்திற்கு ஒத்ததாகவும் இருப்பதற்காக சபை இதனை மேலும் மீள் திருத்தம் செய்தது. பதிவு புதுப்பித்தல் வழங்கப்படும் முன்னர் விண்ணபதாரி விண்ணப்பத்தை மீளப் பெறுவாராயின் விண்ணப்பதாரிக்கு புதுப்பித்தல் கட்டணத்தின் 50% மட்டுமே மீளளிக்கப்படுமென்றும் விண்ணப்பம் குறிப்பிடுகின்றது.

5. மாலைத் தீவுகளில் பதிவு செய்யப்படவுள்ள உத்தேச காப்புறுதி துணை நிறுவனம் ஒன்றிற்கு மாலைத்தீவு ரூபியா 10 மில்லியனை முதலீடு செய்வதற்கும் சொல்லப்பட்ட அதன் கிளை அலுவலகத்தின் சொத்துகளையும் பொறுப்புகளையும் உப நிறுவனத்திற்கு மாற்றுவதற்கும் காப்புறுதியாளர் ஒருவரினால், சபை யிடமிருந்து அனுமதி கோரப்பட்டது.

   சொல்லப்பட்ட காப்புறுதியாளரினால் சபைக்கு குறிப்பிட்ட பொறுப்பேற்றல்கள் வழங்கப்பட்டதன் பின்னர், காப்புறுதி சட்டத்தின் 25 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 2005 அக்டோபர் 12 ஆம் திகதியிட்ட 1414/19 ஆம் இல வர்தமானியின் 4வது நிபந்தனையின் பிரகாரம், சொல்லப்பட்ட முதலீட்டிற்கும், சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மாற்றத்திற்கும் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

   சட்டத்தின் 25 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக சட்டத்தின் கீழ் காப்புறுதியாள் ஒருவரினால் பேணப்படும் ஒதுக்குகள் அல்லது நிதியங்களின் சொத்துகளும் அத்தகைய காப்புறுதியாளரின் ஏனைய அனைத்து சொத்துகளும் காப்புறுதியாளர் ஒருவரின் சார்பாக செய்யப்பட்ட விண்ணப்ப சபையினால் அனுமதிக்கப்பட்டிருந்தால் அன்றி இலங்கையில் வைத்திருக்கப்பட வேண்டும்.

   2005 அக்டோபர் 12 ஆம் திகதியிட்ட 1414/19 ஆம் இலக்க வர்த்தமானியின் 4வது நிபந்தனையில், இலங்கைக்கு வெளியில் தனது சொத்துகளை வைத்திருக்க ஒரு காப்புறுதியாளர் விரும்புவாறாயின் சபையினால் அனுமதியளிக்கக் கூடிய முதலீட்டின் அளவுகளும், வகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற் பாடுகளுக்கமைவாக காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பணிப்பாளர்களின் நியமனத்திற்காக அனேக விண்ணப்பங்களை சபை இவ்வாண்டின் போது பெற்றுள்ளது.

7. காப்புறுதி தரகுக் கம்பனி ஒன்றின் பணியாளர் ஒருவர் தன்னை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதிநிதியாக வெளிப்படுத்திக் கொண்டதற்காகவும், குறைந்த விலை களில் வாகன காப்புறுதி சேவையை வழங்கியதற்காகவும் அவரை எச்சரிக்குமாறும் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளை தவிர்த் துக் கொள்ளுமாறும் அறிவுறுத்த வேண்டுமென காப்புறுதி தரகுக் கம்பனிக்கு சபை பணித்துள்ளது.

8. வலுவான நிதியியல் அந்தஸ்தை வெளிப்படுத்தத் தவறியமையால். காப்புறுதி தரகராக பதிவு செய்வதற்கு, ஒரு கம்பனியினால் அளிக்கப்பட்ட விண்ணப்பம் சபையினால் நிராகரிக்கப் பட்டது.

9. கடந்த ஆண்டுகளின்போது காப்புறுதி தரகர்களாக பதிவு செய்வதற்கு விரும்பிய கம்பனிகளிடமிருந்து கிடைத்த பெருந்தொகையான விண்ணப்பங்களை கருத்தில் கொண்டு, இது தொடர்பாக மேலதிக அறிவித்தல்கள் பிரசுரிக்கப்படும் வரை 2012 ஏப்பிரல் 27 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு சபை தீர்மானித்தது. காப்புறுதி தொழிலின் ஆலோசணையுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### ஒழுங்கமைப்பு சீர்திருத்தங்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்

சபையினால் சட்டத்திற்கான திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டு நிதியும் திட்டமிடலும் அமைச்சிற்கு அங்கீகாரதிற்காக அனுப்பப் பட்டது. சபையின் பெயரை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணையம் என மாற்றுவதை திருத்தங்கள் கவனித்ததுடன் காப்புறுதி முகவர் ஒருவர், ஒரு ஆயுள் காப்புறுதி கம்பனிக்கும் ஒரு பொது

# தொழிற்பாட்டு மீளாய்வு

காப்புறுதி கம்பனிக்கும் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### விதி முறைகளுக்கான திருத்தங்கள்

2004 மே 17 ஆம் திகதிய 1341/8 ஆம் இல. அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கடன்தீர் எல்லை (பொதுக் காப்புறுதி) விதிமுறைகளையும் மற்றும் 2002 செப்டம்பர் 24 ஆம் திகதிய 1255/12 ஆம் இல. அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கடன்தீர் எல்லை (நீண்டகால காப்புறுதி) விதிமுறைகளையும் சபை திருத்தியமைத்தது. சபையின் கடன் தீர் எல்லை விதிமுறைகள், உலகளாவிய ரீதியான காப்புறுதித் துறை தொடர்பான மாறுபடுகின்ற தேவைப்பாடுகள் மற்றும் வர்த்தக விவகாரங்கள் தொடர்பான மாறுபடுகின்ற போக்குகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் முகமாக இவை மீளமைக்கப்பட்டன. இத் திருத்தங்கள் 2011 மார்ச் 18 ஆம் திகதிய 1697/27 ஆம் இல. அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு 2011 ஏப்பிரல் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கும் வந்தன. சொல்லப்பட்ட கடன்தீர் எல்லை விதி முறைகள் மேலும் திருத்தப்பட்டு 2012 ஜுலை 24 ஆம் திகதிய 1768/12 ஆம் இல. அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்துடன் பதிவு செய்துள்ள கடன் தரப்படுத்தல் முகவர் நிலையங்களின் சங்கங்களும் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கடன் தரப்படுத்தல் முகவர் நிலையங்கள் தொடர்பானதாகவும் திருத்தங்கள் இருக்கும்.

முன்னைய கடன்தீர் எல்லை முறைகளினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தரப்படுத்தல் முகவர் நிலையங்களுக்கு மேலதிகமானவையாக இவை இருக்கும். பங்கு பரிவர்த்தனையின் பட்டியலிடப்பட்ட கம்பனியினால் வழங்கப்பட்ட சொத்துகளை ஈடாகக் கொண்ட பிணையங்களையும் திருத்தங்கள் மேலும் அங்கீகரிக்கின்றதுடன், கடன்தீர் எல்லையை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய சொத்துகளை, பத்திரங்களுக்கான முதலீட்டு வகைகளின் தரப்படுத்தலாகவும் கொண்டு செல்லுகின்றது.

மேலும், சபையினால், சட்டத்தின் பகுதி VIII மற்றும் VIII அ விற்கு அமைவாக, நிறுவன முகவர்கள் மற்றும் நட்ட சீராக்கிகளை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளும் வரைவு செய்யப்பட்டன.

### தீர்மானங்களுக்கான திருத்தங்களும் புதுதீர்மானங்களை அறிமுகப்படுத்தலும்

கடன்தீர் எல்லை விதிமுறைகளில் செய்யப்பட்ட திருத்தங்களை செயற்படுத்துவதற்கு திருத்தங்கள் செய்யப்பட்டன. அரசாங்க பிணையங்களில் மிகக் குறைந்த தேவைப்பாட்டு தொகையை முதலீடு செய்த பின்னர், நீண்டகால காப்புறுதி நிதியத்தின் எஞ்சிய சொத்துகளும், தொழில்நுட்ப ஒதுக்குகளும், பின்வரும் முறைகளில் முதலிடப்பட வேண்டும் என்பதை 1 ஆம் இல. தீர்மானம் குறிப்பிடுகின்றது.

காப்புறுதி கம்பனிகளின் வருடாந்த வருவாய்கள் தொடர்பான, சட்டத்தின் 47 (i) & 56 ஆம் பிரிவின் கீழ், சபையினால் 2012 மார்ச் 30 ஆம் திகதியில் 14 ஆம் இல. தீர்மானம் செய்யப்பட்டது. அதற்கமைய, ஒவ்வொரு காப்புறுதி கம்பனியும், 2011 ஜனவரி முதலாம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒவ்வொரு நிதி ஆண்டிலும், நிதி ஆண்டின் முடிவிற்கு பின்வரும் ஆறு மாதங்களுக்குள், மீள் திருத்தப்பட்ட மாதிரிகளுக்கு அமைய ஆண்டிற்கான வருவாயையும் (கடன்தீர் எல்லை விதி முறைகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்களுடன் ஒத்து போவதற்கென மீள் திருத்தப்பட்டது) அதனுடன் சேர்த்து அரசாங்க பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பிடித்துவைத்த கூற்றும் சபைக்கு அளிக்கப்பட வேண்டும்.

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான முதலாவது சமர்ப்பிப்பு 2012 ஜுன் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் சபைக்கு அளிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

காப்புறுதி கம்பனிகளின் கணிப்பீட்டு சுருக்கம் தொடர்பாக சட்டத்தின் 48 (i) ஆம் பிரிவின் கீழ், 2002 அக்டோபர் 30 இன் 6 ஆம் இல. தீர்மானம் நீக்கப்பட்டு 2012 மார்ச் 30 இல் 15 ஆம் இல. தீர்மானத்தை சபை அறிமுகப்படுத்தியது. 2011 ஜனவரி முதலாம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒவ்வொரு நிதி ஆண்டிலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை நடத்தும் ஒவ்வொரு காப்புறுதியாளரும், கணிப்பீட்டாளரினால் செய்யப்பட்ட சுருக்கமொன்றை அளிக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை சொல்லப்பட்ட தீர்மானம் ஏற்படுத்தியுள்ளது. நிதி ஆண்டின் முடிவிற்கு பின்வரும் ஆறு மாதங்களுக்குள், மீள்திருத்தப்பட்ட மாதிரிகளுக்கு அமைய அத்தகைய சுருக்கங்களை சபைக்கு அளிக்க வேண்டும். (கடன்தீர் எல்லை விதிமுறைகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்களுடன் ஒத்து போவதற்கென மீள் திருத்தப்பட்டது.) 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான முதலாவது சமர்ப்பிப்பு 2012 ஜுன் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் சபைக்கு அளிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

### ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள்

காப்புறுதியாளர்களினால் கொடுப்பனவு செய்யப்பட்ட பதிவு செய்தல் கட்டணம், மற்றும் வருடாந்த கட்டணம் தொடர்பாக 2005 அக்டோபர் 12 இன் 1414/19 ஆம் இல. அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளை திருத்தி புதிய நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. காப்புறுதி வியாபாரத்தின் ஒரு வகுப்பிற்கான கட்டணம் ரூபா 250,000.00 இலிருந்து ரூபா 500,000.00 ஆக அதிகரித்தது. முதலாவது செயற்பாட்டு நாட்காட்டி ஆண்டிற்கான காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகுப்பிற்கும், ரூபா 100,000.00 ஆக வருடாந்த கட்டணம் மீள்திருத்தப்பட்டதுடன், இரண்டாவது நாட்காட்டி ஆண்டின் செயற்பாட்டின் ஆரம்பத்திலிருந்து காப்புறுதி வர்த்தகத்தின் ஒவ்வொரு வகுப்பு தொடர்பாகவும் ரூபா 200,000.00 அல்லது முன்னைய நிதி ஆண்டின் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகுப்பிற்கும், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் 0.075% மும் கூடிய தொகை எதுவோ அதுவும் கொடுப்பனவு செய்யப்படும்.

சபையினால் வழங்கப்பட்ட மீள் காப்புறுதி ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான விதிகளும் நிபந்தனைகளும், (2003.03.31 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஏற்புடையது) உள்நாட்டின் காப்புறுதி கம்பனிகளின் மீள் காப்புறுதி ஏற்பாடுகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், 2013 இலிருந்து நடைமுறைப்படுத்தக்கூடியதாக மீள் திருத்தப்பட்டது.

மீள் காப்புறுதிக்கென பிரேரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் நிபந்தனைகளின் முக்கிய அம்மசங்கள் பின்வருமாறு..

(1) ஏற்றுக் கொள்ளப்பட்ட தரப்படுத்தல் நிறுவனங்களினால் தரப்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்படும்

(2) மீள் காப்புறுதியாளருக்கு தரப்படுத்தலின் வகைகள் (கடன் தரப்படுத்தல் அல்லது நிதியியல் வலுவின் தரப்படுத்தல்) கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன்

(3) சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் மீள்காப்புறுதியாளரின் தரப்படுத்தலுக்கான கால வரையறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. (18 மாதங்கள்) .

சட்டத்தின் 31 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள மீள் திருத்தப்பட்ட மீள்காப்புறுதி விதிகளினதும் நிபந்தனைகளினதும், அறிக்கையிடலுக்கான புதிய மாதிரிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## புலனாய்வுசார் மீளாய்வு

சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நியம கடப்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினதும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களினதும் ஈடுபாடுகளை பாதுகாக்க வேண்டியது சபையின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.

அதற்கமைய, காப்புறுதி ஒன்றின் கீழ் உரிமையாளர்களுக்கிடையில் உடன்மையை கொடுத்து தீர்த்தல் தொடர்பான முரன்பாடு ஒன்று உருவாகுமாயின், அத்தகையவர், விசாரணைக்காக, சபைக்கு அந்த வாக்குவாதத்தை தனது சொந்த விருப்பத்தின் பேரில் முன்வைக்கலாம். சட்டத்தின் 98 ஆம் பிரிவின் கீழ் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

மீளாய்வு ஆண்டின் போது, சபைக்கு மொத்தமாக 274 முறைப்பாடுகள் கிடைத்தன. இவற்றில் 262 முறைப்பாடுகள் ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட்டன.

| பொது | எண் | ஆயுள் | எண் | முகவர் சம்பந்தமானவை | எண் |
|---|---|---|---|---|---|
| வாகனம் | 110 | மருத்துவமனை | 15 | வேலைவாய்ப்பு தொடர்பானவை | 07 |
| கடல்சார்ந்தது | 03 | மரணத்திற்கான நன்மைகள் | 15 | தகைமைகள் | 07 |
| தீ அபாயம் | 05 | அங்கவீனம் | 03 | சட்டவிரோத கையாடல் | 17 |
| எஸ்ஆர்சிசி/ டிசி | 04 | காலம் கடந்தவை | 06 | ஏனையவை | 13 |
| கொள்ளைச் சம்பவம் | 15 | உள்ளடக்கம் நீக்கப்பட்ட/ புதுப்பிக்கப்படாத காப்புறுதி | 02 | | |
| செயலாற்றுகை/ முன் கொடுப்பனவுகள் | 02 | முதிர்வுகால நன்மைகள்/ ஒப்புவிக்கப்பட்ட பெறுமதி | 18 | | |
| ஊழியர்கள் இழப்பீடு | 01 | ஏனையவை - கடன்கள் | 01 | | |
| வெள்ளம் | 02 | கட்டுப்பண மீளளிப்புகள் | 09 | | |
| அக்ரஹா/ குரு அபிமானி | 04 | முதலீட்டு காப்புறுதிகள் | 04 | | |
| மருத்துவம்/ சுகாதார காப்புறுதி | 02 | ஆபத்தான நோய்கள் | 02 | | |
| பயண காப்புறுதி | 01 | | | | |
| ஒப்பந்தக்காரர்களின் இடர் | 01 | | | | |
| இடையிலுள்ள காசு | 01 | | | | |
| வங்கியாளர்களின் உத்தரவாதம் | 03 | | | | |
| கடன் பாதுகாப்பு | 01 | | | | |

### 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்த முறைப்பாடுகளும் நிறைவேற்றப்பட்டவையும்






# தொழிற்பாட்டு மீளாய்வு

**கிடைத்த முரண்பாடுகளின் மொத்த எண்ணிக்கை சதவீதத்தில் எதிர், ஒவ்வொரு காப்புறுதி கம்பனியின் சந்தை பங்கு**




### ஏனைய புலனாய்வுகள்

- மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில், காப்புறுதி கம்பனி ஒன்றினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த குறிப்பிட்டதொரு புலனாய்வாளரின் நேர்மையற்ற நடத்தையை சபை விசாரணை செய்தது. சம்பந்தப்பட்ட நபரின் நடத்தையை விசாரணை செய்தபோது அவர் அரசாங்க சேவையிலுள்ள அதிகாரியைப் போன்று ஆள்மாறாட்டம் செய்திருப்பது தெரிய வந்தது. இவ்விடயம், பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பொதுவாகவும், புலனாய்வாளர்களின் நேர்மையான நடத்தையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் சபையினால், தொழிலுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.
- பங்குகள் கொள்வனவு செய்வது தொடர்பாக ஒரு காப்புறுதி கம்பனியின் பணியாட்களிடமிருந்து அனேக முறைபாடுகள் கிடைக்கப் பெற்றதை அடுத்து விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய ஒழுங்கமைப்பு அதிகார சபைகளின் உதவியுடன், இவ்விடயம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

### ஏனையவை

- சபை, தனது விசாரணைகளுக்கு சான்றாக ஆவண அடிப்படையிலான பகுப்பாய்வை கருத்திற் கொண்டு செயற்படுகின்றது. எனவே, அதன் முன்வைக்கப்படும் நீதிமன்றத்திற்குரிய குறிப்பிட்ட தடயங்கள் மீதான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு, அரசாங்க பகுப்பாய்வாளரின் நிபுணத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது சபைக்கு அவசியமாகியுள்ளது. எனவே, அரசாங்க பகுப்பாய்வாளருடன் கலந்துரையாடிய பின்னர், அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்றில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை சபை ஆரம்பித்துள்ளது.
- மூன்றாந்தரப்பு காப்புறுதியும் அதன் வாய்ப்புகளும் பல கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன. எனவே, காப்புறுதி தொழிலும் மற்றும் வாகனப் போக்குவரத்து திணைக்களமும் சேர்ந்து, நடப்பில் உள்ள மூன்றாந் தரப்பு காப்புறுதியை மீளவும் பார்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்தது. அனேக தீர்க்கமான ஆலோசனைகளின் பின்னர், வாகனப் போக்குவரத்து சட்டத்திற்கான திருத்தங்களில் உள்ளடக்கப்படுவதற்காக, வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கும் தொழிலின் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. சொல்லப்பட்ட அவதானிப்புகளில் இருந்த உளவியல் ரீதியான கெடுதி, மற்றும் மூன்றாந்தரப்பு ஆதனங்களின் சேதம் என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.
- 2012 ஆம் ஆண்டின் போது, சபை ஒரு தொகையான முறைபாடுகளைப் பெற்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுமக்களின் அக்கறைகளுடன் சேர்த்து, முறைபாடுகளின் வகைகளை பகுப்பாய்வு செய்தன் பின்னர், சபையினால் வெளியிடப்பட்ட பொதுமக்களின் விழிப்புணர்வு விடயங்களில், பின்வரும் துறைகள் முக்கியத்துவம் பெற்றன.

1. பிரேரணை படிவமொன்றை பூரணப்படுத்தும் போது, மனதில் வைத்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள்.
2. பொருண்மையான காரணிகளை வெளிப்படுத்துவதின் முக்கியத்துவம்
3. காப்புறுதி ஒன்றை வாங்கும் போது அறிந்திருக்க வேண்டியவை.

# தொழிற்பாட்டு மீளாய்வு

### சந்தை அபிவிருத்தியும் - வெளியக உறவுகள் கூறும்

காப்புறுதி வைப்பாளர்களையும், உத்தேச காப்புறுதி வைப்பாளர்களையும் பாதுகாக்கும் நோக்குடன், காப்புறுதி தொடர்பான விடயங்கள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வை விருத்தி செய்வது, சந்தை அபிவிருத்தியினதும் வெளியக தொடர்புகள் கூறினதும் (சஅவெதொ) ஒட்டு மொத்த நோக்கமாகவுள்ளது.

இலக்கிடப்பட்டிருந்த வாடிக்கையாளர் களை அணுகுவதற்கு பின்வரும் தொடர்பாடல் ஊடகத் துறைகள் 2012 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டன.

1. கிராமிய சமூகத்தினருடன் தொடர் பாடல்களைக் கொண்டுள்ள குழுக்கள் - கிராம சேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள், வெளிக்கள அலுவலர்கள்.

2. அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள்.

3. பாடசாலை மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள்.

“இலங்கை காப்புறுதி சபையின் பங்களிப்பும் நடவடிக்கைகளும் மற்றும் காப்புறுதி துறையும்” எனும் தலைப்பை சூழ்ந்ததாக இவ் ஆண்டின் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் இருந்தன. முன்னைய ஆண்டுகளில் பொது மக்களிடமிருந்து கிடைத்த விசாரணைகளை ஆராய்ந்ததன் பின்னர் இத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டது.

### பிரதேச செயலாளர் பிரிவுகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

பொது மக்களுடன் நேரடியான தொடர்பாடல்களை கொண்டுள்ள அரசாங்க அதிகாரிகளின் அறிவாற்றலை விருத்தி செய்வதற்காக, பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் ஒன்றிணைந்து இந் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

பூர்வாங்க நடவடிக்கையாக, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

400 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய, உக்குவலை, திஸ்ஸ மஹாராமய, அம்மபலாங்கொட, ஹரிஸ்-பத்துவ, கம்புறுபிடிய, கொத்மலை, மற்றும் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏழு(7) விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

### பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

மாணவர்களுக்கு, வர்த்தகப் பிரிவில் கல்வி கற்பதற்கும் உயர்தர மாணவர்களுக்கு, அவர்களின் தொடர்புடைய பாடசாலை களிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்படும் போதும் கருத்தரங்குகளை சபை நடத்தியது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி கொழும்பு, றோயல் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டபோது ஏறத்தாழ 350 மாணவர்களும் வர்த்தகப் பிரிவு ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

பயாகலவில் பொதுவில நவதோய வித்தியாலயத்தில் நடைபெற்ற அவர்களின் “வர்த்தக தின” விழா நிகழ்ச்சிகளுக்கு கிடைத்த அழைப்பின் பேரில் ஆய்வாளர் ஒருவரை சபை வழங்கியது.



### கண்காட்சிகளில் பங்கேற்பு

4 பெப்ரவரி - 2012 இலிருந்து 12 பெப்ரவரி 2012 வரை ஒயாமடுவ, அநுராதபுரத்தில் நடந்த ” தெயட்ட கிருள” தேசிய கண்காட்சியில் சபை ஆறாவது முறையாகவும் தொடர்ந்து பங்கேற்றது. கண்காட்சி முடிவிற்கு வந்த பின்னர், பிணையங்களும் பரிவர்த்தனை ஆணையகமும் உடன் கூட்டிணைந்து நிரந்தர கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குக் கையளிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிச் சங்கம் (Insurance Association of Sri Lanka), இலங்கை காப்புறுதி நிறுவனம், (Sri Lanka Insurance Institute) மற்றும் இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் (Sri Lanka Insurance Brokers Association ஆகியவற்றின் பிரதிநிதிகள் சபையுடன் சேர்ந்து முதல் முறையாக “தெயட்ட கிருள” தேசிய கண்காட்சியில் பங்கேற்றதுடன் பொது மக்களின் விசாரணைகளுக்கு பதிலளிப்பதிலும் பங்கேற்றனர்.





# தொழிற்பாட்டு மீளாய்வு

### ஊடக நேர்காணல்கள்

தலைவியுடனான சுருக்கமான நேர்காணல்களுடன் சேர்ந்து இலங்கை காப்புறுதி சபை குறித்த ஆவணப்படத்தைப் பயன்படுத்தி "இலங்கை காப்புறுதி சபை என்றால் என்ன மற்றும் அதன் நடவடிக்கைகள்" பற்றியும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பும் ஆவணப்படுத்தப்பட்ட செய்தி நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்பியது. இதற்கு மேலதிகமாக இலங்கை சுயாதீன வலையமைப்பு அதன் "ரூபிஸ் & சென்ஸ்" (Rupees & Sence) நிகழ்ச்சியில் பணிப்பாளர் நாயகத்தை நேர்காணல் செய்தது.

### பிரசுரங்கள்

காப்புறுதி கருப்பொருள்கள் மீதான பொது மக்களின் புரிதலை விருத்தி செய்வதற்கும் காப்புறுதி உற்பத்திகளை கொள்வனவு செய்யும் போது அவர்களுக்கு உதவக்கூடிய காப்புறுதி குறித்த ஏனைய முக்கிய விடயங்கள் பற்றியும் அனேக பிரசுரங்களை, மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின் போது சபை பிரசுரித்தது.

பொது மக்களின் நன்மையை உத்தேசித்து பத்திரிகை விளம்பரங்கள், பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் போன்றவற்றையும் சபை பிரசுரித்தது.

**அ) விளம்பரங்கள் / அனுபந்தங்கள்**

- 2012 பெப்ரவரி 4 அன்று டெய்லி நியுஸ் பத்திரிகையில் சுதந்திர தினம்/தெயட்ட கிருள பத்திரிகை அனுபந்தம்.
- "கொழும்புரே சிரிய" ஜுலை 2012, தினமின அனுபந்தத்தில் காப்புறுதியொன்றை வாங்கும் போது எனும் இலங்கை காப்புறுதி சபையிடருந்து ஒரு செய்தி.

**ஆ) பத்திரிகை வெளியீடுகள்**

- 2011 - ஜுன் 2012 ஆம் ஆண்டின் போது காப்புறுதி தொழிலின் செயலாற்றல்கள்

  2012 இன் முதலாவது அரைப்பகுதியில் மூன்று மொழிகளிலும் காப்புறுதி தொழிலின் செயலாற்றல்கள் ஒக்டோபர் 2012.

**இ) பத்திரிகை அறிவித்தல்கள்**

- பொதுமக்களுக்கான அறிவித்தல் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகளின் பட்டியல் மூன்று மொழிகளிலும் - ஜுன் 2012.







**ஈ) பத்திரிகை செய்திகள்**

- சண்டே டைம்ஸ் பத்திரிகையின் மார்ச் 2012 காப்புறுதி அனுபந்தத்தில் "காப்புறுதி தொழிலின் ஒழுங்க மைப்பாளர் என பொது மக்களுக்கு இலங்கை காப்புறுதி சபையை அறிமுகப்படுத்தியது."

**உ) கையேடுகள் (சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள்)**

- உங்களுக்குத் தெரியுமா? - ஆயுள் காப்புறுதி.
- உங்களுக்குத் தெரியுமா? - பொது காப்புறுதி.
- காப்புறுதி பிரேரணை படிவம்.
- பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகளின் பட்டியல்.
- காப்புறுதி ஒன்றை வாங்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

### ஏனைய நடவடிக்கைகள்

**1. ஆவணப்படம் இகாச**

சபையின் பங்களிப்பையும் நடவடிக்கைகளையும் காண்பிக்கும் ஆவணப்படமொன்று ஆங்கில உப தலைப்புகளுடன் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டது. சபையின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் இது பயன்படுத்தப்பட்டது.

**2. உற்பத்தி பகுப்பாய்வு**

காப்புறுதி வைப்பாளர்களின் நன்மைகளை விருத்தி செய்க்கூடிய ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன், சபையுடன் ஏற்கனவே பதிவுகளை செய்திருந்த காப்புறுதி




கம்பனிகளின் உற்பத்திகளை மீளாய்வு செய்வதிலும் சபை ஈடுபட்டது. சபையின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் இது பயன்படுத்தப்பட்டது. 2012 இன் போது பூர்வாங்க நவடிக்கையாக வாகன காப்புறுதி காப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.

**3. பொது மக்களுக்கான நிபுணத்துவ ஆலோசனை**

மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின்போது, காப்புறுதி தொழில் தொடர்பான தகவல்கள், மற்றும் காப்புறுதி தொடர்பான விடயங்கள் குறித்து பொது மக்கள், காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் அது போன்ற ஏனைய பங்குடமையாளர்களிடமிருந்து கிடைத்த அனேக கோரிக்கைகள் குறிதது சபை நடவடிக்கை எடுத்தது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## நிர்வாக மீளாய்வு

### பணியாளர் தொகுதி

எந்தவொரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெருமளவில் தங்கியிருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும் பாகவிருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

சபை நிறுவன கட்டமைப்பொன்றை நிறுவியுள்ளது. காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாது காக்கும் நோக்கத்துடன், இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்றது.

தேவைப்படும் தொழில் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, இந்த ஆரம்ப முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, ஏழு நிறைவேற்றதிகாரம் கொண்டவர்களும், இரண்டு வாகன ஓட்டுனர்களும். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாளர்களின் வலு 39 பதவிகளாக இருந்தது.

கீழேயுள்ள அட்டவணையில் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான பணியாளர்களின் கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

| பணியாளர்களின் எண்ணிக்கை | கல்வி / தொழில்சார் தகைமை | | | | |
|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளும் 1வது பட்டம் தொழில்சார்ந்த மற்றும் தகைமையுள்ளவர்களும் | பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளும் தொழில்சார் தகைமையுள்ளவர்களும் | 1வது பட்டம் & தொழில் சார்ந்த தகைமையுள்ளவர்கள் | 1வது பட்டம் | தொழில்சார்ந்த தகைமை |
| 39 | 02 | 04 | 07 | 10 | 05 |

### பயிற்சி

பணியாளர்கள் தமது செயலாற்றல் களையும், முறைப்படுத்தப்பட்ட இலக்கு களையும் சீர்படுத்திக் கொள்வதற்கான அறிவாற்றலை பெற்றுக் கொள்வதற்கும், தொழில் தொடர்பான திறமைகளை கற்றுக் கொள்வதற்கும், அவர்களுக்கு உதவுகின்ற பரந்த கொள்கையைக் கொண்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தவது, ஆண்டின்போது பணியாளர்களின் திறமைகளை வலுப்படுத்தவதற்கென உள்நாட்டிலும் அதைப் போன்றே வெளிநாடுகளிலும் பயிற்சி பெறும் வாய்புகள் வழங்கப்பட்டன.

| வகை | 2011 (ரூபா) | 2012 (ரூபா) |
|---|---|---|
| உள்நாட்டு பயிற்சி | 1,606,760 | 811,321 |
| வெளிநாட்டு பயிற்சி | 2,514,520 | 6,290,479 |

### பணியாளர் நலன்புரி

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, - அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி காப்பீடு வாகன மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள் பண்டிகை நாள் முற்பணக் கொடுப்பனவுகள், உள்ளடங்களாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் உள்வீட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்கு படுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும் அவர்களின் குடும்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் சபை வழங்குகின்றது.

### தகவல் தொழில்நுட்பம்

சபை தனது மின் அஞ்சல் வசதிகளுக்கு, நிறுவன தீர்வுகளை வழங்குவதற்காக மீளாய்வின் கீழ் வரும் ஆண்டில் சிம்ப்ரா கலேபரேசன் சூட் (Cimbra Collaboration Suit) இற்கு நகர்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டது. தற்போதுள்ள தகவல் தொழில் நுட்ப தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய உயர் தரத்திற்கு அமைவாக சபையின் வன்பொருள் (Hardware) உபகரணங்கள் தரமுயர்த்தப்பட்டன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## நிதிசார் மீளாய்வு

### காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் (PPF)

காப்புறுதி தொழில் சட்டத்தின் பிரகாரம், காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற, அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்கும் உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் (செஸ்) கவனமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இவ் ஆண்டுக் காலத்தில் அத்தகைய நிதிகளை உரியவாறு இலங்கை காப்புறுதி சபையானது முதலீடு செய்ததோடு, பின்வரும் வரைபடம் 1 செஸ் சேகரிப்பு மற்றும் ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானம் ஆகியவற்றை விபரித்துக் காட்டுகின்றது.

**வரைபடம் 1**

***செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும் 2008 - 2012 ஆண்டுகாலப் பகுதிக்கு***




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (ரூ. மி.) | 133 | 139 | 145 | 217 | 237 |
| முதலீட்டு வருமானம் (ரூ.மி.) | 70 | 91 | 76 | 80 | 136 |

கடந்த ஐந்து வருடங்களுக்கான செஸ் வருமானம் தொடர்பான வளர்ச்சியை மேலுள்ள வரைபடம் தெளிவுறுத்துகின்றது. வட்டிவீத அதிகரிப்பின் காரணமாகவும் காப்புறுதி கம்பனிகளின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டண அதிகரிப்புகளினாலும் 2011 இலிருந்து 2012 வரை முதலீட்டு வருமானம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடைந்தள்ளதை வரைபடம் காண்பிக்கின்றது. காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதியானது கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்துள்ளதோடு அதனை வரைபடம் 2 தெளிவாகக் காட்டுகின்றது

**வரைபடம் 2**

***காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி 2008-2012 ஆண்டுக்காலப் பகுதிக்கானது***




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நிதிய பெறுமதி (ரூ.மி.) | 545 | 755 | 1,012 | 1,276 | 1,622 |

# தொழிற்பாட்டு மீளாய்வு

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது

**வரைபடம் 3**

***2012 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் தொடர்பான சொத்துக்களின் தொகுப்பு***




**சபையின் வருமானம்**

சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடமிருந்தான பதிவுக் கட்டணம்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்ட வருடாந்தக் கட்டணம்
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் வருடாந்த பதிவு புதுப்பித்தல் கட்டணம்
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்

2008 தொடக்கம் 2012 வரை கிடைக்கப்பெற்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரிவுகளை வரைபடம் 4 காட்டுகிறது.

**வரைபடம் 4**

***2008 - 2012 காலப்பகுதிக்கான சபையின் வருமானம்***




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான கட்டணம் (ரூ. மில்) | 26 | 29 | 29 | 35 | 61 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ. மில்) | 2 | 2 | 2 | 3 | 5 |
| ஏனைய வருமானம் (ரூ. மில்) | 15 | 9 | 3 | 1 | 2 |
| கொடைகளின் அங்கீகாரம் (ரூ. மில்) | 6 | 9 | 8 | 6 | 7 |
| மொத்த வருமானம் (ரூ. மில்) | 49 | 49 | 42 | 44 | 75 |

# தொழிற்பாட்டு மீளாய்வு

### சபையின் செலவுகள்

சபையின் மொத்தச் செலவானது 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை அதிகரித்துள்ளது. வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான பற்றாக் குறைக்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க காப்புறுதி வைப் பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து நிதியளிக்கப் பட்டுள்ளது.

**வரைபடம் 5**

***2008-2012 வரையான சபையின் மொத்தச் செலவினங்கள்***




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவினம் (ரூ. மில்) | 58 | 66 | 71 | 74 | 94 |

மொத்தச் செலவினம் (ரூ. மில்)

# நிதியியல் தகவல்

நிதி நிலைமையின் கூற்று ....................................70

முழுமையான வருமானக் கூற்று.............................71

காசுப் பாய்ச்சல் கூற்று.........................................72

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதிய

காசுப்பாய்ச்சல் கூற்று ..........................................73

கணக்கீட்டுக் கொள்கைகள் .................................74

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் ...................76



# நிதி நிலமையின் கூற்று

| | குறிப்புகள் | 31.12.12 ஆம் திகதி உள்ளவாறு ரூபா | 31.12.11 ஆம் திகதி உள்ளவாறு மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | **13,165,749** | 12,368,886 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - வாடகையும் மின்சார வைப்புகளும் | 2 | **11,088,660** | 8,728,590 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | 3 | **391,138** | 183,131 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகளும் மற்றும் ஏனையவைகளும் | 2 & 17 | **1,610,930,804** | 1,267,656,277 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 & 17 | **13,513,443** | 10,898,124 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 5 | **1,530,608** | 185,159 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,650,620,402** | 1,300,020,167 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகள்** | | | |
| திரட்டிய நிதியம் | | **-** | - |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் | 6 | **1,622,019,464** | 1,276,384,867 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| மாணியம் | 7 | **13,165,749** | 12,368,887 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 8 | **1,889,445** | 1,833,909 |
| | | **15,055,194** | 14,202,796 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| முற்பணப் பெறுகை | 17 | **4,727,599** | 4,270,018 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 9 | **8,818,145** | 5,162,486 |
| | | **13,545,744** | 9,432,504 |
| **மொத்த ஒதுக்ககளும் பொறுப்புகளும்** | | **1,650,620,402** | 1,300,020,167 |

இந்த நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பிற்கும் வெளியிடலுக்கும் இலங்கை காப்புறுதி சபையின் அங்கத்தவர்கள் பொறுப்பேற்கின்றனர்.

மேலேயுள்ள நிதி நிலமையின் கூற்று 74 இலிருந்து 81 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகளுக்கு இயைந்ததாக வாசிக்கப்பட வேண்டும்.

இலங்கை காப்புறுதி சபைக்காகவும் அதன் சார்பாகவும்

**இந்ராணி சுகததாச**
*தலைவி*

**எஸ். ஆர் ஆட்டிகல**
*அங்கத்தினர்*

கொழும்பு இலங்கை
27 பெப்ரவரி 2013

# முழுமையான வருமானக் கூற்று

| முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்புகள் | 31.12.2012 ஆம் திகதி உள்ளவாறு ரூபா | 31.12.11 ஆம் திகதி உள்ளவாறு மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருவாய் | 10 & 17 | **65,774,167** | 37,628,544 |
| அங்கீகரிக்கப்பட்ட மாணியங்கள் | 7 | **6,662,626** | 6,040,348 |
| வட்டி வருமானம் | | **1,932,676** | 144,873 |
| ஏனைய வருமானம் | 11 | **172,686** | 415,246 |
| **மொத்த வருமானம்** | | **74,542,155** | 44,229,011 |
| கழிக்க: | | | |
| **செலவினம்** | | | |
| பணியாளர் செலவு | | **48,661,790** | 36,063,408 |
| தொழில்சார் கட்டணங்கள் | | **994,405** | 1,619,785 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | | **43,817,296** | 36,567,718 |
| நிதியும் ஏனையவையும் | | **125,629** | 99,514 |
| **மொத்த செலவினம்** | | **93,599,120** | 74,350,425 |
| வரிக்கு முன்னரான தேறிய பற்றாக்குறை | 12 & 17 | **(19,056,965)** | (30,121,414) |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றம் | 6 | **19,295,177** | 30,132,344 |
| வரிவிதிப்பு | | **(238,212)** | (10,930) |
| வரிக்குப் பின்னரான தேறிய பற்றாக்குறை | | **-** | - |
| **ஆண்டுக்கான தேறிய மிகை** | | **-** | - |

74 இலிருந்து 81 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்புகள் | 31.12.2012 ரூபா | 31.12.11 மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| காலத்திற்கான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | - | - |
| தேய்மானத்திற்கான சீராக்கல்கள் | | 6,582,865 | 6,237,563 |
| ஓய்வூதிய நன்மைக்கான ஏற்பாடு | | 55,536 | 703,074 |
| நீக்கப்படுவதன் மீதான இலாபம் / நட்டம் | | 79,761 | (172,023) |
| மாணியங்களின் அங்கீகரிப்பு | | (6,662,626) | (6,040,348) |
| வருமான வரி | | 238,212 | 10,930 |
| வட்டி வருமானம் | | (1,932,676) | (144,873) |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | (1,638,928) | 594,323 |
| செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றம் | | | |
| பொருட் பதிவேடுகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | | (208,007) | 129,000 |
| கிடைக்க வேண்டியவற்றின் (அதிகரிப்பு) / குறைப்பு | 17 | (2,656,106) | (3,694,969) |
| முற்பண பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு | 17 | 457,580 | 1,920,000 |
| அட்டுறுக்கள் மற்றும் கடன்பட்டோரின் அதிகரிப்பு / (குறைப்பு) | | 3,655,659 | (5,284,774) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | | 1,249,126 | (6,930,743) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | | (389,802) | (6,336,420) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | - | 5,000,000 |
| வட்டி வருமானம் | | 1,735,251 | 152,910 |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்து வருவாய்கள் | | - | 886,826 |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (7,459,488) | (2,502,591) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (5,724,237) | 3,537,145 |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதன மாற்றம் | | 7,459,488 | 2,502,591 |
| நிதிசார் குத்தகைகளில் அதிகரிப்பு | | - | (1,124,441) |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | 7,459,488 | 1,378,150 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் பின் தேறிய (அதிகரிப்பு / (குறைவு) | | 1,345,449 | (1,421,125) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவைகளும் | | 185,159 | 1,606,284 |
| வருட இறுதியில் காசும் சாசுக்கு சமனானவைகளும் | | 1,530,608 | 185,159 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 5 | 1,530,608 | 185,159 |

74 இலிருந்து 81 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று

| முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 31.12.12 ரூபா | 31.12.11 மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் தேறிய அதிகரிப்பு | | **345,634,597** | 264,574,757 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | 17 | **345,634,597** | 264,574,757 |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் மீது | | | |
| கிடைக்க வேண்டிய வட்டியின் (அதிகரிப்பு)/குறைப்பு | | **(12,560,479)** | (8,377,361) |
| செஸ் பெறுகைகளின் (அதிகரிப்பு)/குறைப்பு | | **(10,000,000)** | (13,985,183) |
| வாடகை வைப்புகளின் (அதிகரிப்பு)/குறைப்பு | | **(2,360,070)** | - |
| பிபிஎப் இலிருந்து மாற்றப்படத்தக்க தொகையின் அதிகரிப்பு/(குறைப்பு) | 17 | **702,733** | 8,328,870 |
| | | **(24,217,816)** | (14,033,674) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | **321,416,781** | 250,541,083 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்குள் காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | **212,926,661** | (250,939,905) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | **(534,000,000)** | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | **(321,073,339)** | (250,939,905) |
| காசும் காசுக்கு சமனானவையிலிருந்தும் தேறிய (அதிகரிப்பு)/குறைப்பு | | **343,442** | (398,823) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | **28,457** | 427,280 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | **371,899** | 28,457 |
| வங்கியிலுள்ள காசு | 2 | **371,899** | 28,457 |

74 இலிருந்து 81 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியில் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

### 1.1 தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதித்துறை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு வரலாற்று அடிப்படையில் கிட்டிய ரூபாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கணக்கீட்டு கொள்கைகள் தேவைப்படும் இடங்களில் தொடர்ந்துவரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.2 இணங்குவிற்பிற்கான அறிக்கை

இலங்கை காப்புறுதி சபையின் நிதித்துறை கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரப்படுத்தல்களுக்கு ஏற்றவிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தகைய சொல்லப்பட்ட தரப்படுத்தல்களுக்கு இணங்கியும் செயற்படுகின்றன.

### 1.3 அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு பொருத்தமான சீராக் கல்கள் அல்லது வெளிப்படுத்தல் என்பனவற்றின் தேவையின் அடிப்படையில் நிதித்துறை அறிக்கைகளில் அவசியமானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4 ஒப்பீட்டு இலக்கங்கள்

ஒப்பீட்டு இலக்கங்கள் அனைத்தும் நடப்பு நிதி வருட வெளிப்படுத்தலின் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

### 1.5 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வருமான வரிக்கான ஏற்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பங்கிலாபம் அல்லது வட்டியிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது வருமானம் தவிர்ந்த ஏனையவற்றிற்கு, வருமான வரியிலிருந்து தற்போது சபைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 1.6 வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல்

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால், அவை கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட நேரத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

## 2. ஆதனங்கள் மற்றும் மதிப்பிடற்கான அடிப்படை

### 2.1 உரித்துடைய ஆதனம், பொறி, உபகரணங்கள்

ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் திரட்டிய பெறுமதி தேய்வு கழிக்கப்பட்டு கிரயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆதனம், பொறி, உபகரணங்களின் கொள்விலை என்பது அவற்றை வாங்குவதற்கான பணத்துடன் திட்டமிடப்பட்ட உபயோகத்தில் அவற்றைச் செயற்படு நிலைக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியதாகும்.

#### பெறுமானத் தேய்வு

கீழ்க்காணும் விகிதத்தில் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது.

| | % வருட விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| மரத்தளபாடங்கள், பொருத்துகைகள் | 12.5 |
| அலுவலக மற்றும் ஈடிபி (EDB) உபகரணங்கள் | 25 |
| பயிற்சி உபகரணங்கள் | 25 |

சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகிறது. அதேவேளை, அகற்றும் திகதிவரை பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும்.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் கிரயத்தில் தெரிவிக்கப்பட்டு வருட இறுதியில் வட்டி திரட்டப்படும்.

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்தமட்டக் கொள்விலை அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதி என்பதில் காட்டப்பட்டுள்ளன. முதலில் பெறப்பட்டு முதலில் அகற்றப்பட்டவை அடிப்படையில் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் கணக்கிடப்படுகிறது.

### 2.4 பெறுகைகள்

பெறுகைகள் அனைத்தும் மதிப்பிடப்பட்ட உத்தேச பெறுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 2.5 காசும் காசுக்குச் சமனானவையும்

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்கான காசும் காசுக்குச் சமனானவையும் என்பது, வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பிலுள்ள பணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

# கணக்கீட்டு கொள்கைகள்

**3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

**3.1. ஓய்வூதிய நன்மைகள்**

**3.1.1. அறுதியிட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை**

“ஊழியர் நன்மை” 19 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு தரப்படுத்தலுடன் ஒத்ததாக வெளி வீச்சுகூறு கட்டணமுறையை பாவித்து, பணிக்கொடைக்கான கணக்கின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் வருட சேவை முடிவடைந்ததும் சபை பணிக்கொடையை ஏற்பாடு செய்கிறது. இருந்த போதிலும், பொறுப்புகளின் அடிப்படையில் இந்த ஏற்பாடு சீராக்கப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய ஊழியர் ஒருவரின் தொடர்ச்சியான ஐந்து வருடகால சேவை பூர்த்தியடைந்ததும், பணிக்கொடைக்கான பொறுப்பு ஆரம்பமாகும்.

**3.1.2 அறுதியிடப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.**

சகல நிரந்தர ஊழியர்களும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்க உரிமையுடையவர்களாவார். ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. என்பனவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பை சபை வழங்குகிறது.

**3.2 பொறுப்புகள்**

நிதிநிலமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் எனக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகள், கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவையும் அல்லது அறிக்கையிடும் காலத்திலிருந்து இருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவையுமாகும். நடைமுறையல்லாத பொறுப்புகளாவன, அறிக்கையிடும் காலத்திலிருந்துஒரு வருட காலத்தின் பின்னர் கொடுப்பனவுகளுக்குரிய நிலுவைத் தொகைகளாகும்.

நிதியில் அறிக்கையைத் தயாரிப்பதில் சகல தெரிந்த பொறுப்புகளும் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

**3.3 மாணியங்கள்**

காப்புறுதிதாரரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்களும் சிறு காப்புறுதித் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் மாணியங்கள் எனக் கருதப்பட்ட சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள உபயோக காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

**4. வருமானமும் செலவினமும்**

**4.1 வருமான அங்கீகாரம்**

வருமானம் திரண்ட அடிப்படையில் இனங்காணப் பட்டுள்ளது.

**4.2 அரசாங்க மாணியங்கள்**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் அரசாங்க மாணியங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

**4.3. செலவினங்களை இனங்காணல்**

செலவினத்திலும் பார்க்கக் கூடிய அளவிலான வருமானத்தைத் தீர்மானித்து சபையை நடத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருவாய்க்கு விதிக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன.

**4.4 காசுப்பாய்ச்சல் அறிக்கை**

காசுப்பாய்ச்சல் அறிக்கை மறைமுக வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 சொத்து பொறித்தொகுதியும் கருவிகளும்

| | மோட்டார் வாகனங்கள் ரூபா | தளபாடங்கள் பொருத்துக்கள் இணைப்புகள் ரூபா | அலுவலக உபகரணங்கள் ரூபா | பயிற்சி கருவிகள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| 2012 சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 9,473,243 | 14,283,009 | 20,484,183 | 141,450 | 44,381,885 |
| சேர்ப்புகள் | 6,844,078 | 352,257 | 263,153 | - | 7,459,488 |
| நீக்கல்கள் | - | (2,030,551) | (87,000) | - | (2,117,551) |
| 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | **16,317,321** | **12,604,715** | **20,660,336** | **141,450** | **49,723,822** |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | |
| 2012 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 8,722,606 | 7,609,835 | 15,539,107 | 141,450 | 32,012,998 |
| ஆண்டுக்கான மாற்றம் | 2,163,738 | 1,755,611 | 2,663,517 | - | 6,582,866 |
| நீக்கல்கள் | - | (1,950,791) | (87,000) | - | (2,037,791) |
| 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | **10,886,344** | **7,414,655** | **18,115,624** | **141,450** | **36,558,073** |
| **2012 திசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி** | **5,430,977** | **5,190,060** | **2,544,712** | **-** | **13,165,749** |
| 2011 திசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி | 750,636 | 6,673,174 | 4,945,076 | - | 12,368,886 |

| | 31.12.12 ஆம் திகதி அன்றுள்ளவாறு ரூபா | 31.12.11 ஆம் திகதி அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|
| **2 காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகளும் ஏனையவையும்** | | |
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | |
| வாடகையும் மின்சார வைப்புகளும் | **11,088,660** | 8,728,590 |
| **நடைமுறையிலுள்ள சொத்துகள்** | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | **976,651,187** | 1,189,577,848 |
| நிலையான வைப்புகள் மீதான முதலீடு | **534,000,000** | - |
| அரசாங்க பிணையங்களிலிருந்தும் நிலையான வைப்புகளிலிருந்தும் கிடைக்கக் கூடிய வட்டி | **44,445,385** | 31,884,906 |
| பெறத்தக்க செஸ் வரி | **60,000,000** | 50,000,000 |
| வங்கியிலுள்ள நிலுவை | **371,899** | 28,457 |
| கழி: | | |
| காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | **4,537,667** | 3,834,935 |
| | **1,610,930,804** | 1,267,656,277 |
| **மொத்த சொத்துக்கள்** | **1,622,019,464** | 1,276,384,867 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.11 அன்றுள்ள வாறு மீள்குறிப்பிடப் பட்டது ரூபா |
|---|---|---|---|
| **3** | **பொருட்பதிவேடுகள்** | | |
| | அச்சிடுதல், காகிதாதிகள் கணனிப் பாகங்கள் | **303,083** | 175,871 |
| | முத்திரைகள் | **88,055** | 7,260 |
| | | **391,138** | 183,131 |
| **4** | **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| | வைப்புகள் | **172,122** | 187,870 |
| | ஏனைய பெறத்தக்கவைகள் | **114,597** | 146,911 |
| | பிடித்து வைத்த வரி அறவீடுகள் | **1,049,296** | 1,055,865 |
| | பெறுமதி கூட்டப்பட்ட வரி கட்டுப்பாடு | **502,748** | 1,182,959 |
| | பணியாளர் கடன்கள் * | **3,923,116** | 3,668,481 |
| | முற்பணமும் முன் கொடுப்பனவுகளும் | **3,038,082** | 821,104 |
| | பொருளாதார சேவைக் கட்டணங்கள் | **90,815** | - |
| | நிலையான சொத்துகள் கொள்வனவிற்கான முற்பணம் | **85,000** | - |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | **4,537,667** | 3,834,935 |
| | | **13,513,443** | 10,898,124 |
| | ***பணியாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள்** | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்றுள்ளவாறு நிலுவை | **3,668,481** | 4,025,086 |
| | ஆண்டுகாலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | **2,942,391** | 2,305,239 |
| | | **6,610,872** | 6,330,325 |
| | ஆண்டுகாலப்பகுதியில் மீள் கொடுப்பனவு | **(2,687,756)** | (2,661,844) |
| | 2012 திசம்பர் 31 உள்ளவாறான நிலுவை | **3,923,116** | 3,668,481 |
| **5** | **காசும் காசுக்கு சமனானவைகளும்** | | |
| | **வங்கிகளிலுள்ள காசு** | | |
| | இலங்கை வங்கி | **1,530,608** | 185,159 |
| | கையிலுள்ள காசு | **-** | - |
| | | **1,530,608** | 185,159 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.11 அன்றுள்ளவாறு மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| **6** | **காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்** | | |
| | ஆரம்ப நிலுவை | **1,276,384,867** | 1,011,810,110 |
| | இவ்வருடத்தில் கிடைத்த செஸ் | **236,534,917** | 216,837,328 |
| | திறைசேரி உண்டியல் முதலீடு மீதான வட்டி | **47,865,987** | 44,927,884 |
| | ரெப்போ மற்றும் அழைப்பு கணக்கு மீதான வட்டி | **87,316,447** | 35,463,880 |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி | **696,541** | - |
| | | **1,648,798,759** | 1,309,039,202 |
| | கழிக்க: | | |
| | செயற்பாட்டு செலவுகளுக்கான மாற்றங்கள் | **19,295,177** | 30,132,344 |
| | மூலதன செலவுகளுக்கான மாற்றங்கள் | **7,459,488** | 2,502,591 |
| | மொத்த மாற்றங்கள் - காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் | **26,754,665** | 32,634,935 |
| | வங்கி கட்டணங்கள் | **24,630** | 19,400 |
| | | **26,779,295** | 32,654,335 |
| | இறுதி நிலுவை | **1,622,019,464** | 1,276,384,867 |
| **7** | **மாணியங்கள்** | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | **12,368,887** | 15,906,644 |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகள் | **7,459,488** | 2,502,591 |
| | கழி: வருடத்தில் கணக்கிணக்கம் செய்யப்பட்டவை | **(6,662,626)** | (6,040,348) |
| | வருட இறுதியில் நிலுவை | **13,165,749** | 12,368,887 |
| | **குறிப்பு - மாணியங்கள் இனங்காணல்** | | |
| | இ.க.த. 20 இன் பிரகாரம் மாணியங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. பின்வரும் விகிதங்களில் வருமானக் கூற்றில் மாணியங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. | | |
| | மோட்டார் வாகனம் | **25%** | |
| | அலுவலக உபகரணம் - ஏனையவையும் ஈடிபியும் | **25%** | |
| | தளபாடம் பொருத்துகளும் இணைப்புகளும் | **12.5%** | |
| **8** | **ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள்** | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | **1,833,909** | 1,444,533 |
| | ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட ஏற்பாடு | **55,536** | 703,074 |
| | (-)ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவு | **-** | (313,698) |
| | வருட இறுதியில் நிலுவை | **1,889,445** | 1,833,909 |
| **9** | **ஏனைய நடப்பு பொறுப்புகள்** | | |
| | திரட்டிய செலவினங்கள் | **8,077,508** | 4,623,888 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.சே.நி. | **489,052** | 346,249 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.ந.நி. | **73,359** | 51,938 |
| | கொடுக்க வேண்டிய PAYE மற்றும் பிடித்துவைத்த வரி | **84,130** | 52,191 |
| | ஏனையவை | **94,096** | 88,220 |
| | | **8,818,145** | 5,162,486 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.11 அன்றுள்ளவாறு மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|
| **10 வருவானம்** | | |
| காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து வருடாந்த கட்டணம் | **61,044,774** | 34,578,544 |
| பதிவும் புதுப்பித்தல் கட்டணங்களும் | **4,729,393** | 3,050,000 |
| | **65,774,167** | 37,628,544 |
| **11 ஏனைய வருமானம்** | | |
| வாகன கடன் மீதான வட்டி | **31,086** | 48,055 |
| துயரக் கடன் மீதான வட்டி | **94,812** | 102,196 |
| வெளியீடுகளின் விற்பனை | **-** | 49,875 |
| நீக்கங்களின் இலாபம் | **-** | 172,023 |
| நானாவித வருமானம் | **46,788** | 43,097 |
| | **172,686** | 415,246 |
| **12 செலவினம் மீதான வருமானம் மிகை / (குறை)** | | |
| **பின்வருபவை உள்ளடங்களான அனைத்து செலவுகளும் விதிக்கப்பட்ட பின்னர் ஆண்டுக்கான பற்றாக்குறை கொண்டுவரப்பட்டுள்ளது** | | |
| பதவியினர் சம்பளங்கள் | **24,881,974** | 18,504,115 |
| ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. | **3,869,453** | 2,806,072 |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | **55,536** | 703,074 |
| பதவியினர் பயிற்சி - வெளிநாடு | **6,290,475** | 3,087,200 |
| உள்ளூர் உசாவுகைகள் | **100,000** | 614,167 |
| வெளிநாட்டு உசாவுகைகள் | **666,444** | 719,121 |
| கணக்காய்வாளரின் ஊதியங்கள் | **375,000** | 585,252 |
| பெறுமானத் தேய்வு | **6,582,865** | 6,237,563 |
| தலைவியின் செலவுகள் - படி | **900,000** | 457,500 |
| தலைவியின் செலவுகள் - எரிபொருள் | **317,520** | 268,920 |
| பணிப்பாளர்களின் வாகனப் படி | **3,850,000** | 1,767,419 |
| சபை உறுப்பினர்களுக்கான வருகைக் கட்டணம் | **494,547** | 500,797 |
| பொது மக்கள் விழிப்புணர்வு | **4,281,143** | 3,318,217 |
| வங்கி அறவீடுகள் | **125,629** | 73,534 |
| பற்று வரி | **-** | 25,816 |
| **13 பணியாளர் செலவுகள்** | | |
| சட்டம் | **10,028,637** | 7,593,164 |
| மேற்பார்வை | **12,100,916** | 11,563,369 |
| புலனாய்வுகள் | **6,612,549** | 5,746,372 |
| சந்தை அபிவிருத்தியும், வெளியக உறவுகளும் | **3,330,622** | 1,646,540 |
| நிதியும் நிர்வாகமும் | **16,589,066** | 9,513,963 |
| | **48,661,790** | 36,063,408 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.11 அன்றுள்ளவாறு மீள் குறிப்பிடப்பட்டது ரூபா |
|---|---|---|
| **14 தொழில்சார் விதிப்பனவுகள்** | | |
| உள்ளூர் உசாவுகைகள் | **100,000** | 867,167 |
| வெளியூர் உசாவுகைகள் | **666,444** | 466,121 |
| ஏனையவை | **227,961** | 286,496 |
| | **994,405** | 1,619,784 |
| **15 செயற்பாட்டு செலவுகள்** | | |
| சட்டம் | **11,579,640** | 9,493,344 |
| மேற்பார்வை | **10,917,675** | 9,246,637 |
| புலனாய்வுகள் | **8,444,642** | 6,848,294 |
| சந்தை அபிவிருத்தியும் வெளியக உறவுகளும் | **3,861,266** | 3,384,915 |
| நிதி மற்றும் நிர்வாகம் | **9,139,702** | 7,594,529 |
| | **43,942,925** | 36,567,719 |

**16. வரி விதிப்புகள்**

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணனியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

**16.1 இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல் மீதான அரசாங்க பிணையங்கள் மீது பிடித்து வைத்தல் வரிக்கான கோட்பாட்டுக் கடன்**

2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்களிலிருந்த வட்டி வருமானத்திற்கு அதாவது குறிப்பிட்ட மதிப்பீட்டு ஆண்டில் சபையின் வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானம் இருக்கும் பட்சத்தில் கோட்பாட்டு வரி கடன் ஒன்றை பெறுவதற்கு சபைக்கு உரித்துண்டு.
அதற்கமைவாக, அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிருந்து சபை பெற்ற தேறிய வருமானம், நிதி கூற்றுகளில் ஒட்டு மொத்தமாகக் கணிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டிற்கான கோட்பாட்டு வரி கடனாக ரூபா 192,805/55 இற்கான தொகை 2012 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ளது.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

**17. மீள் கூற்றுகள்**

நடப்பு ஆண்டில் இனங்காணப்பட வேண்டிய ரூபா 2,870,000/- இற்கான பதிவு கட்டண புதுப்பித்தல் வருமானம், கடந்த ஆண்டின் போது இனங்காணப்பட்டதால் ஒப்பீட்டு இலக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்தின. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 8 இன் கணக்கீட்டு கொள்கைகள், உத்தேச மதிப்பீடு மற்றும் தவறுகளின் கணக்கீட்டு மாற்றங்களுக்கு அமைவாக சீராக்கம் செய்யப்பட்டன. அதற்கமைவாக, சபையின் வருமானம் ரூபா 2,870,000/- ஆக வீழ்ச்சியடைந்த அதே நேரம் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டிய தொகை அதிகரித்தது. அவ்வாறே முற்பணத்திற்கான வரவும் அதிகரித்தது.

**18. மூலதனக் கடப்பாடுகள்**

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மூலதன் கடப்பாடுகள் எவையுமில்லை.

**19. அவசர தேவைக்கான பொறுப்புகள்**

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அவசர தேவைக்கான பொறுப்புகள் எவையுமில்லை.

**20. அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்**

நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடும் காலத்திற்கு பின்னர் எவ்வித சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**21. தொடர்புடையவர்களின் வெளிப்படுத்தல்கள்**

திருமதி இந்ராணி சுகததாச (தலைவி) திரு. பி. டி. டபிளியு. ஏ. சில்வா, திரு. டி. கே. ஹெட்டியாராச்சி (வெளியிலிருந்துவரும் அங்கத்தவர்கள்).

திரு. ஜி. குணவர்தன, திரு. நவாஸ் ரஜாப்டீன் மற்றும் காமினி ஹோன்ன (அங்கத்தினர்கள்) ஆகியோர் 2012 இன் ஆண்டு முழுவதும் சபையில் பணியாற்றினர்.

திரு. டி. விதானகமாச்சி சபையின் அங்கத்தினர் பதிவியிலிருந்து நீங்கினார். திரு. ஆர். ஆட்டிகல 2012 மாரச் 23 இல் கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

| அங்கத்தினர் பெயர் | தொடர்புடைய நிறுவனங்களின் பெயர் | பதவி |
|---|---|---|
| திருமதி இந்ராணி சுகததாச | களுபோவிட்டியான தேயிலை ஆலை லிமிடட் | பணிப்பாளர் |
| திரு. பி.டி.டப்ளியு.ஏ. சில்வா | இலங்கை வங்கியாளர் நிறுவனம்<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>அபி வெனுவென் அபி முகாமைத்து சபை<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம் | தலைவர்<br>தலைவர்<br>சபை அங்கத்தினர்<br>ஆணையத்தின் அங்கத்தினர் |
| திரு. டி. விதானகம்மாச்சி | இலங்கை தொலைத் தொடர்பு<br>இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்<br>பிரதேச அபிவிருத்தி வங்கி<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம் | பணிப்பாளர் (30/05/2012 வரை)<br>தலைவர் (28/01/2012–10/08/2012)<br>பணிப்பாளர் (30/05/2012 வரை)<br>ஆணையத்தின் அங்கத்தினர் (30/05/2012 வரை) |
| திரு. எஸ்.ஆர் ஆட்டிகல | இலங்கை துறைமுக அதிகார சபை<br>இலங்கை வங்கி<br>உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை<br>விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம்<br>பேராதனை பல்கலைக்கழகம் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>சபை அங்கத்தினர்<br>சபை அங்கத்தினர் |
| திரு.டி.கே. ஹெட்டிஆரச்சி | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம்<br>இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரப்படுத்தல் கண்காணிப்பு சபை | சபை அங்கத்தினர்<br>சபை அங்கத்தினர் |
| திரு. ஜி குணவர்தன | ஹேண்டஸ் இன்டர்நஷனல் (பிரை) லிமிடட்<br>ஹேண்டிஸ் டிப்பிங்ஸ் (பிரை) லிமிடட்<br>கிளோபல் இன்மேட்ஸ் (பிரை) லிமிடட்<br>பொலி கிளவுஸ் லங்கா (பிரை) லிமிடட்<br>டக்கிஸ் பேக் மணுபசரிங் கம்பனி (பிரை) லிமிடட்<br>ட்ரொபிகல் பி(f)ஸ் லங்கா (பிரை) லிமிடட்<br>21 செனட்சுவரி ஹோம்ஸ் (பிரை) லிமிடட்<br>லங்கா லெசர் ரிசோர்ட் (பிரை) லிமிடட்<br>கிட்கெயர் ஹோம் & ரெசிடன்ட் ஸ்கூல்<br>டிரஸ்ட் (பிரை) லிமிடட்<br>எட்ஜ் லெசர் ஹோல்டிங்ஸ் (பிரை) லிமிடட்<br>ஹேன்ட்ஸ் ஒன் அட்வடைசிங் (பிரை) லிமிடட்<br>நேச்சர்ஸ் பரடைஸ் ரிசோர்ட் (பிரை) லிமிடட்<br>ஹேண்ட்ஸ் புட்(f) & பீவரேஜஸ் (பிரை) லிமிடட்<br>மன்னார் ரிபைனரிஸ் (பிரை) லிமிடட்<br>எக்ஸ்போர்டர்ஸ் அசோசியேசன் ஒப் சிறி லங்கா<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம் | தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>ஆணையத்தின் அங்கத்தினர் |
| திரு. நவாஸ் ரஜாப்டீன் | ரஜாப்டீன் & சன்ஸ் லிமிடட்<br>ஏற்றுமதி அபிவிருத்தி சபை | முகாமைத்துவ பணிப்பாளர்<br>சபை அங்கத்தினர் |
| திரு. காமினி கோஹன்ன | புலஸ்தி எக்ஸ்போர்ட்ஸ் (பிரை) லிமிடட் | முகாமைத்துவ பணிப்பாளர் |

ஆண்டின் போது சொல்லப்பட்ட நிருவனங்களுடன், சந்தை வீதங்களிலான சாதாரண வியாபார நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் பதிவு செய்யப்படவில்லை.

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | එප්පී/ஐ/ஐபீஎஸ்எல் 2/2012 | |
| ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | |
| දිනය<br>திகதி<br>Date | 2013 ஆகஸ்ட் 06 | |

தலைவர்
இலங்கை காப்புறுதிச் சபை

**இலங்கை காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலவரக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2013 யூன் 05 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2003 நவம்பர் 12 ஆந் திகதிய 19 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இலாபம் பெறுகின்ற நிறுவனம் மிகையூதியக் கொடுப்பனவாக ஒருவருக்கு ரூபா 1,000 செலுத்தக்கூடியதாக இருந்த போதிலும் சபையினால் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக மிகையூதியக் கொடுப்பனவாக ரூபா 94,000 தொகை கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக ரூபா 3,717,751 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அரச பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினால் 2011 மே 01 ஆந் திகதி தொடக்கம் வாகனக் கடன் வழங்கும் போது அறவிடவேண்டிய வட்டி 4.2 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முன்னரான விளைவுகள் ரூபா 19,056,965 ஆன பற்றாக்குறையானதுடன், அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,251,414 ஆக இருந்தமையினால் நிதிப்பெறுபேற்றில் ரூபா 8,194,449 தொகை அல்லது 30 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது சபையின் இனங்காணப்பட்ட மானியம் 76 சதவீதத்தினாலும் வட்டி வருமானம் 1.234 சதவீதத்தினாலும் அதிகரித்தமை மற்றும் தகைமைக் கட்டணங்கள் 39 சதவீதத்தினால் குறைவடைந்தமை இந்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்குத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டியிருந்த செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறைப்பாட்டு விசாரணைகளுக்குத் தேவையான வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காப்புறுதி கட்டுப்பாட்டாளரினால் 1987 இன் போது வழங்கப்பட்ட பிரமாணங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நட்டத்தை ஈடுசெய்வதற்கும் காப்புறுதி முகவர்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்கமைப்பு படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆண்டின் போது உள்நாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 811,321 தொகையான செலவினம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 756,321 தொகை அல்லது 93 சதவீதம் நலன்புரி நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் காப்புறுதிப் பிரிவுகளின் பயிற்சி நடவடிக்கைகளில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) மேற்பார்வைக்கான முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ரூபா 2.5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் நிருவாகம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையில் 05 நிறைவேற்றுப் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. அதில் 02 நிறைவேற்றுப் பதவிகள் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது.

# கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**4.3 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சம்பளத் திருத்தத்திற்காக பொருத்தமான முறைமைகளைப் பின்பற்றாமல் சபையின் சம்பளத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சபையின் சம்பளத்திருத்ததைச் செய்வதற்கான அவசியத்தின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீத உச்ச எல்லையின் கீழ் திருத்தங்களைச் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட 2012 யூலை 18 ஆந் திகதிய பீஈடீ 360/12/2(ii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பள அதிகரிப்பு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி 06 மாதத்திற்காக சபையினால் ரூபா 1,564,338 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2009 திசெம்பர் 27 அந் திகதிய எம்எப்2/4/ஐபீஎஸ்எல்/ஜீஈஎன் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஊக்கவிப்புக் கொடுப்பனவு முறைமை தயாரித்து சமர்ப்பிக்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 30 ஆந் திகதி வரையும் ஊக்குவிப்பு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 2011 ஆம் ஆண்டில் மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் பெறப்படாத விடுமுறை நாட்களுக்காக 25 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,280,660 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டுகளின் போது மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினங்களுக்கான கொடுப்பனவின் போது உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட சுகையீன விடுமுறைகளுக்கான படிகள் செலுத்தும் போது சபையினால் தயாரிக்கப்பட்ட நிர்வாகக் கைநூலில் குறிப்பிடப்பட்ட முறைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாமையினால் ரூபா 259.556 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் விடுமுறை தினக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது அடிப்படைச் சம்பளத்திற்குப் பதிலாக அண்ணளவான சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் சபை மேலதிகமாகச் செலுத்திய ரூபா 580,841 கூட்டுத்தொகையினை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 திசெம்பர் 09 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை இலக்கம் 11 இன் பிரகாரம் மூன்றாவது தரப்பினரின் இழப்பீடு செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து முறையான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து அனுப்புமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் போதியளவான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பும் நல்ல ஆளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 55 சதவீதம் தொடக்கம் 234 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் நிறுவனம் தயாரித்திருந்த பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொடுப்பனவு

(ஆ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



**எச்.ஏ.எஸ்.சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுதப்பட்ட விடயங்களுக்கு, சபையின் பதில்கள்

| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | காப்புறுதிச் சபையின் பதில்கள் |
|---|---|
| **2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்க** | |
| 2003, நவம்பர் 12 இன் 19 ஆம் இல. முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக, நட்டத்தை உருவாக்கும் நிறுவனங்கள், ஆள் ஒருவருக்கு ரூபா 1,000 ஐ போனஸ் ஆக வழங்க வேண்டும். ஆயினும் 2010, 2011 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 94,000 தொகையை செலுத்தியுள்ளது. மொத்தமாக இக்கொடுப்பனவுகள் ரூபா 3,717,751 ஆகவிருந்தது | இலங்கை காப்புறுதி சபை, இலாபமீட்டும் நிறுவனம் ஒன்றாக அன்றி, காப்புறுதி தொழிலை ஒழுங்கமைப்பு செய்யும் விசேட தேவைக்காக பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்டது. எனவே, முகாமைத்துவ சுற்றறிக்கைகளின் கீழ் நட்டத்தை உருவாக்கும் நிறுவனமொன்றாக இலங்கை காப்புறுதி சபையை வகைப்படுத்துவது பொருத்தமானதாக அமையாது.<br><br>ஏனைய ஒழுங்கமைப்பு நிறுவனங்களைப் போலவே, இலங்கை காப்புறுதி சபையும், அதன் சபையின் அங்கீகாரத்துடனும், நிதியும் திட்டமிடலும் அமைச்சு 2009 டிசம்பர் 27 ஆம் திகதியிட்ட அதன் கடிதத்தில் அளித்துள்ள சம்மதத்துடனும் போனஸ் வழங்கியுள்ளது. |
| **2.2.2 போதிய அதிகாரங்களினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கள் வாங்கல்கள்** | |
| பொது தொழில் முயற்சியாளர் திணைக்களத்தின் அங்கீகார மின்றி, பணிப்பாளர் சபையினால் 2011 மே மாதம் 01 திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, மோட்டார் வாகன கடன்களின் முழுதான வட்டி அறவீடுகள் 4.2 சத வீதத்தினால் குறைக்கப்பட்டது. | 2011 மே 02 ஆம் திகதி நடைபெற்ற 103 ஆம் இல. சபை கூட்டத்தில். சந்தையின் வட்டி வீதங்களை கருத்தில் கொண்டு 7.2% இலிருந்து 4.2% மாக வாகன கடன் வட்டி வீதத்தை குறைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>நிதியும் திட்டமிடலும் அமைச்சின் அங்கீகாரத்திற்காக ஏலவே அனுப்பப்பட்டுள்ள புதிய நிர்வாக கையேட்டில் வட்டி வீதம் 4.2% மாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இது போன்ற ஏனைய ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களும், இந்த வட்டி வீதத்தையே பிரயோகிப்பதை நாங்கள் அறியக் கூடியதாயிருந்ததுடன், சொல்லப்பட்ட வீதத்திற்கு நிதியும் திட்டமிடலும் அமைச்சு எவ்வித எதிர்பையும் தெரிவிக்கவுமில்லை. |
| **3. நிதியியல் மீளாய்வு** | |
| **3.1 நிதிப் பெறுபேறுகள்** | |
| மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின்போது, சபையின் செயற்பாடுகளின் விளைவுகள் இதற்கு முந்திய ஆண்டின் வரிக்கு முந்திய பற்றாக் குறையான ரூபா 27,251,414 உடன் ஒப்பிடும் போது இப்போதைய பற்றாக்குறை ரூபா 19,056,965 ஆகக் காணப்பட்டது. இது மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின் நிதியியல் பெறுபேறாக ரூபா 8,194,449 அல்லது 30 சதவீத முன்னேற்றத்தைக் சுட்டிக்காட்டியது.<br><br>முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, சபையினால் அடையாளம் காணப்பட்ட மாணியங்கள் மற்றும் வட்டி வருமானத்தின் அதிகரிப்பு முறையே 76% மாகவும் 1,234% மாகவும் காணப்பட்டது. அத்துடன் இம் முன்னேற்றத்தின் தாக்கம் தொழில்கள் கட்டணத்தை 39 இனால் குறைவடையவும் செய்தது. | மீள் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்கள் 2011 ஆம் ஆண்டிற்கானதாக கொள்ளப்பட வேண்டும். தங்களின் கணக்கீட்டிற்கு அமைவாக, 2011, 2012 ஆண்டுகள் இரண்டிற்குமான வருமானமாக ரூபா 2,870,000/- விற்கான வருமானத் தொகையாக இது காட்டப்பட்டுள்ளதனால், இது இருமுறை கணக்கிடப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கமைய வருடாந்தக் கட்டணங்கள், வட்டி வருமானம் மற்றும் மானியங்கள் என்பவை முறையே 75%, 1234% மற்றும் 10% மாக அதிகரித்த அதேநேரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, ஏனைய வருமாங்கள் 58% இனால் குறைவடைந்தன. |

# கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுதப்பட்ட விடயங்களுக்கு, சபையின் பதில்கள்

| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | காப்புறுதிச் சபையின் பதில்கள் |
|---|---|
| **4. செயற்பாட்டு மீளாய்வு** | |
| **4.1 செயலாற்றல்கள்** | |
| 2012 ஆம் ஆண்டின், வருடாந்த நடவடிக்கை திட்டத் திற்கு அமைவாக, மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில், நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் மீது, பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன. | |
| (அ) முறைபாடுகளுக்கான புலனாய்வுகளுக்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | (அ) குறைபாடுள்ள புலனாய்வு செய்வதற்கான வழிகாட்டல் ஒன்றை ஏற்கனவே புலனாய்வுப் பிரிவு தயாரித்துள்ளதுடன், தற்போது அது மீளாய்வின் கீழ் உள்ளது. 2013 இன் இரண்டாவது காலாண்டின் போது இந்த வரைபு வழிகாட்டல் பூர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) 1987 ஆம் ஆண்டில் காப்புறுதி கட்டுபாட்டாளரினால் வழங்கப்பட்ட விதிகள் திருத்தப்படவில்லை. | (ஆ) சொல்லப்பட்ட விதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தாயினும், சட்டப்பிரிவில் இருந்து அனுபவமிக்க சட்ட அதிகாரிகளின் பதவி விலகல்களும் பதிய ஆட்சேர்ப்புகளும் அதே ஆண்டில் இடம் பெற்றதன் காரணமாக சட்டப் பிரிவினால் இந்த வேலையை பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே, 2013 இன் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த வேலையும் உள்ளடக்கப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டின்போது, பூர்த்தி செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) நட்டத்தை சீரமைப்பவர்களையும், காப்புறுதி முகவர்களையும் பதிவு செய்வதற்கான ஒழுங்கமைப்பு மாதிரி ஒன்று தயாரிக்கப்படவில்லை. | (இ) மேலே தரப்பட்ட காரணத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது வேலையை பூர்த்தி செய்ய இயலாமல் போனதுடன், நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக 2013 இல் அதனை பூர்த்தி செய்ய முடியுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஈ) நிதிக் கூற்றுகளில், ரூபா 811,321 தொகை உள்ளூர் பயிற்சிகளுக்கான செலவினமாகக் காட்டப்பட்டிருந்தாலும், இந்த தொகையின் ரூபா 756,321 அல்லது 93 வீதம் நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. எனவே காப்புறுதி துறையின் பயிற்சிக்கென சபை தனது கவனத்தை செலுத்தவில்லை. | (ஈ) ஆண்டின்போது, ஏனைய உள்நாட்டு பயிற்சித் திட்டங்களுக்கும் என ரூபா 811, 321/- ஐ சபை செலவு செய்தது. காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் குறைவாக இருந்த காரணத்தினால், இத்தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக, வெளிநாட்டு பயிற்சிகளுக்கு காப்புறுதி சபையின் அதிகாரிகளை அனுப்புவதால் சபை விசேட கவனம் செலுத்தியது. 2012 ஆம் ஆண்டில் காப்பறுதி தொடர்பான பயிற்சிகளுக்கு, மொத்தமாக ரூபா 4,042,870/- செலவிடப்பட்டது. விசேடமாக, உள்நாட்டின் பயற்சிகளை காப்புறுதி துறைக்கு என மட்டுப்படுத்தவது பொருத்தமானதல்ல. |
| **4.2 பதவியினரின் நிர்வாகம்** | |
| (அ) கண்காணிப்பு பிரிவிற்கு முகாமைத்துவ தகவல் முறைமையை மேற்கொள்வதற்காக ரூபா 2.5 மில்லியனுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாயினும், இந்த வேலை நிறைவேற்றபபடவில்லை. | (அ) முகாமைத்தவ தகவல் முறைமையை (MIS) நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 2012 இன் போது பூர்வாங்க பரீட்சைகள் நடத்தப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டிலும் மிகுதி வேலைகள் தொடர்ந்தன. மேலும், "MIS" தொழில் தொழில்சார்ந்த நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்வதனூடாக, தரமுயர்ந்த செயற்பாட்டை உள்ளிணைத்துக் கொள்ளும் என்பதுடன், சபையின் பிரிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையில் 05 நிறைவேற்று அதிகாரமுள்ள பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றதுடன், ஆண்டின் ஆரம்பத்திலிருந்து, இவற்றில் 02 நிறைவேற்றதிகாரமுள்ள பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன.. | (ஆ) ஆண்டின் ஆரம்பத்திலிருந்த இரண்டு பதவி வெற்றிடங்களும், ஆண்டின் போது அவற்றிற்கான தேவைப்பாடு இன்மையினால் நிரப்பப்படவில்லை. எஞ்சியுள்ள மூன்று நிறைவேற்றதிகாரமுள்ள பதவிகளுக்குமான அதிகாரிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர், என்பதுடன், அடுத்து வரும் மாதத்தில் பதவியில் அமர்த்தப்படுவார்கள். |

# கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுதப்பட்ட விடயங்களுக்கு, சபையின் பதில்கள்

| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | காப்புறுதிச் சபையின் பதில்கள் |
|---|---|
| **4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்** | |
| (அ) சம்பளங்களை மீள்திருத்துவதற்குரிய விசேட முறைப்படுத்தலை பின்பற்றாது, சபை சம்பளங்களை அதிகரித்துள்ளது. அடிப்படைச் சம்பளத்தின் அதி உச்சமாக 25 வீதத்தை சபையின் தேவைகளுக்கென, சம்பளத்தை மீளத்திருத்துவுதற்கு தடையில்லை என்ற குறிப்புடன் நிதியும் திட்டமிடலும் அமைச்சின் திறைசேரிக்கான பிரதி செயலாளரின் 2012 ஜூன் 18 திகதியிட்ட இல். பிஇடி 360/12/2 (ii) கடிதத்தின் அடிப்படையில் சம்பளங்கள் மீளத்திருத்தப்பட்டுள்ளன. சபையினால், ரூபா 1,564,438 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. | (அ) பணியாளர்களின் ஊதியங்களையும் படிகளையும் தீர்மானிப்பதற்கு, சபையின் அங்கத்தினர்களுக்கு காப்புறுதி சட்டத்தினால் அங்கீகாரம் தரப்பட்டுள்ளது. அனேக சந்தர்ப்பங்களில் இது கணக்காய்விற்கும் அனுப்பப்பட்டது.<br>நிதியும் திட்டமிடலும் அமைச்சின் செயலாளரிடமிருந்து முன் அனுமதியைப் பெற்ற பின்னர், 2012 ஜூலை 01 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு பணியாட்களின் சம்மபளங்களை 25% இனால் IBSL அதிகரித்தது. திறைசேரியின் பிரதி செயலாளர், சபையின் வெளியிலிருந்து வரும் அங்கத்தினராக இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.<br>2005 இல், சபை நிறுவப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகளில், செய்யப்பட்ட முதலாவது சம்பள திருத்தம் இதுவாகும். அத்துடன் கேட்கப்பட்டுள்ளவாறு மிகையான கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை என்பதுடன், முறையான அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னரே எவ்வித அதிகரிப்பும் ஊதியங்களில் கொடுப்பனவு செய்யப்படவில்லை. |
| (ஆ) செயற்றதிறனை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு திட்டமொன்றை தயாரித்து, வழங்கவேண்டும் என நிதியும் திட்டமிடலும் அமைச்சின் திறைச்சேரிக்கான பிரதி செயலாரின் 2009 டிசம்பர் 27 திகதியிட்ட இல. எம்எப்/2/4 ஐபிஎஸ்எல்/ ஜிஇஎன் கடிதத்தில் சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பினும், 2013 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும், திறைச்சேரியின் அங்கீகாரத்திற்கென ஊக்குவிப்புத் திட்டமொன்று தயாரிக்கப்படவும், வழங்கப்படவும் இல்லை. | (ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்பு முறைமையோன்றை IBSL நடைமுறைப் படுத்தியுள்ளது. 2010.11.25 அன்று திறைசேரிக்கு செயலாற்றல் மதிப்பீட்டு மாதிரியின் பிரதி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) 2011 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, போனசாகவும், எடுக்கப்படாத லீவிற்கான அலவன்சுகளாகவும், 25 அதிகாரிகளுக்கு மொத்தமாக ரூபா 2,280,660 இற்கான தொகையை சபை கொடுப்பனவு செய்திருப்பினும், அதற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்படவுமில்லை, உள்நாட்டு இறைவரியின் ஆணையாளர் நாயகத்தரிற்கு அனுப்பப்படவுமில்லை. | (இ) 2012 இன் போது வரிகள் ஏற்ற சமயத்தில் செலுத்தப்பட்டுள்ளன. |
| (ஈ) சபையினால் தயாரிக்கப்பட்ட நிர்வாக கையேட்டின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 2011 ஆம் ஆண்டின் எடுக்கப்படாத சுகவீன லீவுக்கான கொடுப்பனவு செய்யப்படவில்லை. ஆயினும் மொத்த மேலதிகமான கொடுப்பனவாக ரூபா 259, 556 செய்யப்பட்டுள்ளது. | (ஈ) நிர்வாக கையேட்டின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 2012 ஆம் ஆண்டிற்கான பயன்படுத்தப்படாத சுகயீன லீவுக்கான காசாக்குதல் ஏற்றவாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (உ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் பயன்படுத்தப்படாத லீவுக்கான அலவன்சாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 580,841 மிகை கொடுப்பனவு, அடிப்படை சம்பளத்திற்கு மாறாக மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இது 30 ஜூன் 2013 ஆகியும் அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படவில்லை. | (உ) காப்புறுதி சபையின் நிர்வாக கையேட்டின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 2012 ஆம் ஆண்டின் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படாத லீவுக்கான காசாக்குதல் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஊ) 2010 டிசம்பர் 09 அன்று பொது முயற்சியாளர்கள் கமிட்டியில் செய்யப்பட்ட 11 ஆம் இல. பணிப்புகளுக்கு அமைவாக, மூன்றாந் தரப்பினர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளுக்கு, ஒரு முறைமையான நடைமுறையாக, மோட்டார் Traffic ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரை யாடல் ஒன்றை மேற்கொண்டு அவை தயாரிக்கப்பட வேண்டும். ஆயினும் மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில் இது தொடர்பாக, போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | (ஊ) 2012 நவம்பர் 12 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான கமிட்டி (COPE) கூட்டத்தில், இது தொடர்பான விளக்கமொன்று விபரமாகத் தரப்பட்டள்ளது. COPE இற்கு அளிக்கப்பட்ட அறிக்கையின் CI பிரதி ஏற்கனவே கணக்காய்விற்கு தரப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட கூட்டத்தில், மூன்றாந்தரப்பு மோட்டார் காப்புறுதி கோரிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>"கோப்" அவதானிப்புகளின் பின்தொடர் நடிவடிக்கையாக, "கோப்" இன் தலைவரினால் நியமிக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகளுடனும், காப்புறுதி சபை அனேக கலந்துரை யாடல்களை மேற்கொண்டது. காலத்திற்கு காலம் "கோப்" இன் தலைவருக்கு முன்னேற்றங்கள் தெரிவிக்கப்பட்டன. |

# கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுதப்பட்ட விடயங்களுக்கு, சபையின் பதில்கள்

| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | காப்புறுதிச் சபையின் பதில்கள் |
|---|---|
| **5. பொறுப்பேற்றலும், நல்லாட்சியும்** | |
| **5.1 வரவு செலு திட்ட கட்டுப்பாடு** | |
| மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில், செலவீடுகளுக்கான வரவு செலவிற்கும், உண்மையான செலவிற்கும் இடையில் 55 வீதத்திலிருந்து 234 வீதத்திற்கு இடையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எனவே அதன் நிருவனத்தினால் தயாரிக்கப்பட்ட வரவ செலவுத்திட்டம் நிதியியல் முகாமைத்துவ கட்டுப்பாட்டை திறமையாகப் பயன்படுத்தவில்லை. | காப்புறுதி சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளியக காரணிகள் தொடர்பாக, இடம்பெற்ற மாற்றங்களின் காரணமாக, அனேகமான செலவினங்களில் மாறுபாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறாயினும், இத்தகைய வேறுபாடுகளை கருத்தில் கொண்டு, 2013 ஆம் ஈண்டிற்கான வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| **6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | |
| கணக்காய்வின் போது ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள், காலத்திற்கு காலம் நிருவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக, விசேட கவனம் தேவைப்படுகின்றது.<br><br>(அ) கொடுப்பனவுகள்<br>(ஆ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | அவதானிக்கப்பட்டது. குறிப்பிடப்பட்டுள்ள, கட்டுப்பாட்டு பகுதிகள் மீது விசேட கவனம் அளிக்கப்படும் |

# பின்னிணைப்பு I

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 2000 இன் 43 ஆம் இல. காப்புறுதி தொழில் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள்

| இல. | காப்புறுதியாளரின் பெயர் | காப்புறுதியின் வகை |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | (முன்னால் அவிவா என்டிபி காப்புறுதி (பிஎல்சி) | பொது காப்புறுதி |
| 2 | ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 3 | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொது காப்புறுதி |
| 4 | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| 5 | அமானா டக்காபுல் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 6 | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| 7 | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 8 | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 9 | சிலிங்கோ டக்காபுல் லிமிடட் | பொது காப்புறுதி |
| 10 | கொண்டினென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொது காப்புறுதி |
| 11 | கொர்பரெடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 12 | எச்என்பி அஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 13 | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 14 | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| 15 | எல்ஓஎல்சி இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 16 | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 17 | நெசனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் பிண்ட் | பொது காப்புறுதி |
| 18 | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 19 | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 20 | சீமாசகித சனச ரக்ஷன சமாகம | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 21 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 22 | யூனியன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |

2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட்டிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# பின்னிணைப்பு II

2000ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் - 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| இல. | காப்புறுதித் தரகரின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | ஏஎம்டபிள்யு. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 2 | ஏடிஇஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 3 | எய்ட்க்ன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 4 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 5 | அலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 6 | அக்கியுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 7 | அசெட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 8 | பிரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 9 | சியக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 10 | செலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 11 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 12 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 13 | கொலம்போரே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 14 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 15 | தயா சரண இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 16 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 17 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 18 | ஈஸாஜி கரிம்ஜி & கம்பனி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 19 | ஃபின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 20 | போர்சைட் இன்ஸ்யூரன்ஸ் & ரி. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 21 | க்ளோபல் இன்சூரன்ஸ் சேர்விசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 22 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 23 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 24 | இன்டஸ்ட்ரியல் அன்ட் கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 25 | ஜே இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 26 | ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 27 | களனி யுனி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 28 | எல்எம் அன்ட் ஏ. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 29 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 30 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 31 | மக்வூட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 32 | மக்ஸ்வெல் என்டபிரைசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 33 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 34 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |

# பின்னிணைப்பு II

| | | |
|---|---|---|
| 35 | பயனியர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 36 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 37 | புரொகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 38 | புரொடெக்ஷன் அன்ட் அசூவரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 39 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 40 | ரிலையன்ஸ் இன்சூரன்ஸ் ஏஜெஜி லங்கா (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 41 | ரெலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 42 | ரின்கூன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 43 | ரோபா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 44 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 45 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 46 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கிங் சேர்விஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 47 | சதர்ன் மேர்ச்சன்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 48 | ஸ்ட்ரஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 49 | டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 50 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 51 | யுனைடட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 52 | வெரசிடி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 53 | விக்டர் இமானுவெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 54 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |

# அருஞ்சொல் விளக்கம்

**திரட்டல்**

ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் கணிசமான அளவிலான இடர்கள் ஓர் இழப்பு நிகழ்வினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுதல்.

**கையகப்படுத்தும் செலவுகள்**

புதிய காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தற்போதைய காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (உதாரணமாக, தரகுக் கட்டணங்கள்) என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதான மான அனைத்துச் செலவுகளும்.

**கணிப்பீட்டாளர்**

காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் குடிசனவியல் என்பன தொடர்பான நிகழ்தகவு மற்றும் பிரச்சினைகளுக்கான புள்ளிவிபரக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் ஒரு நிபுணர்.

**நிர்வாகச் செலவுகள்**

தவணைக் கட்டணச் சேகரிப்பு, காப்புறுதிப் பத்திர நிர்வாகம், ஆளணிச் செலவுகள், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் என்பவற்றில் இருந்து ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய நிர்வாக இயல்பைக் கொண்ட செலவுகள்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நியதி பூர்வமான கடன் தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 மாவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுதோறும் வழங்கப்படும் தொகை**

குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்மபிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட வருடாந்த கொடுப்பனவாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான வருடாந்த கொடுப்பனவு ஆகும்.

**பயனாளி**

காப்புறுதிப் பத்திரதாரரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய பயன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**இணங்குபவர்**

ஒரு மீள் காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (முதன்மை காப்புறுதிக் கம்பனி)

**கோரிக்கைகள்**

காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு**

கணக்கீட்டுக் காலத்தின்போது பணம் செலுத்தப்பட்ட அனைத்துக் கோரிக்கை களினதும் மொத்தத் தொகை, கோரிக்கைகளைக் கையாளும் செலவு களும் இதில் அடங்கும். பொருத்தமானவிடத்து, கணக்கிட்டுக் காலத்தின் ஆரம்பத்தின் போதும், முடிவின் போதும் நிலுவையிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கு செய்யப்படும் சீராக்கங்கள்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள்**

ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக் கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக் களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும்பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணை காப்புறுதி**

ஓர் நட்டஇடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதி திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப் பனவு.

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத நட்வச்சக் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

**தவணைக் கட்டண காப்புறுதி பெறுகை**

கணக்கீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் பெறப்படாத தவணைக்கட்டண ஒதுக்குகளின் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்.

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

# அருஞ்சொல் விளக்கம்

**காப்புறுதி இடர்**

காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு, காப்புறுதிக் கோரிக்கையின் அளவு அல்லது கோரிக்கைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய காலம் என்பன தொடர்பான நிச்சயமற்ற நிலை.

**மொத்த தவணைக் கட்டணம்**

கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்புறுதி வழங்குனர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழற்கப்பட வேண்டிய கொடுப்பனவுக் என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரான தாக இருக்கும்.

**காப்புறுதி வழங்குநர்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டதும், 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் ஒரு காப்புறுதி வழங்குநராக தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கும் கம்பனி.

**நீண்டகாலக் காப்புறுதி வர்த்தகம்**

மனித ஆயுள் தொடர்பான காப்பீட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதேனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப் படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**முதிர்ச்சி**

ஒரு நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் கொடுப்பனவுத் தொகை அதன் காலப் பிரிவின் முடிவின் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம்.

**நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்**

நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{நிகர கோரிக்கை கொடுப்பனவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} \times 100$$

**நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

இது காப்புறுதி வழங்குநரின் தொழிற் பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகி தத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

$$\frac{\text{நிகர கோரிக்கை செலவுகள்} \times 100}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} + \frac{\text{செலவுகள்} + 100}{\text{நிகர தவணைக் கட்டண செலவுகள்}}$$

**தேறிய தவணைப் பெறுகைகள்- பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங் களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

**தேறிய செலவு விகிதம் - பொது காப்புறுதி வர்த்தகம்**

கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

**தேறிய இழப்பு விகிதம் - பொது காப்புறுதி வர்த்தகம்**

பெறப்பட்ட தேறிய தவணைக் கட்டண வருமானத்துடன் நிகர கோரிக்கைகளை சம்பந்தப்படுத்திப் பார்ப்பதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்த பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதிகளைக் கழித்த பின்னர்).

**பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்**

சம்பந்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிதியத்தின் மிகையைப் பகிர்ந்து கொள்வதற்கு பத்திரதாரர்கள் ஒப்பந்த ரீதியான உரித்தினைக் கொண்டிராத ஆயுள் காப்புறுதி வர்த்தகம்.

**காப்புறுதிப் பத்திரம்**

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

**காப்புறுதி பத்திர வைப்பாளர்**

காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத் தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத் தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

**காப்புறுதிப் பத்திரக் கடன்**

நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதி வைப்பாளர் ஒருவருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத் திற்கு பொதுவாக வரையறுக்கப் பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**முதன்மை காப்புறுதி வழங்குநர்**

ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்திற்குப் பதிலாக, இடர்களைப் பொறுப் பேற்பதுடன், காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருடன் ஒரு நேரடி ஒப்பந்த ரீதியான தொடர்பினை வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் (தனியார், தனி நபர், நிறுவனம், அல்லது அமைப்பு)

**செயற்பாட்டு இலாபம்**

முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

**மீள் காப்புறுதி**

ஒரு தரப்பு (மீள் காப்புறுதி வழங்குநர்) ஒரு தவணைக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு, மற்றொரு தரப்புக்கு (ஆரம்ப காப்புறுதி வழங்குநருக்கு) மீள் காப்புறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களின் கீழ் ஏற்கப்பட்டிருக்கும் பொறுப்பின் ஒரு பாகத்திற்கு எதிராக அல்லது மொத்தப் பொறுப்புக்கும் எதிராக நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கு உடன்படும் ஓர் ஏற்பாடு.

**மீள் காப்புறுதி தரகுக் கட்டணம்**

மீள் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணங்கள் தொடர்பாக கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தரகுக் கட்டணம்.

# அருஞ்சொல் விளக்கம்

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

**வெளிநோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**

மீள் காப்புறுதி வழங்குநர்களினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதி வழங்குநருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**பிடித்து வைத்திருத்தல்**

காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்கா திருக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்கென வைத்துக்கொள்ளப்பட்ட தேறிய தொகை.

**கடன் தீர் எல்லை - நீண்டகால காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், (நீண்டகால காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அளவில் கீழ் நீண்டகால காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**கடன் தீர் எல்லை - பொதுக் காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடை யிலான வித்தியாசம். இது, 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையை ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2004 ஆவது விதிகளின் பிரகாரம் (பொதுக் காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் அளவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**ஒப்படைப்புப் பெறுமதி**

ஒரு காப்புறுதிப் பத்திரம் அதன் கால எல்லை முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முடிவடையும் போது ஆயுள் காப்புறுதி தொடர்பாக காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதிப் பத்திரதாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை. ஒப்படைப்புப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு காப்புறுதிப் பத்திரம் குறைந்தது மூன்று வருடகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக வலுவில் இருந்து வந்திருத்தல் வேண்டும்.

**இலாபத்திற்கான நட்ட உத்தரவாதம்**

இது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளாது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்சார் இலாபமாகும்.

**பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணம்**

இது, கிடைக்க வேண்டிய தொகைகள் என ஏற்கனவே கணக்குகளில் பதிவு செய்யப் பட்டிருந்த போதிலும். ஐந்தொகைத் திகதியை அடுத்து வரும் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய் கின்றது.

**வருவாய் ஈட்டாத தவணைகட்டன ஒதுக்கு**

ஈட்டப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு ஏற்கனவே வலுவில் இருந்து வரும் காப்புறுதிப் பத்திரங்களின் கீழ் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கோரிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு, பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரினால் பராமரிக்கப்படும் ஒரு நிதியம்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**

நிதியாண்டின் முடிவின் பின்னர், அத் திகதிக்கு முன்னர் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து தோன்றக்கூடிய கோரிக்கைகள் மற்றும் செலவுகள் என்பனவற்றின் மதிப்பிடப்பட்ட பெறு மதியை மதிப்பீடு செய்த தொகைகள். அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி பெற்றுக் கொள்ளப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஒதுக்கினை மதிப்பிட்டுக் காணப்படும் நிலை ஒத்திவைக்கப்பட்ட எவையேனும் கையகப் படுத்தப்பட்ட செலவுகளைக் கழித்த பின்னர்)

# nghJ j; j f t y; s ;

## mY t y f K f th

j s k;11> f o f; NfhGuk;
c y f th;j;j f e i yak;
nfhOk;G 1
, yq;i f
njh i yNgr : +94 11 2396184-9
njh i yefy; : +94 11 2396190
kd;d Q;r y; : infor@ibsl.gov.lk
, i z aj;j s k; www.ibsl.gov.lk

## r l ;Gh t e i y i k

2000 M k; M z L 43 M k; , y f; fhg;GWj ;j;njho y;
xOq;f i kg;G r; r l ;j ;j d ;gu fhuk; , yq;i f a y; e ak r i gahf
e Wt gg l ;J. 2001 nggu th 23 M k; j f j a 1172/27 M k; , y f;
mu rhq;f th;j khd mw t j;j i y mL j;J 2001 khh;r;01 M k;
j f j e l t b f;i f f i s Nkw;nfh z ; r l ;Gh;t khd me;j ];i j f;
nfh z ; e Wt d k; M f;gg l ;J.

## r i ga d Nehf f Kk nghWgG f f S k

fhg;GWj ahs h; s d J k; c jNj r fhg;GWj ah s h; s d J k;
e d ;i k f i s g;ghJ fhf;F k;Nehf;f j ;j y; , yq;i f a y; fhg;GWj ;j;
njho i y Neh;i kahf Tk; njho y;;rh;; mbgg i l a Y k;
t Nt f khf Tk; , yq;i f a y; fhg;GWj ;j;njho y;el j;jggL t i j
c Wj ggL j;J t J r i ga d ;Nehf;f Kk; nghWgG f; S khF k;

## f z f f l L M z L

b r kgh;31

## f z f fha t h s h f s

f z f;ha;th s h; j i y i k mj g j

## t q f ahs h f s

, yq;i f t q;f

## f z f fhaT f FO

j U. v ]; Mh; M l;b f y - j i y th;
j U. fhk d Nfh ` d ;d
j U. nkh f k l ;e t h ] ;u [ hg;B d ;



**வளருகின்றோம்**

சிறந்ததொரு பாதையில்

INSURANCE
BOARD OF SRI LANKA

M z lwf i f 2012


, yq i f fhgGWj r i g
j sk 11› f of F NfhGuk
cyf thj j f e i yak
nfhOkG 1
, yq i f

nj h i yNgr : +94 11 2396184-9
nj h i yefy : +94 11 2396190
k d d Q r y : info@ibsl.gov.lk
, i z a j j s k : www.ibsl.gov.lk


Designed & Printed by Ceylon Printers PLC